

# தொழிற்சங்கத் தலைமைகள் பொறுப்புணர்ந்து செயற்படட்டும்

ஏப்ரல் 03 - ஏப்ரல் 09, 2011 April 03 - April 09, 2011 பக்கங்கள் - 28 25.00

ஒளி
வார மலர்




## கண்முன்னால் அச்சுறுத்திய மரணம்

உண்மைச் சம்பவம்

## பற்றி எரிகிறது உலகம்

# வாடகைப் புரட்சிகள்

## ஓய்கிறது அலை

# இதை வாசிப்பது தடை செய்யப்பட்டுள்ளது

### 2009 மே 30.

''ஏன் தோற்றார்கள்'' என்பது பற்றிய விவாதம் காரா சாரமாக எமக்கிடையே சூடுபிடித்திருந்தது. அதில் ''அவர்கள்'' மக்களிடம் இருந்து தம்மைப் பிரித்து வைத்திருந்தது தான் தோற்றுப் போனமைக்குக் காரணம் என என் தரப்பு வார்த்தைகள் அனல் கக்கின. பொதுமக்களையும் ''அவர்களையும்'' பிரித்து வைத்திருந்த சொற்களைத் தேடிய பயணம் ஒன்றை அவ்விவாதத் தோல்வியில் இருந்து தொடங்கியிருந்தேன். அச் சொற்களில் சிலவற்றை அன்றைய நாள் நினைவுக் குறிப்பேட்டின் பின் மட்டையில் குறித்து வைத்திருந்தேன். அவைகள், என்னோடு முரண்பட்டு நின்ற சம்பவங்கள், இப்போதும் பழைய நினைவுக் குறிப்புக்களைப் புரட்டும் போது மறக்க முடியாதனவாகி விடுகின்றன.

முன்னைய காலத்தில் பெரு மரங்கள், தகரத்தால் அடைக்கப்பட்ட வேலிக் கதவுகள், சலூன்கள், வாகனத்தரிப்பிடங்கள் , புத்தகங்கள், காட்டு வாசல்கள், சில வீதிகள் போன்றன அச் சொற்களைப் போர்த்தியவைகளாக இருந்தன.

பார்த்தவுடனேயே அச்சம் தருவனவாயும், விலகிச் செல்லத் தூண்டுவனவாயும், அபாயம் தருவனவாயும் இவைகள் அமைக்கப்பட்டிருக்கும்.

கறுப்பு, சிவப்பு, வெள்ளை நிறங்கள் பயமுறுத்தும் சொற்களின் வைரத்தை மேலும் இறுக்கும் வகையில் பயன்படுத்தப்பட்டிருக்கும். ✱

### இப்பாதை பொது மக்கள் பாவனைக்குத்தடை

இந்தச் சொற்றொடரை அறிந்த காலத்தில் நான் சின்னப் பெடியன். நான்காம் அல்லது ஐந்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். எங்கள் அம்மாவின் ஊரில் உள்ள வீட்டிற்குப் பக்கத்தில் இருந்த இயக்க அண்ணாக்களின் பேஸூக்குப் போற பாதையில் எழுதி வைக்கப்பட்டிருந்தது. அப்போது இச் சொற்றொடரின் அர்த்தம் புரியும் அளவிற்கு என் மூளையில் சரக்கு இருக்கவில்லை. அந்தப் பாதையில் பெரிய சப்பாத்துத் தடையங்களையும், வாகனச்சில்லுகளின் தடையங்களையும் தவிர இலையான்களின் அசைவைக் கூடக் கண்டதில்லை. கொஞ்சம் வளர்ந்த பின் பொதுமக்கள் யார் என்பதையும், அத்தெருவில் பயணிக்க தகுதியுடையவர்கள் யார் என்பதையும் கண்டு பிடித்துவிட்டேன். தடைசெய்யப்பட்ட தெருவில் பாடசாலைப்பிள்ளைகள், வயதான தாத்தாக்கள், வேலைக்குப் போவோர் யாரையுமே காணமுடிவதில்லை ஏன், என் அப்பா கூட போவதில்லை. ஏன் அந்தப் பாதை தடைசெய்யப்பட்டிருந்தது? வளர்ந்த பின்னும் அப்பாவிடம் கேட்டிருக்கிறேன். அப்பா அதற்கான விடையையும் முற்றாகவே தடை செய்துவிட்டார். ✱

### அனுமதியின்றி உள்நுழைய வேண்டாம்

நான் A/L பரீட்சை எழுதிவிட்டுப் பெறுபேறுக்காக காத்திருந்த காலம். பொழுதுகள் அழுத்துக் கொல்லும். தூக்கத்தின் நிரந்தர அடிமையாகியிருந்த பொழுதுகளில் இடையிடையே வந்து அதனைக் குழப்பும் நிதர்சனா, நிதர்சன் எனும் இரண்டு பக்கத்து வீட்டுச் சுட்டிகள். அவர்கள் மட்டுமே அப்போது நான் வைத்திருந்த நண்பர்கள். மாலை வேளைகளில் ரெனிஸ் பந்தோடு வந்துவிடுவார்கள். அல்லது நான் போய் விடுவேன். அதை எறிந்து, தொலைத்து கண்டு பிடிப்பதில் அவ்வளவு ஆர்வம். நிதர்சனா, அவளின் வீட்டுக்கண்ணாடிகளை அதிக தடவைகள் உடைத்து தனது அம்மாவிடம் அடிவாங்கியிருக்கிறாள். எங்களோடு ''தம்பி'' என்று பெயர் சூட்டி நான் வளர்த்த நாயும் சேர்ந்து குதூகலிக்கும். எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் பெண் போராளிகளின் தங்குமிடமொன்று இருந்தது. பனை ஓலைகளால் இறுக்கமாக அடைக்கப்பட்டிருந்த சுற்றுவேலியை அவசரமான வேளைகளில் காற்றுக் கூட உடைத்துக் கொண்டு உட்புக முடியாது. ஒருநாள் நாம் விளையாடிய பந்து அவர்களின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஓடி ஒளிந்து கொண்டது. பயமாய் இருந்தது. வாசலில் நின்று கூப்பிட்டோம். அழகான ஒரு அக்கா எட்டிப் பார்த்தார். 'வாசலில் என்ன எழுதிப் போட்டிருக்கு'. வார்த்தைகள் சுட்டுப் பார்த்தன. இன்னும் நாங்கள் நுழையவே இல்லையே என்று சொல்ல வேண்டும் போல் இருந்தது. 'பந்தை எடுத்துத் தாங்கோ' நிதர்சனா கெஞ்சத் தொடங்கினாள் அதற்குள் தம்பி உள் நுழைந்து பந்தைக் கௌவிக் கொண்டு வந்துவிட்டான். ✱

### இவ்விடத்தில் நிற்கத் தடை

என்னுடன் A/L படித்த காலங்களில் கூடித்திரிந்தவர்களுக்கு எது தடைசெய்யப்பட்டதோ அதைச் செய்து பார்ப்பதில் ஓர் ஆர்வக் கோளாறு பைத்தியமாய்ப் பிடித்திருந்தது. புதுக்குடியிருப்பின் ஓர் இடத்திலே 'இப்பகுதியில் நிற்கத்தடை' என எழுதி வாசல் ஒன்றில் மாட்டப்பட்டிருந்தது. அன்றைய நாள் மாலை வகுப்புக்களை முடித்துக் கொண்டு எமது கூட்டம் அந்த இடத்தில் கூடியது. கூடி ஐந்தாவது நிமிடத்தில் எங்கிருந்தோ பறந்து வந்த ஒரு கறுப்புக் கண்ணாடி வாகனத்தில் நாம் எந்தக் கேள்வியும் இன்றி அள்ளிப் போகப்பட்டோம். எங்களது சைக்கிள்களை மட்டும் தடைசெய்யப்பட்ட வீட்டுக்குள் அனுமதித்தார்கள். புதுகுடியிருப்பில் எங்கோ ஒரு இருண்ட வீட்டில் வாகனம் எம்மை இறக்கிவிட்டுப் போனது. விடியும் வரை யாரும் எதுவும் கேட்கவில்லை. பெரிய மேசையில் ஐவரும் ஆனந்த சயனம். காலை மணி 6.00 இருக்கும். எங்களை அள்ளிப் போனவர் மீண்டும் வந்தார். நம்மை ஏற்றிய வாகனம் மாத்தளன் சந்திக்கு விரைந்தது. அப்போது அவ்வீதி கிரவலால் வேயப்பட்டுக் கொண்டிருந்தது. அதனை நிரப்புவதற்காக ரிப்பர் வாகனங்களில் கொண்டு வந்து பறிக்கப்படும் கிரவல் கும்பிகளில் இருக்கும் பெரிய கட்டைகள், வேர்த்துண்டுகள் போன்றவற்றைப் பொறுக்கி எறிவது தான் எமக்குத் தரப்பட்ட தண்டனை. இரண்டு நாட்கள். முறிந்து போனோம். அந்த நாட்களின் முழு வெயிலும் எம் தோல்களை பதம் பார்த்திருந்தது. அப்போது என்னோடு ஒட்டிக் கொண்ட புழுதியும், ஒவ்வாமையும் இன்றும் என் உடலின் சில பாகங்களில் இருக்கிறது. அதன் பின் 'தடை' என்ற சொல்லை எங்கு கண்டாலும் அந்த இடத்தில் எம்மைக் காண முடிவதில்லை. ✱

ஜெரா



### எச்சரிக்கை, காட்டுக்குள் செல்லத்தடை

நாங்கள் ஜெயசிக்குறுவில் இடம்பெயர்ந்து வள்ளிபுனப் பகுதியில் மீள்வாழ்க்கையை ஆரம்பித்திருந்தோம். பாடசாலை வாழ்க்கை ஒரு வருடத்தில் சலித் துப் போய்விட்டது. பக்கத்தில் ஒரு வீடுபோட்டுக் குடியேறலாம் என்று அப்பா யோசித்தார். வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்திற்குப் பின்னால உள்ள காட்டுப்பகுதிக்குள் நானும் அப்பாவும் தடி தண்டுகளை வெட்டுவதற்காக உள்நுழைந்தோம். போதுமான அளவுக்கு எல்லாத் தடிகளும் எமது வலைக்குள் சிக்கின. இரண்டு கட்டாகக் கட்டி வரிச்சுத் தடிகளை நானும் , பெரிய தடிகளை அப்பா வும் சுமந்து கொண்டு புறப்பட்டோம். 'ஐயா, வெட்டினதுகளைக் கீழ போடுங்கோ. முன்னுக்கு என்ன எழுதிப் போட்டிருக்கிறம்'. அப்பா, தான் அதைப் பார்க்கவில்லை, இந்த முறை மட்டும் விடுங்கோ என்று கேட்டுப்பார்த்தார். 'பொறுப்பாளர் விட வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்'. வட்டத் தகரத்தில் சிவப்பு எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்த 'எச்சரிக்கையைக்' காட்டினார் அந்த அண்ணா. வெறுங்கையோடு திரும்பினோம். ✱

### எச்சரிக்கை, மீறுவோருக்கு சாவொறுப்பு தண்டனை

முள்ளிவாய்க்காலுக்குப் போகும் தெருவில் ஒரு பனங்கூடல் இருக்கிறது. அதை நான் கண்டுகொண்டதில்லை. அப் பனங்கூடல் எந்த நேரமும் இருண்டே கிடக்கும். நான் அங்கு வேலை செய்த காலத்தில் மதி ஒருநாள் காலை உணவகச் சாப்பாடு ஒத்துவரவில்லை. வயிற்றுக்குள் ஏதோ பிரச்சினை. வாகனத்தை நிறுத்திவிட்டு பனங்கூடலுக்குள் அவசரமாய் ஓடினேன். நெஞ்சு விரிந்த பனைமர அடியில் சிவப்பு, வெள்ளை வண்ணங்களில் 'எச்சரிக்கை, மீறுவோருக்கு சாவொறுப்பு' (மரண தண்டனை) கண்ணில் அறைந்தது. சாரதி கேட்டார். 'என்ன போனவுடன் வந்திட்டீங்க?' நான், 'போகேல்ல, வந்திட்டன்'. அன்றிலிருந்து இரண்டு நாட்கள் என் வீட்டுக்கழிப்பறையைக் கூட எட்டிப் பார்க்கவில்லை. ✱

### போராளிகளுக்கு மட்டும் அல்லது தனிச் சுற்றுக்கு மட்டும்

ஒரு நாள் இரவு 10.30 மணி இருக்கும். வானவில் திரையரங்கில் படம் பார்த்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். என் ரோச் லைட் வெளிச்சத்தில் பொலித்தீன் பையினால் சுற்றப்பட்டிருந்த பொதி ஒன்று சிக்கியது. புதையலொன்று கிடைத்த நினைப்பில் சுற்று முற்றும் பார்த்துவிட்டு அதை எடுத்துக் கொண்டு வீடு வரை திரும்பிப் பார்க்காமல் ஓடி வந்துவிட்டேன். வீட்டுக்குள் நுழைந்ததும் முதல் வேலையாகப் பிரித்துப் பார்த்தேன். அதற்குள் '300', 'கைதிகள் விமானம்' என எழுதப்பட்டிருந்த இரண்டு சிடிக்களும், இதற்கு முன் நான் கண்டிராத, வாசித்திராத சில புத்தகங்களும் இருந்தன. அவை எல்லாவற்றிலும் 'போராளிகளுக்கு மட்டும்' ,'தனிச் சுற்றுக்கு மட்டும்' என்று நீல மையால் எழுதப்பட்டிருந்தது. புத்தகங்களின் ஒவ்வொரு தாளிலும் இதனைக் கண்டேன். மறுநாள் அதிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்து வாசித்தேன். அதை மாவோ என்பவர் எழுதியிருந்தார். அவர் ஒரு சீன விடுதலைப் போராளியாம். அதில் 'மீன்கள் கடலில் இருக்கும் வரை தான் பலமானவை. அது போல் தான் விடுதலைப் போராளிகளும் மக்கள் என்ற கடலுக்குள் இருக்கும் வரைக்கும் தான் பலமானவர்கள்' எனக் கூறியிருந்தார். மறுநாள் இரவு அந்தப் பொதியை எடுத்த இடத்தில் போட்டுவிட்டு வந்துவிட்டேன். பாவம், அதைத் தொலைத்த போராளி.

இன்று இச்சொற்கள் எதனையுமே காணமுடிவதில்லை. அவைகள் தொங்கிக் கொண்டிருந்த இடங்களில் அச் சொற்களை விட மோசமானதாக ஏதோ எழுதித் தொங்க விடப்பட்டுள்ளது. அப்போது போலத் தான் இப்போதும் எனக்கு எதுவுமே புரியவில்லை. தர்மபுரத்தில் எழுதப்பட்டிருந்த 'வீரம் விளைந்த மண்' எங்கே போனதோ?

இப்படியாக சொற்சுவர்களும் நம்மைப் பிரித்தன. ✱



# வாடகைப் புரட்சிகள்

சர்வதேச அரசியல் நிலைவரங்கள் மீண்டும் மத்தியகிழக்கு, மற்றும் வட ஆபிரிக்க பகுதிகளில் மையம் கொண்டுள்ளன. அரசியல் சிக்கல், மனித உரிமை மீறல், ஜனநாயக மீறல், இனப்படுகொலை, வேலையின்மை, சுதந்திர மறுப்பு போன்ற விடயங்கள், குறித்த பிராந்திய நாடுகளில் மீறப்படுவதற்கெதிரான மக்கள் போராட்டமாகவே இது பார்க்கப்படுகிறது. ஆனாலும் இதற்குப் பின்னால் 'எண்ணெய் அரசியல்' பலமாக இருப்பதையே மேற்கத்தேய நாடுகளது அண்மைய அணுகுமுறைகள் வெளிக்காட்டி வருகின்றன.

துனிசீயா, எகிப்து போன்றவற்றின் புரட்சி விளைவுகள் வேறுவகையாகவும், லிபியாவின் நிலைமை 'பரீட்சிக்கப்பட்ட அணுகுமுறை' (ஈராக்கில் நடந்ததை போன்றது என்பதைப் பிரித்தானிய பிரதமர் கோடன் பிறவுண் இவ்வாறு கூறுகிறார்.) என அர்த்தப்படுத்தப்பட்டு வேறுவகையாகவும் அமைந்துவிட்டது. குறிப்பிட்ட மூன்று நாடுகளையும் தவிர வட ஆபிரிக்க மற்றும் மத்தியகிழக்குப் பிராந்தியத்தில் வேறும் பல நாட்டு மக்களும் மோசமான மனித உரிமை மீறல்களையும், வேலையின்மை, குடும்ப ஆட்சி, பலதசாப்தகால அவசரகாலப் பிரகடனம், காணாமல் போதல் போன்ற நெடுபிடிகளையும் எதிர்கொள்கின்றன. சிரியா, அல்ஜீரியா, யேமன், பஹ்ரைன் ஜோர்தான், சவுதி அரேபியா, மொராக்கோ, போன்றன அவ்வாறானவைகள். ஆனால் அங்கு நடப்பவைகள் அதுவும் லிபியாவைப் போன்றோ, எகிப்து, துனீசியா போன்றோ வெளிவராமல் காத்து வருகின்றன மேற்கத்தைய ஊடகங்கள். அங்கு நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள், இராணுவத்தினரின் அடக்குமுறைகள் குறித்த செய்திகள் வெளிவருவதே அரிதாக இருக்கின்றது. இதற்குப் பலமான காரணங்களுண்டு.

**அட்சயன்**

எகிப்தில் போராட்டம் தொடங்கிய காலத்திலேயே மேற்குறிப்பிட்ட நாடுகளிலும் மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடத் தொடங்கினர். ஆனால் சரியான ஊடகக் கவனிப்பைப் பெறமுடியாததால் தோற்றுப்போன நிலைக்கு அப்போராட்டங்கள் வந்துகொண்டிருக்கின்றன.

பஹ்ரைனில் ஆளும் சிறுபான்மை சன்னி முஸ்லிம்களின் அதிகார மீறலுக்கு எதிராகவும், 200 வருடமாக நாட்டை ஆட்சி செய்துவரும் கலீபா குடும்ப ஆட்சிக்கு எதிராகவும் கடந்த பெப்ரவரி மாதத்திலிருந்து ஷியாப்பிரிவு முஸ்லீம் மக்கள் போராடிவருகின்றனர். உள்நாட்டுப் படையினராலும் பேச்சுவார்த்தைகளினாலும் கட்டுப்படுத்த முடியாது போன மக்கள் கிளர்ச்சி, வளைகுடா ஒத்துழைப்புக் கவுன்சில் படையினரின் வருகையுடன் முடிவுக்கு வந்திருக்கிறது.

வழமை போல பல உள்நாட்டு எதிர்க்கட்சித் தலைவர்கள் இதன் போது கைது செய்யப்பட்டு இருக்கின்றனர். நாடு கடத்தப்பட்டு இருக்கின்றனர். பலர் காணமற்போய் இருக்கின்றனர். இவ்வளவு அடாவடித்தனங்களையும் செய்த பின்னர் அமைச்சரவையைக் கலைக்க உத்தர விட்டுள்ளார் பஹ்ரைன் மன்னர்.

இதனை உடனடியாக வரவேற்ற ஒபாமா, பாராட்டும் தெரிவித்திருக்கிறார். லிபியாவைப் போல் எதிர்ப்பைக் காட்டவில்லை. ஏனெனில் பஹ்ரைன் அரசாங்கம், அந்நாட்டு மக்களை அடிமைப்படுத்தி அந்நாட்டைச் சவூதியினதும், அமெரிக்காவினதும் சொர்க்கபுரியாக மாற்றிவருகிறது. அமெரிக்காவின் ஐந்தாவது பெரிய கடற்படைத்தளம் இங்குதான் அமைக்கப்பட்டுள்ளது. இதை வைத்தே மத்திய கிழக்குப் பிராந்தியம் கட்டுப்படுத்தப்படுகிறது. இவைகள் மக்களது எழுச்சிமிகு போராட்டத்தை சர்வதேச ஊடகங்களின் கண்ணில் இருந்து மறைத்ததோடல்லாமல் இப்போராட்டத்துக்கு முழுக்காரணமும் ஈரான் தான் எனப் பழிபோடவும் வைத்துள்ளது. "எங்களிடையே எந்த ஒரு தலையீட்டையும் கடுமையாக நிராகரிக்கிறோம். அப்படிச் செய்கிற ஒருநாடு ஈரான் தான்" என வளைகுடா ஒத்துழைப்புக் கவுன்சிலின் தலைவர் அப்துல் ரகுமான் அல் அதீய்யா நேரடியாகவே கூறியிருக்கிறார்.

இந்தப் போராட்டக்காரர்கள் பழிவாங்கப்பட்டதற்கு இன்னொரு காரணமும் உண்டு. போராடுபவர்கள் அனைவரும் ஷியாப் பிரிவினர். ஈரானிலும் ஆட்சியில் இருப்பதும், இவர்களின் போராட்டத்தை ஆதரிப்பதும் ஷீயாக்கள் தான். ஆகவே பஹ்ரைன் புரட்சி அமெரிக்காவைப் பகைத்துக் கொண்டது.

இதே விதத்திலேயே யேமன், சிரியா மக்களது போராட்டங்களும் அடிதாளிக்கப்பட்டன. யேமன் *(8ஆம் பக்கம் பார்க்க)*

**புரட்சிக்குரிய நாடுகளில் நிரூபிக்கப்பட்ட எண்ணெய் வளம்**

| நாடுகள் | பில்லியன் பீப்பாய்கள் | நாளொன்றின் உற்பத்தி/பீப்பாய்களில் |
|---|---|---|
| அல்ஜீரியா | 42 | 1,861,000 |
| லிபியா | 46.25 | 1,590,000 |
| யேமன் | 3.72 | 402,000 |
| எகிப்து | 4.7 | 572,400 |
| சிரியா | 2.4 | 380,000 |
| துனீசியா | 1.7 | 76,000 |
| சூடான் | 1.6 | 396,000 |
| பஹ்ரைன் | 0.11 | 184,000 |
| மொறாக்கோ | 0.01 | 3,746 |
| சாட் | | 176,700 |










# மயானத்தில் ஆவி

## தொலையா நினைவுகள்



கல்லறைகள்-
திருகோணமலை

மின்சாரம் காணாத தெருக்கள். இருள் மண்டிக் கிடக்கிறது. நெழுவினிப் பிள்ளையார் கோவில் திருவிழாவுக்கு வண்டி மாடு கட்டி கிழக்கே இருந்து மேற்கே போய்க் கொண்டிருக்கும் நேரம் நீண்ட பாதையில் பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி, தபாற்கந்தோர், குடியிருப்புக்கள், மயானம், பெரியவெளி, வெட்டுக்களி, ஓட்டுமடம் எல்லாம் கடந்து தான் வண்டி கோயிலுக்குப் போக வேண்டும். எங்கள் வீட்டின் அயல்வீட்டுக்காரரும், சின்னமாமா குடும்பமும்,நானும்,நண்பர்கள் சிலரும் சேர்ந்து கொண்டோம். கோவிலில் சின்ன மேளக்காரிகளின். ஆட்டமும் பாட்டும் பார்த்து ரசிக்கும் ஆவலோடும், கோவிலைத் தரிசிக்கும் எண்ணத்தோடும் நாங்கள் வண்டியில் ஏறி இருக்கிறோம். வண்டி அந்த மயானத்தைக் கடக்கும் நேரம் கலகலப்பாக ஏதேதோ பேசிவந்த வேளை, சின்னமாமி, 'தம்பி மாட்டைக் கெதியாய் ஓட்டடா. சவக்காலையைக் கெதியாய் கடக்க வேணும்' என்று சொன்னா. உடனே "ஏனம்மா"? என்று கேட்ட கமலம் மச்சாளுக்கு 'எதுக்கும் மயானத்தைக் கடந்த பிறகு சொல்லுறன்' என்ற மாமியின் குரலில் ஒரு பயம் தொனித்தது. வண்டியில் இருந்தவர்களின் தோற்றம் கரிய நிழல்களாய் தெரிந்தன. வெளிச்சம் இல்லை. எல்லோரும் தத்தமது குரல்களை அடக்கிப் பேச்சை நிறுத்திக் கொண்டனர். உருளும் வண்டிச் சில்லுகள் கல்லு றோட்டில் உரசி எழும்பும் ஓசையும் மாடுகளின் கழுத்துச் சலங்கையின் சத்தத்தையும் தவிர. அனைத்து ஒலிகளும் அடங்கின. எல்லோர் மனதிலும் இருட்பயம் சூழ்ந்து கொண்டதாகத் தோன்றியது. மயானத்தைக் கடக்கும் வரை எவருமே கதைக்கவில்லை. மயானத்தைக் கடந்து வெட்டுக்களிக் குளத்தருகே வண்டி வந்த போதுதான் சொர்ணம் மாமி கதை சொல்லத் தொடங்கினா. 'அந்த மயானத்துக்கு அருகில் இரவில் எவருமே தனியாக வாறயில்லை. முந்தி ஒரு காலத்தில யாரோ ஒருத்தரை நாலைஞ்சுபேர் அடிச்சுக் கொன்று புதைச்சுப் போட்டாங்களாம். அந்த நாளிலிருந்து அகாலமாய்ச் செத்துப் போகச் செய்த அந்தக் கொலைகாரரை ஒவ்வொருத்தராகக் கொன்ற பிறகு தான் அந்த ஆவி அடங்கிச்சுதாம்.ஒரு நாள் மாமா தனியா வந்த போது அவருக்குத் துணையா நானும் வாறன் என்று சொல்லிக் கொண்டு வந்தவர் ஓட்டுமடத்தடியில் வந்து மறைஞ்சு போனாராம். அவருக்கு அதுக்குப்பிறகுதான் அது ஆவி எண்டு தெரியுமாம்'. இப்படியே மாமி சொல்லி முடித்தார். கேட்கப் பயந்ததால் வேண்டாம் இனி அந்தப் பேய்க்கதை யென்று ஒரே குரலில் மாமியின் வாயை மூட வைத்தோம். எல்லோரையும் மூச்சடங்க வைத்த பயத்தின் அழுத்தம். அதனால் ஒடுங்கிய ஓசை கோயிலைச் சேரும் வரையில் எவருமே கதைக்கவில்லை. கோவிலைச் சேர்ந்ததும் வண்டியை விட்டிறங்கி பக்தர்களின் ஆரவாரச் சூழலுக்குள் வந்ததும் ஒவ்வொருவரும் வந்தகளை மறந்து, முகம் கை கால் கழுவி கடவுளைத் தரிசித்தோம். கோவிலைச் சுற்றிச் கூட்டத்தோடு கூடி சின்னமேளக்காரரின் ஆட்டத்திலும் பாட்டிலும் சில பொழுது விழித்திருந்தோம். கூட்டத்தின் நடுவில் தென்னோலைக் கிடுகில் இருந்து ஆட்டத்தை ரசித்த நான் அந்தக் கிடுகின் மேலேயே தூங்கிவிட்டேன். காலையில் வீட்டுக்குத் திரும்புவதற்காக என்னையும் எழுப்பி வண்டியில் வந்தோர் எல்லோரையும் ஒன்று சேர்ந்து வண்டியின் அருகே வந்தபோது மாமாவைக் காணவில்லை. மாமி இப்பொழுது தான் 'மாமா எங்க போயிற்றார்' என்று விசாரிக்கத் தொடங்கினார். கோவிலைச் சுற்றி பல இடங்களில் மாமாவைத் தேடினோம். விசாரித்தோம். மாமாவைக் காணவில்லை. வீட்டிற்குப் போய் விசாரிப்போம் என எண்ணிப் புறப்பட்டோம். எனக்கோ மாமி சொன்ன ஆவிகளின் கதை தான் அடிக்கடி நினைவுக்கு வந்தது. வீட்டுக்குத் திரும்பும் வழியில் மீண்டும் அந்த மயானத்தில் நினைவுச் சின்னங்களாக உயர்ந்து நின்ற கல்லறைகளைப் பார்த்துப் பயந்தேன். வீட்டிற்கு வந்தபோது மாமா வீட்டிலே நின்றார். வெள்ளை வேட்டியோடு வண்டியில் ஏறுவதற்கு ஆயத்தமாகியவர் ஆட்கள் கூடிவிட்டார்கள் என்று எதுவும் சொல்லிக் கொள்ளாமலே கோயிலுக்கு வராமல் வீட்டிலே நின்று விட்ட செய்தியை அவர்சொல்லும் வரை எவருக்குமே தெரியாது. மரணங்களுக்குப் பின்னான நினைவுச் சின்னங்கள் மரணித்தவர்களுக்காக அல்ல, வாழ்ந்து கொண்டிருப்பவர்களின் மன அமைதியான, உண்மையான நீதியான வாழ்வுக்கான வழிகாட்டிகளாகவே அமைக்கப்படுகின்றன. ஒவ்வொருவரதும் உள்ளத்தை ஆறுதல் படுத்துவதற்கும் உறுதியான வாழ்க்கைப் பயணத்துக்கும் அந்த நினைவுச் சின்னங்கள் மறைபொருளாய் நின்று உதவுகின்றன.

போத்துக்கேயர் ஒல்லாந்தர் வாழ்ந்த காலத்தில் அவர்களின் புதைகுழிகளுக்கு மேல் கட்டப்பட்ட கல்லறைகளோடு மயானங்கள் இன்றும் உள்ளன. இரண்டாம் உலகமகாயுத்தத்தில் ஈடுபட்ட பிரித்தானிய வீரர்களின் கல்லறைகளைக் கொண்ட மயானம் ஒன்று திருகோணமலையில் இன்றும் பாதுகாக்கப்படுகிறது. ஜேர்மனியில் பேர்லின் நகரில் போரில் மாண்ட வீரர்களுக்காக அமைக்கப்பட்ட பிரமாண்டமான கல்லறைகளைக் கொண்ட மயானத்தைப் பார்த்திருக்கிறேன் . அண்மைக்காலத்தில் அகாலமாய் அழிக்கப்பட்டோரின் சடலங்கள் புதைக்கப்பட்ட - விதைக்கப்பட்ட எத்தனை மயானங்கள் இருந்தன . ஆனால் அந்த மாமி சொன்ன பழிவாங்கும் ஆவிகளின் நடமாட்டத்தைக் காணவேயில்லை. என் மனதில் ஆவி பற்றிய பயம் அகன்று விட்டது.

சின்னப்பையன் சந்துருவிடம் அந்த மாமி சொன்ன பழிவாங்கும் ஆவிகளின் கதையைச் சொல்லி அங்கலாய்த்தேன்.

"மாஸ்டர், பூசணிக்காயை ஒரு கோப்பை சோற்றுக்குள் மறைக்க முடியாது. அதேபோல எந்த உண்மையையும் நீதியையும் எந்த வகையாலும் அழிக்க இயலாது. அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் என்பார்களே" என்று சொல்லியபடி சந்துரு உரத்துச் சிரித்தான். எனக்குள் அவனது வார்த்தைகள் உண்மையின், சத்தியத்தின் வலிமையை உணர்த்தித் திரும்பத்திரும்ப ஒலித்தன. ஆண்டவனின் நீதிக்குரலாய் அது விரிந்தது. ★

**நெடுந்தீவு மகேஷ்**



போர் வீரர்களின்
ஞாபகார்த்தக
கல்லறைகள்-



# அமுதர் சுவைத்த பழஞ்சோறு

காலை உணவாக இன்றைய நாள்களில் இடியப்பம், பிட்டு, றொட்டி என்றும் இட்டலி, தோசை, பாற்சோறென்றும் இனிக்கும் சுவைக்கும் உண்டிகளை நாம் உண்ணுகின்றோம். எனினும் அந்தக் காலத்தில் எமது சின்ன வயதில் காலை உணவாகப் பழஞ்சோறும், கஞ்சியும் சுவைத்துண்ணும் பாரம்பரியம் எம்மிடையே இருந்தது. அந்தக்காலத்துப் பழக்கம் குறித்து இந்தக் காலத்து இளசுகளுக்கு சொல்லிக் காட்ட ஏதாவது சந்தர்ப்பம் வாய்த்தால் எத்தனை மன உற்சாகத்தோடும் பூரிப்போடும் நாம் அவற்றை விபரிக்க ஆரம்பித்தாலும் இந்தக் காலத்து இளசுகள் அதனை வரவேற்காது முகம் சுழிக்கும் போது எமது அந்தக் காலத்து நினைவுகள் குறித்த மனஎழுச்சியும் உற்சாகமும் சப்பென்று அடங்கிப் போய்விடுகிறது. அது இல்லையென்றாகிப் போனது போல் தோன்றினாலும் அந்தப் பழஞ்சோற்றின் சுவையை அறிந்தவர்கள் அதனைத் தினந்தேடும் ஆசையிலிருந்து விடுபடவில்லை என்பதே உண்மை.

நெஞ்சு இனிக்கும் பூநகரி
நிலத்தின் மொட்டைக் கறுப்பனிலே
கஞ்சி வடியாப் பழஞ்சோறு
கணக்காய்ப் பிழிந்து சட்டியிலே
மிஞ்சும் குழம்பு கத்தரிக்காய்
விரும்பும் கீரை மரவள்ளி
கொஞ்சம் ஊறுகாய் உப்பு
குழைத்து அம்மா நீட்டுவாள்

இவ்வாறு அம்மாவின் இனிய பழஞ் சோற்றுக் குழையலொன்றைக் கவிஞர் தந்துள்ளார். பூநகரி மொட்டைக் கறுப்பன் அரிசியிலே ஆக்கிய சோறு இரவு உணவாகச் சேர்த்து உண்டது போக எஞ்சிய கத்தரிக்காய் மரவெள்ளிக் குழம்புகளோடு கீரை ஊறுகாய், உப்புக் கலந்து குழைத்த குழையல் அது.

பதமாய்க் குழைத்த பழஞ்சோறு
பார்க்க நாவில் நீரூறும்
இதமாய் இருக்கும் அதைக்கௌவ
எல்லாச் சுவையும் அதிலிருக்கும்
அதனால் உருண்டை இன்னொன்றும்
அவதியாகப் பெறுவதற்கு
மிதமாய் உண்ணத் தெரியாமல்
விழுங்கி விக்கி விழித்திடுவோம்

பழஞ் சோற்றின் சுவை மிகுதியால் அதனை மேலும் மேலும் அம்மாவின் கையிலிருந்து வாங்கி உண்ணும் ஆசையினால் அவதிப்பட்டுக் கையிலேந்திய சோற்றைக் கௌவும் பாங்கினையும், கவிஞர் தாமே அனுபவித்த பழஞ்சோற்று உருசியின் ஆவலால் உண்டான விக்கலால் விழித்த நிகழ்வையும், அழகான கவிதையாகத் தந்துள்ளார்.

வாழை இலையில் கிழித்த துண்டு
வலது கையில் வைத்தபடி
சூழ இருந்து கை நீட்டும்
சொந்தம் பந்தம் யாவருக்கும்
ஆளைத் திரும்பிப் பாராமல்
அம்மா குழைத்த பழஞ்சோறு
ஏழு உலகும் வேரறுந்து
இனத்தைப் பிரிந்தார் அறிவாரோ?.

பழஞ்சோற்றின் சுவைப் பெருக்கையும், சொந்த பந்தம் சூழ சுற்றியிருந்து பழஞ் சோறுண்ணும் அழகையும். ஆளின் முகம் பார்த்துப் பழஞ்சோறு அளித்தலில் வேற்றுமை காட்டாத அம்மாவின் அன்பையும் இனிக்கச் சொன்ன கவிஞர் எம்மினம் வேரறுந்து நெல்லிக்கனி மூடை அவிழ்ந்த நிலையாகச் சிதறிப் போகக் காரணரானோரைச் சாடும் வகையில்

ஏழு உலகம் வேரறுந்து இனத்தைப் பிரிந்தார் அறிவாரோ?- என்று ஏசுகிறார். ஒன்று கூடி உண்ணும் நிலை கலைய அதனால் ஏற்பட்ட பிரிவுத் துயரால் வருந்துகின்ற இந்நிலைக்கு ஆளாக்கிய கொடியவர் அறிவாரா என ஆதங்கம் கொள்ளும் கவிஞரின் மன ஏக்கம் கவிதைவரிகளில் பளிச்சிடுகிறது. எஸ்.அடைக்கலமுத்து என அழைக்கப்பட்ட இளவாலை அமுது, வித்துவான், புலவர், மதுரகவி எனப் பல பட்டங்களைப் பெற்றுயர்ந்த கவிஞர். ''மாதா அஞ்சலி' அவரது முதல் நூலாகும். காக்கும் கரங்கள், இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள் ஆகியவை அவர் எழுதிய நூல்களிற் சில. 1918 ஆம் ஆண்டு பிறந்தவர். 2010 பெப்ரவரி 23ஆம் திகதி தமது 92 வயதில் லண்டனில் காலமானார்.

**மைதிலி.தேவராஜா**

# தமிழ்த் தேசியவாதமும் சிங்கள இனவாதமும்



சேர்.பொன். அருணாசலம்

**தே**சம், தேசியம், தேசிய இனம் போன்ற வார்த்தைகள் இப்போது பல்வேறு தரப்பினராலும் பல்வேறு அர்த்தங்களுடன் பாவிக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. இது குறித்து பல்வேறு வாதப் பிரதிவாதங்களும் இடம்பெற்று வருகின்றன.

இப்போது மேடையில் இரு தேசியங்கள் அறங்கேறியுள்ளன. ஒன்று இலங்கைத் தேசியம். மற்றது தமிழ்த் தேசியம். இலங்கைத் தேசியத்தை வலியுறுத்துபவர்கள் தமிழ்த் தேசியத்தை நிராகரிப்பதும், தமிழ் தேசியதத்துக்காக வாதிடுபவர்கள் இலங்தைத் தேசியத்தை மறுதலிப்பதுமான நிலையே நிலவுகிறது.

## ஆங்கிலயேர் ஆட்சியில் இலங்கை.

1815ஆம் ஆண்டு கண்டி இராச்சியம் ஆங்கிலேயரிடம் வீழ்ச்சியடைந்த பின்பு 1833 ஆம் ஆண்டில் கோல்புறுக் ஆணைக்குழுவின் சிபார்சில் கண்டி ராச்சியம், யாழ்ப்பாண ராச்சியம் என விளங்கிய வெவ்வேறு ஆட்சிப் பிரதேசங்கள் ஒன்றிணைக்கப்பட்டு ஒரே தேசமாக்கப்பட்டன.

அதை அடுத்து இலங்கை பலதேசிய இனங்களைக் கொண்ட ஒரு தேசமாக உருவாகியது. அதன் காரணமாக இலங்கைத் தேசியம் என்ற ஒரு கருத்துருவாக்கம் நிலைபெறத் தொடங்கியது.

ஆங்கிலேயர் ஆட்சியின் போது ஆங்கிலம் நிர்வாக மொழியாக விளங்கிய போதும், சிங்கள தமிழ் இனங்களின் தனித்துவத்தை அது பெருமளவில் பாதித்துவிடவில்லை.

எனினும் ஆங்கிலம் கற்ற நிலப்பிரபுத்துவ வேர்களைக் கொண்ட புத்திஜீவிகள் மத்தியில் தங்களின் மொழி, மதம், பண்பாடு தொடர்பான அக்கறைகள் மேலோங்க ஆரம்பித்தன. இதற்குப் பௌத்த குருமாரின் பங்களிப்பும், ஊக்குவிப்பும் பெரும் உந்து சக்தியாக விளங்கின.

இவ்வகையில் அநாகரிக தர்மபால போன்றவர்களின் அதீத அக்கறை, ஒரு சிங்கள தேசிய எழுச்சிக்கான அடித்தளத்தை அமைத்தது. எனவே இலங்கை மண்ணை அடித்தளமாகக் கொண்டு மெல்ல மெல்ல சிங்கள தேசியம் கருக்கட்ட ஆரம்பித்தது. இதேவேளையில் ஆறுமுகநாவலர், சுவாமி ஞானப்பிரகாசர், விபுலானந்த அடிகள் போன்றோர் தமிழ் மொழி பண்பாடு என்பன தொடர்பாக அளப்பரிய பங்கை வழங்கிய போதும் இலங்கையில் சிங்களத் தேசியத்துடன் தமிழ்த் தேசியம் சமாந்தரமாக எழுச்சி பெற முடியவில்லை.

அடுத்த கட்டத்தில் தமிழ் மக்களின் அரசியல் தலைமைகளாக விளங்கிய சேர்.பொன்.அருணாசலம், சேர்.பொன்.இராமநாதன் போன்றோர் இலங்கைத் தேசியம் என்ற மட்டத்திலேயே தங்கள் அரசியலைக் கணக்கிட்டனரே யொழிய சிங்கள தேசத்துக்கு நிகராக தமிழ் தேசியத்தை வளர்ப்பதில் அக்கறை காட்டவில்லை. இதன் காரணமாக சிங்கள தேசியத்தையே இலங்கைத் தேசியமாக நிலைநிறுத்தும் முயற்சிகள் முனைப்படைந்தன. இலங்கை சுதந்திரம் பெற்ற பின்பு சிங்களப் பெரும்பான்மையினரிடமே அதிகாரம் போய்ச் சேர்ந்தபடியால் இந்நிலை வேகம் பெறத் தொடங்கியது.



சேர்.பொன். இராமநாதன்

இதன் காரணமாகவே 1948 இல் சட்டசபையில் இந்நாட்டின் அரச கரும மொழி சிங்களமாயிருக்க வேண்டும் என்ற பிரேரணை கொண்டு வரப்பட்டது. அது அப்போது நிறைவேற்றப்படா விட்டாலும், 1956ஆம் ஆண்டு எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவால் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. அச்சம்பவத்தைத் தனியே ஒரு மொழியை அரியாசனம் ஏற்றிய சாதனையாக நாம் பார்க்க முடியாது. அது சிங்கள இனத்தின் தேசிய எழுச்சியின் ஒரு வெளிப்பாடு மட்டுமின்றி, சிங்கள தேசியத்தை இலங்கைத் தேசியமாக நிலைநாட்ட எடுத்த ஒரு காத்திரமான முயற்சியுமாகும்.

இப்படியான ஒரு சூழ்நிலையில் தான் 1950க்கு அடுத்த காலம் பகுதியில் தமிழ் தேசியம் தொடர்பான சிந்தனைப் போக்கு உருவாகியது. ஆனால் ஒரு சில தமிழ் சுயநல அரசியல்வாதிகளும் அவர்களின் அடிவருடிகளும் இத் தமிழ் தேசிய சிந்தனைப் போக்கை சிங்கள இனவாதத்திற்கு எதிராக எழுந்த தமிழ் இனவாதம் எனக் கற்பிக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழ், சிங்கள தேசியங்கள் தங்கள் தனித்துவங்கள் சிதையாமல் சமாந்தரமாக நிலைபெறும்போது மட்டுமே ஒருமுகம் கொண்ட இலங்கைத் தேசியம் சாத்தியமாகும். ஆனால் சிங்கள தேசியமே இலங்கைத் தேசியமாக உருவகிக்கப்படும்போது அது இனவாத வடிவம் பெறுகிறது. அப்படியான ஒரு நிலையில் தமிழ்த் தேசியம் சிதைவடையாது தன்னைக் தற்காத்துக் கொள்ள வேண்டிய தேவை எழுகிறது. இதை எவராவது தமிழ் இனவாதம் எனக் குழப்ப முயல்வார்களாயின் அவர்கள் தமிழ் மக்களின் தேசிய தனித்துவத்தை நிராகரிப்பவர்களாகவே இருக்க முடியும்.

## இலங்கைத் தேசியமாகக் காட்டப்படும் சிங்களத் தேசியம்

போரின் இறுதி நாட்களின் தமிழ் மக்களின் மீது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக எதிர்க் குரல் எழுப்புவது தேசவிரோதச் செயல் என இன்றைய அரசினால் கூறப்படுகிறது. இந்தத் தேசத்துரோகப் பார்வை, சிங்கள தேசியத்தை இலங்கைத் தேசியமாகக் காட்டும் அடிப்படையிலேயே முன் வைக்கப்படுகிறது.

இத்தகைய தேசிய விரோதப் போக்கை நியாயப் படுத்தச் சிலர் தமிழ் தேசியம் பற்றிக் குழப்பமான கருத்துக் களையும் வரைவிலக்கணங்களையும் முன் வைப்பதுண்டு.நாம் தேசியம் பற்றிய சரியான புரிதலை அடைய, தேசிய இனம் தொடர்பாக சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சில வரையறைகளைப் பற்றித் தெரிந்து கொள்ளவது அவசியமாகும்.

## ஒரு தேசிய இனத்துக்கான அடிப்படை அலகுகள்

ஒரு தேசிய இன்மானது தனக்கென ஒருமொழி, பாரம்பரியமாக வாழுகின்ற ஒரு தொடர்ச்சியான நிலப் பகுதி, தொன்மை வாய்ந்த ஒரு கலாசாரம், ஒரு பொதுப் பொருளாதாரம் என்பவற்றைக் கொண்டிருக் கவேண்டும்.

சந்திரசேகர ஆசாத்

முஸ்லீம், கிறிஸ்தவ மக்கள், மதம் சார்ந்த சில பண்பாட்டு அம்சங்களில் வேறுபட்டாலும் கலை, இலக்கியம், தொடர் பாடல் போன்ற கலாசார அம்சங்களில் ஏனைய தமிழ் பேசும் மக்களுடன்ஒன்றுபட்டே உள்ளனர். எனவே வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதை எவரும் மறுத்து விடமுடியாது.

ஒரு தேசிய இனத்துக்குரிய இந்த நான்கு அம்சங்களும் ஒன்றிணையும்போது ஒரு இனத்தின் தேசியம் உருவாகின்றது. எனவே தமிழ்த் தேசியத்தின் அடிப்படைத் தாய் நிலம் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாநிலங்களே.தமிழரசுக் கட்சியின் ஆரம்ப காலத்தில் அதற்கு முஸ்லீம்களின் பெரும் ஆதரவு இருந்தமையும், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆரம்பிக்கப்பட்ட போது மலையக மக்களின் தலைவரான சௌமியமூர்த்தி தொண்டைமான் அதில் இணைந்திருந்தமையும் தமிழ் தேசியத்தின் அடிப்படையிலேயே என்பதை நாம் மறந்து விடமுடியாது.

## வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகள் தமிழ்த் தேசியத்தின் தாயகம்

தமிழ் பேசும் மக்கள் பாரம்பரியமாக வாழும் ஒரு தொடர்ச்சியான நிலப்பகுதி வடக்குக் கிழக்கு என்ற வகையில் அதுவே தமிழ்த் தேசியத்தின் தாயகமாகும்.

அதன் காரணமாகவே தமிழ் மக்களால் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய ஒரு அதிகாரப் பரவலாக்கலுக்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அது மட்டுமின்றி சமஷ்டிக் கோரிக்கை, பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி- செல்வா ஒப்பந்தம் போன்றவற்றையும் வடக்குக் கிழக்கை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்பட்டன.

இந்த நிலையில் இன்று தமிழ்த் தேசியம் என்பது புலம்பெயர் தமிழர்களாலும் மத்திய தர வர்க்கத்தினராலும் முன் வைக்கப்படும் ஒரு கோட்பாடு எனவும், சாதாரண மக்கள் தங்கள் வாழ்வாதாரம் பற்றியே சிந்திக்கின்றனர் எனவும் சிலரால் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

தேசியம் என்பது வெறுமனே ஒரு கோட்பாடு அல்ல. அது ஒரு தேசிய இனத்தின் அடிப்படை அம்சம் என்பதை மறைக்கவே அவர்கள் முயல்கின்றனர். ஆனால் தமிழ் மக்களோ பேரவலங்களைச் சந்தித்த பின்பும் தேசியம், சுயநிர்ணய உரிமை என்பவற்றை முன்வைக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கே கடந்த இரு தேர்தல்களிலும் பெரும் ஆதரவை வழங்கினர். இது தமிழ் மக்களின் தேசியம் தொடர்பான சரியான நிலைப்பாட்டையே தெளிவு படுத்துகிறது. எனவே சாதாரண தமிழ் மக்கள் வாழ்வாதாரம் தொடர்பான பிரச்சினைகளில் மட்டுமே அக்கறை கொண்டுள்ளனர் என்ற வாதத்தின் கயமையை நாம் புரிந்து கொள்ளமுடியும்.

## சிங்கள தேசியத்தை வலியுறுத்தும் முயற்சி

தமிழ்த் தேசியவாதம் முன்னிறுத்தப்படும்போது சிங்கள தேசிய வாதத்தை முன்னிறுத்தும் இனவாதம் மூலம் சிங்கள மக்கள் தமிழ் மக்களுக்கு எதிராகத் திரட்டப்படுவார்கள் என்ற மிரட்டலும் விடுவிக்கப்படுகிறது

சிங்கள இனவாதம், ஏற்கனவே போரின் வெற்றி, சிங்களக் குடியேற்றங்கள், தமிழ்ப்பகுதிகளை இராணுவமயப்படுத்தல், வடக்குக் கிழக்கெங்கும் விகாரைகளையும் புத்தர் சிலைகளையும் அமைத்தல் போன்ற விடயங்களால் சிங்கள மக்களுக்கு ஊட்டப்பட்டு வருகிறது.

அதற்குக் காரணம் தமிழ் மக்கள் தங்கள் தேசியத்தை வலியுறுத்துவது மட்டும் தான் எனச் சத்தியம் செய்வது ஒரு மடத்தனமான, சிறுபிள்ளைத்தனமான வாதமாகும்.

எந்த ஒரு ஒதுக்கப்பட்ட இனமும் தன் உரிமைகளுக்காகப் பேராடும்போது அடக்குமுறையாளர்கள் தமது மக்களைத் தமக்குப் பின்னால் பல்வேறு வழிகளில் அணி திரட்டுவார்கள். அதற்காக போராடுவதே தவறு என்று எவராலாவது கூறிவிடமுடியுமா?

இன்று முஸ்லீம் தலைமைகள், பெரும்பான்மையான மலையகத் தலைமைகள் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் இன்றைய அரசாங்கத்துடன் ஒன்றிணைந்து நிற்பதுடன், அமைச்சர் பதவிகள் உட்பட பல உயர் பதவிகளையும் வகிக்கின்றனர். இவர்கள் நாடாளுமன்றக் குழுக் கூட்டங்களிலோ, அமைச்சரவையிலோ தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்குக் குரல் கொடுக்க வேண்டும். தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் சென்ற இவர்களுக்கு அந்தக் கடமை உண்டு.

அரசாங்கத்தின் சேவகர்களாயிருப்பதோ, அரசின் இனவாத நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதோ எவ்வித பயனும் தரப்போவதில்லை. மேலும் தமிழ்த் தேசியம் பற்றிய குழப்பங்களை ஏற்படுத்துவது தமிழ் மக்கள் விரோத நடவடிக்கைகளே.

தமிழ் தேசியத்தை வலியுறுத்தும் தரப்பினர் அவர்கள் தமது மக்கள் பலத்தையும் பேரம் பேசும் தகமையையும் உறுதியையும் முன் வைத்து தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தைத் தொடர்வார்கள். ★

சுடர் ஒளி

03, ஏப்ரல் - 09, ஏப்ரல் 2011

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14. டெலிபோன்: 0115738005
பாக்ஸ்: 0115517944 - 5
E-mail: editorial@sudaroli.com

# ஏமாற்றுவதற்கும் ஒரு அளவு இல்லையா?

''தமிழ் அரசியல் கட்சிகளுடனான பேச்சுக்கள் நடத்தப்படுகின்றன. குறிப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு தொடர்ந்து பேச்சு நடத்தி வருகிறது. இன்னமும் அவர்களால் ஒரு முறைப் படியான தீர்வு யோசனை முன்வைக்கப்படவில்லை.

ஆனால் அவர்கள் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு பல யோசனைகளைக் கூறியுள்ளனர். இந்த விவகாரம் தொடர்பாக இன்னமும் ஒரு இறுதி யான முடிவு எட்டப்படவில்லை.

இந்தப் பிரச்சினை 60 ஆண்டுகால வரலாற்றைக் கொண்டது. இதனை ஒரிரண்டு நாள்களில் தீர்த்துவிட முடியாது. அவர்களுடன் மேலும் பல சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டு இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு ஒன்று உருவாக்கப்படும்.

அனைத்துக் கட்சிகளிடம் இருந்தும் பெறப்படும் யோசனைகளை ஆராய்ந்து பரஸ்பர உடன்பாடு ஒன்று உருவாக்கப்படும்.

தமிழர்களின் விருப்பங்களை நிறைவேற்றும் வகையிலான அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு நான் தயாராகவே உள்ளேன். ஆனால் அது அனைத்துச் சமூகங்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பது முக்கியமானது.

எந்தவொரு சூழலிலும், புலிகள் கோரிய தனி நாட்டை - பிரபாகரனின் ஈழக்கனவை நிறைவேற்று கின்ற வகையிலான தீர்வை - வழங்க முடியாது. அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வை எட்டுவதே மிகவும் சிறந்ததாக இருக்கும்.

நாட்டில் இருந்து தீவிரவாதம் அடியோடு அகற்றப்பட்டுவிட்டது. தேசியப் பிரச்சினைக்கு உள்ளகத் தீர்வு காணமுடியும். அதுவே நாட்டுக்குப் பொருத்தமானது.''

இப்படியெல்லாம் தெரிவித்திருப்பவர் வேறுயாரும் அல்லர்; சாட்சாத் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே.

ஊடகங்களின் ஆசிரியர்கள், பொறுப்பாளர்களைச் சந்தித்துப் பேசியபோது அவர் இப்படிக் கூறினார். அவரது இந்தக் கூற்றுக்களில் பல அவர் இதுவரைக்கும் கூறி வந்தவற்றையும் செய்து வந்தவற்றையும் கேலிக் கூத்தாக்கி இருக்கிறது.

இலங்கைத் தலைவர்கள் எவருமே நாக்குச் சுத்தம் இல்லாதவர்கள் என்ற உண்மையை மீண்டும் மீண்டும் நிரூபித்து வருகிறார்கள். இப்போது ஜனாதிபதி அதில் முதன்மையானவராகத் திகழ்கிறார்.

இதே ஜனாதிபதிதான், தனது முதலாவது பதவிக் காலத்திற்கான மஹிந்த சிந்தனையில், நாட்டின் தேசியப் பிரச்சினையை ஒன்றறை வருடங்களில் தீர்ப்பேன் என்று எழுதி சிங்கள மக்களிடம் வாக்குகள் பெற்றவர்.

ஆட்சிக்கு வந்த பின்னர் அனைத்துக் கட்சிக் குழு என்ற ஒன்றை அமைத்து தேசியப் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வைத் தயாரிக்க வைத்தவர். அந்தத் தீர்வும் இப்போதும் அவரிடம்தான் இருக்கின்றது.

இத்தனையையும் செய்து முடித்த பின்னர் அவர் இப்போது சொல்கிறார், ''இந்தப் பிரச்சினை 60 ஆண்டு காலப் பாரம்பரியம் கொண்டது. அதனை உடனடியாகத் தீர்த்துவிட முடியாது'' என்று. அப்படியென்றால் மஹிந்த சிந்தனையில் சொல்லப்பட்டதற்கு என்ன பொருள்?

அதுமட்டுமன்றி ''அனைத்துக் கட்சிகளிடம் இருந்தும் பெறப்படும் யோசனைகளை ஆராய்ந்து பரஸ்பர உடன்பாடு ஒன்று உருவாக்கப்படும்'' என்றும் ஜனாதிபதி இப்போது கூறுகின்றார். அப்படியானல் அனைத்துக் கட்சிக் குழு கூடிகூடிக் கதைத்தது எதற்காக? அவர்கள் தயாரித்து ஜனாதிபதியிடம் வழங்கிய தீர்வுத் திட்டத்துக்கு என்னவாயிற்று?

இப்படி மாற்றி மாற்றி வாய்க்கு வந்ததையெல்லாம் சொல்வதன் மூலம் தான் தமிழ் மக்களை மட்டுமல்ல வாக்களித்து வாழ்வளித்த சிங்கள மக்களையும் ஏமாற்றுகிறார் என்பதை ஜனாதிபதி கிஞ்சித்தும் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

இந்த லட்சணத்தில் தமிழர்கள் விரும்பும் வகையிலான அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்குத் தான் தயாராகவே இருக்கிறார் என்றும் ஜனாதிபதி பத்திரிகை ஆசிரியர்களிடம் சொல்லி இருக்கிறார். இத்தனைக்கும் பிறகும் இதை மட்டும் எப்படி நம்புவது?

# நாட்டில் அமைதி ஏற்படவேண்டும்

முறையான இன நல்லிணக்கமின்றி எங்களது தேசத்தில் அமைதி ஒருபோதும் நீடித்து நிலைக்காது. அத்துடன் நாட்டினது வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வாழும் மக்களும் போரினால் பாதிக்கப்பட்ட ஏனையவர்களும் தாங்கள் இழந்ததைப் பெறும்வரைக்கும், நம்பிக்கையான எதிர்காலத்தினை நோக்கி அவர்கள் பயணிக்கும் வரைக்கும் உண்மையான இன நல்லிணக்கம் ஏற்படப்போவதில்லை.

எத்தனை பாலங்கள், பெருந்தெருக்கள் மற்றும் வீடுகள் நிர்மாணிக்கப்படுகின்றன என்பது இங்கு ஒரு பொருட்டல்ல, போரினால் பாதிக்கப்பட்ட சிறுபான்மையினரின் துன்ப துயரங்கள் போக்கப்படும் வரைக்கும் நீடித்து நிலைக்கக் கூடிய அமைதி ஏற்படப்போவதில்லை. இந்த மக்களுக்கு உணவு, உடை மற்றும் தங்குமிடம் கிடைத்துவிடுவதால் மாத்திரம் இவர்களது துன்ப துயரங்கள் நீங்கிவிடாது. இந்த வசதிகளைப் பெறுவதற்காக மாத்திரம் கடந்த 30 ஆண்டுகாலப் போர் தொடுக்கப்படவில்லை.

எல்லாவற்றையும் விட முதன்மையாக தாங்கள் சுதந்திரமாக அவமானம் எதுவுமின்றி வாழுகிறோம் என்ற மனப்பதிவு சிறுபான்மையினர் மத்தியில் ஏற்படவேண்டும். போர் முடிவுக்கு வந்து 21 மாதங்கள் கழிந்துவிட்டபோதும் ஒருவர் தமிழராக இருந்தால் சந்தேகத்தின் பெயரில் காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டுத் துன்புறுத்தப்படும் நிலைதான் இன்றும் தொடர்கிறது.

இந்தத் தேசத்தில் உண்மையான, நீடித்து நிலைக்கக்கூடிய அமைதி ஏற்படவேண்டுமெனில் நாட்டினது சிறுபான்மையினரான தமிழர்களாக இருக்கலாம் அன்றி முஸ்லீம்களாக இருக்கலாம், தங்களது இனம் அல்லது மதம் என்பவற்றுக்கு அப்பால், இந்தத் தேசத்தின் சம உரிமையினைக் கொண்ட குடிமக்கள் தாங்கள் என்பதை இந்த மக்கள் உணரும் நிலை ஏற்படவேண்டும்.

அரசியல் தீர்வொன்றுதான் இதுபோன்றதொரு நிலைமையினை உறுதிப்படுத்தும். சரி இத்தகைய அரசியல் தீர்வு நோக்கிய பாதையில் நாங்கள் எந்தளவு தூரம் பயணித்திருக்கிறோம்?

நாட்டினது இனப்பிரச்சினைச்சினைக்கு அரசியல் தீர்வு முன்வைக்கப்படுவது அவசியமானது என அரசாங்கம் உண்மையில் உணருகிறதா?

இந்த நாட்டில் இன ரீதியிலான பிணக்கொன்று இருக்கிறது என்பதையே ஆட்சியிலுள்ள பலர் ஏற்க மறுக்கிறார்கள். இந்த நிலையில் அரசியல் தீர்வு பற்றிப் பேசுவது பொருத்தமற்றதொன்று என்பதே இவர்களின் வாதம்.

ஒகஸ்ட் 2010ல் கொழும்பு நகரத்தின் வெள்ளவத்தைப் பகுதியில் வசித்துவரும் தமிழர்கள் காவல் நிலையங்களில் பதியவேண்டும் என்ற அவமானகரமான நடைமுறைக்கு முகம்கொடுத்தார்கள்.

எந்த இனக் குழுமத்தினைச் சேர்ந்தவர்களின் பதிவுகளை மேற்கொள்வது என முடிவெடுக்கும் அதிகாரம் பகுதிக் காவல் நிலையங்களின் பொறுப்பாதிகாரிகளுக்கு இருக்கிறதாம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள மக்களிடமிருந்து கட்டாயத்தின் பெயரில் பணம் பெறுவதாகவும் அவர்களை குடும்பப் படமெடுக்கவேண்டும் என்றும் சிங்கள மொழியிலுள்ள பல படிவங்களை நிரப்பவேண்டும் என்றும் படையினர் மக்களைக் கட்டாயப்படுத்துவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதி ராஜா இந்த ஆண்டு பெப்பிரவரி மாதம் முறையிட்டிருந்தார். படைத்தரப்பின் இந்த புதிய நடைமுறையானது மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தினை ஏற்படுத்தியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

படைத்தரப்பினரின் இதுபோன்ற செயற்பாடுகள் இனநல்லிணக்கம் மற்றும் நீடித்து நிலைக்கக்கூடிய அமைதி ஆகியவற்றுக்கு ஒருபோதும் வழிவகுக்கப்போவதில்லை.

இலங்கையின் தேசியகீதம் தமிழில் பாடப்படுவது தொடர்பாகவும் கேள்வி எழுப்பப்படுகிறது. 1940ஆம் ஆண்டு ஆனந்த சமரக்கோனினால் இயற்றப்பட்ட நமோ நமோ மாதா எனத் தொடங்கும் இந்தக் கவி வரிகள் . ஆனந்த சமரக்கோன் ஆசிரியராகக் கடமையாற்றிய காலி மகிந்தா கல்லூரியில் முதன் முதலில் பாடப்பட்டிருந்தது.

இந்தக் கவி வரிகளை நாட்டினது தேசிய கீதமாக பிரகடனப்படுத்தலாம் எனப் பரிந்துரைத்த சேர் ஒலிவர் குணதிலக 1951ஆம் ஆண்டு கே.கனகரத்தினம் என்பவரால் தமிழ் மொழிக்கு மாற்றப்பட்ட பிரதியையும் கலாநிதி சி.டபிள்யூ கன்னங்கரவினால் ஆங்கிலத்திற்கு மாற்றப்பட்ட பிரதியையும் இதனுடன் இணைந்து அமைச்சரவைக்குச் சமர்ப்பித்திருந்தார். 1952ஆம் ஆண்டு நமோ நமோ மாதா எனத் தொடங்கும் இந்தக் கவி வரிகளைச் சிறிலங்காவினது அமைச்சரவை நாட்டினது தேசிய கீதமாக அங்கீகரித்தது. 1949 மற்றும் 1950ஆம் ஆண்டுகளில் சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் சிங்களத்திலும் தமிழிலும் தேசிய கீதம் பாடப்பட்டிருந்தது.

தமிழில் தேசிய கீதத்தினைப் பாடுவது சட்ட விரோதமானது எனக் கூறுவதற்கு அந்தக் காலத்தில் விமல் வீரவன்சக்கள் எவரும் இருந்ததில்லை. ஆனால் இன்று நிலைமைகள் மாறிவிட்டன.

இலங்கையில் நீடித்து நிலைக்கக்கூடிய அமைதி ஏற்படவேண்டுமெனில் அரசியல் தீர்வு முன்வைக்கப்படுவது கட்டாயம் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வதாகத் தெரியவில்லை.

'அதிகாரப் பகிர்வுக்கானதொரு' மாற்றீடாக அபிவிருத்தி ஒருபோதும் அமையாது என மனித உரிமைக்காகக் குரல் கொடுப்பவர்கள் எண்ணுகிறார்கள். ஆனால் இது தொடர்பான மாற்றுக் கருத்துக்களும் நிலவுகின்றன.

அதிகாரப் பகிர்வு என்பது போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதனையும் வழங்கப்போவதில்லை என இவர்கள் வாதிடுகிறார்கள். அடிப்படைத் தேவைகள் பூர்த்திசெய்யப்படுமிடத்து நாட்டினது வடக்குக் கிழக்குப் பிராந்தியம் அபிவிருத்தி அடைந்துவிடும் என்றும் பொருளாதார வளத்தினை மக்கள் அனுபவிக்கும் நிலை தோன்றிவிடும் என்றும் இவர்கள் கருதுகிறார்கள்.

இங்கு இனப்பிரச்சினை என ஒன்றும் இல்லையே, இந்த நிலையில் அரசியல் தீர்வு எதற்கு என்கிறார்கள் இவர்கள். இலங்கையின் பெரும்பான்மை சமூகத்தினைப் பொறுத்தவரையில் அவர்களில் பலர் இதே கருத்தையே கொண்டிருக்கிறார்கள்.

போர்க் குற்றங்கள் தொடர்பாக மக்கள் மத்தியில் பலதரப்பட்ட கருத்துகள் நிலவுகின்றன. போர்க் குற்றங்கள் இடம்பெற்றிருக்குமானால் அவை முறையாக விசாரிக்கப்படுவதோடு குற்றமிழைத்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படவேண்டும் என மனித உரிமை ஆர்வலர்கள் வாதிடுகிறார்கள்.

போரினால் உளநலன் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் யாரோ அவர்கள் போரில் மறைந்துபோன தங்களின் அன்புக்குரியவர்களுக்கு நீதி கிட்டவேண்டும் என விரும்புகிறார்கள். அப்போதுதான் கல்லறைகளில் அவர்களது ஆத்மா சாந்தியடையும் என்கிறார்கள். காணாமற்போயிருக்கும் தங்களது பிள்ளை மடிந்துவிட்டனரா அல்லது தடுப்பு முகாம்களில் சித்திரவதையை அனுபவிக்கிறார்களா? எனத் தெரியாததொரு நிலையில் பெற்றோர்கள் இருப்பது உண்மையில் மோசமானது.

ஆனால், மேற்குறித்த இந்தப் பார்வை அனைவரிடத்திலும் இல்லை. ''நாங்கள் போர் தந்த வடுக்களையும் அரசாங்கத்திற்கு எதிரான போர்க் குற்றங்களையும் மறந்துவிட்டு அதிபர் ராஜபக்ச எங்களுக்கு அதிகாரப் பகிர்வைத் தரும் நிலையினை ஏற்படுத்துவோம். போரின் இறுதி நாட்களில் நடந்தேறிய சம்பவங்கள் எங்களது மனதைப் பாதித்துவிட்டனதான். ஆனால் அதிபர் ராஜபக்ச சுதந்திரமான போர்க்குற்ற விசாரணைகள் இடம்பெறுவதற்கு ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. இந்த நிலையில் பொறுப்புச்சொல்லும் பொறிமுறை ஏற்படுத்தப்படவேண்டும் என்றும் தவறிழைத்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்றும் வாதிடுவது விவேகமான முடிவாக இருக்காது'' என்பது மற்றொரு தரப்பினரின் வாதம்.

ஆனால் எது எவ்வாறிருப்பினும் இன நல்லிணக்கம் ஏற்படவேண்டுமெனில் உண்மை வெளிவரவேண்டும். இதுநாள் வரைக்கும் தொடர்ந்த போரினால் ஏற்பட்ட வடுக்கள் ஆற்றப்படவேண்டும். இந்த வடுக்களை முடிமறைப்பதற்கு முனைந்தால், ஒருநாள் அதிலிருந்து சீழ் வடியத்தான் செய்யும். ★

# பொய் எழுத்து

> முகப்பு பக்கத்திலிருந்து, முடிவுப் பக்கம் வரை புலிகளின் அநியாயங்கள், அட்டூழியங்கள் மட்டுமே பதியப்பட்டிருக்கும். தாம் சுத்தமானவர்கள், இலங்கை இராணுவத்தினரும் புனிதமானவர்கள், புலிகள் மட்டுமே முழுக் கொலைகளுக்கும் பொறுப்பு என்ற பாணியில் தான் முழுக் கட்டுரைகளும் முடித்து வைக்கப்படும்.




**தம்பி**

ஈழப்போராட்டம் முனைப்புப்பெற்ற காலத்திலிருந்து அது எழுந்து நடக்க முடியாத நிலைக்கு வரும் வரையிலான காலப்பகுதியில் தமிழ்ப் பத்திரிகைகள் ஆற்றிய பங்களிப்பு கணிசமானதாகும். அதன் வளர்ச்சிக்காகக் கொடுக்கப்பட்ட உயிர்க்கொடைகளும், உழைப்புக்களும் தமிழர்களால் என்றுமே மறக்கவோ, மறுக்கவோ முடியாதவைகள். இதற்காக உயிர்க்கொடுத்தோர் பட்டியல் நீளமானது.

இத் தமிழ்ப் பத்திரிகைகள் சுயாதீனமாகவும், கட்சி, இயக்க சார்புடையனவாகவும் வெளிவந்து தமிழ் பேசும் மக்களது கருத்துரிமையை வெளிப்படுத்துவதில் கவனம் செலுத்துபவைகளாக இயங்கி வந்திருக்கின்றன. இந்த இரண்டு வகையிலுள்ளும் சுயாதீன, தனியார் பத்திரிகைகள் ஒரளவுக்காவது நடுநிலமையைப்பேண முற்பட்ட போதிலும் சில சந்தர்ப்பங்களில் அத்துமீறிய துப்பாக்கிகளின் குரல்கள் அவற்றைத் தமது ஊது குழல்களாக செயற்பட வைத்தன. அக்காலங்களில் விரும்பியோ விரும்பாமலோ உண்மைகளை பொய்யாக்கியும் பொய்களை உண்மையாக்கியும் கூற வேண்டிய கட்டாயத்திற்குள் இவைகள் தள்ளப்பட்டன. இந்த நடைமுறைகள் ஈழப்போராட்டத்தை முன்னகர்த்துவதனூடாக மக்களை அரசியல் மயப்படுத்துவதற்கான போராட்டத்தை நியாயப்படுத்துவதற்கான, வழிகள் என்றும் நோக்கப்பட்டது. எம்மில் உள்ள தவறுகளை வெளிப்படுத்துவதன் மூலம் நாம் எதிரியிடம் தோற்று விடுவோம், முதலில் பொது எதிரியை அழித்துவிட்டு பின்னர் எமக்குள் இருக்கும் ஒழுங்கீனங்களைத் திருத்திக் கொள்வோம், நமது பலவீனங்கள் வெளித் தெரியக் கூடாது, என்பன போன்ற வாதங்கள் ஊடகங்களின் கண்களை மறைத்து மாயைகளைப் பற்றி பக்கம் பக்கமாக பேச வைத்தன. எழுத வைத்தன.

இந்த மேலோட்டமான பத்திரிகைப் பார்வைகள் விடுதலைப் புலிகளை முன்னிலைப்படுத்தி முன்னகர்த்தப்பட்ட போராட்டத்திற்கு ஒரு வகையில் உடனடிச் சாதகத் தன்மைகளையும், நீண்டகால நோக்கில் பாதகத் தன்மைகளையும் ஏற்படுத்திவிட்டன.

1990களுக்கு பின்னர் ஈழத்தமிழர் அரசியல் பற்றிய ஊடகப் பதிவுகள், விடுதலைப் புலிகளைத் தவிர வேறொன்றும் இல்லை என்றளவுக்கு கொண்டாடியது. பாய் அளவுப் பத்திரிகைகளில், பக்கம் பக்கமாக எழுதப்படும் கட்டுரைக் கடல்களில் புலிகள் பற்றிய புகழ்ச் சொற்களை நீக்கிவிட்டால் அதில் எதுவுமே இருப்பதில்லை என்ற நிலை நிலவியது. சமாதானப் பேச்சுவார்த்தைக் காலத்தில் பத்திரிகைக் கட்டுரைக்காரர்களின் வதை தாங்கவே முடிந்ததில்லை. ஆயுத பலம், புலனாய்வுப் பலம், கடற்புலிகளின் மதியூகம், படைவலுச் சமநிலை, கடல் இறையாண்மை, வான் புலிகளின் விஸ்வரூபம் என அளவுக் கணக்கில்லாத புழுகுகளினாலும், அதீத நம்பிக்கைகளினாலும் அரசியல் எதிர்வு கூறலை கற்பனைக்குரிய ஒன்றாகவே மாற்றினர் கட்டுரையாளர்கள்.

இந்த மாயைக்குள் பலியாகிய மக்கள், ஊடகங்கள் தரும் செய்தியை எந்த விமர்சனமுமின்றி, தெளிவான நோக்கமும் இன்றி ஏற்றுக்கொண்டனர். புலிகளும் தமது பலம் மீது நம்பிக்கையை வளர்த்துக் கொண்டனர். அது வெறும் கற்பனை என்பதைப் புலிகளின் புலானாய்வுப் போராளிகள் கூட கண்டுபிடிக்க முடியாதளவுக்கு தமிழ் ஊடகங்கள் பொய்களை மெய்யாக்கிக் காட்டின. 2006 வரை தான் இந்நிலைமையென்று பார்த்தால் புலிகளின் கற்பனைக் கோட்டைகள் மீது கல்லெறி விழுந்து சரியத் தொடங்கிய காலமான 2006க்குப் பிறகும் இதே நிலைதான். ஒரே நாளில் அடிப்பார்கள், பிடிப்பார்கள் என ஒவ்வொரு பின்வாங்கல்களையும் வெற்றிக்கான தந்திரோபாய பின்வாங்கல் என வர்ணித்து, அதனையும் தமது படையியல் ஆய்வின் திறன் என்பதை புலப்படுத்தினர் தமிழ் அரசியல் ஆய்வாளர்கள். கிளிநொச்சி கடந்து முள்ளிவாய்க்காலில் முடங்கிக் கொள்ளும் வரைக்கும் இந்த எண்ணத்திலிருந்து சற்றும் விலகாத, தோல்வியை ஒப்புக்கொள்ளாத மனநிலையுடனேயே எழுதினர். இந்த மெய்மறந்த, உலகத்திலிருந்து விடுபட்ட படைப்புநிலை தமிழ் மக்களை ஏமாற்றியதிலும், புலிகளை தோற்கடித்ததிலும் முடிந்தது. முள்ளிவாய்க்காலுக்குப் பின் புலிகளின் சாகசங்களைப் பற்றி சில இணைய தளங்கள், புகழ்கின்றனவே தவிர, பத்திரிகை அரசியல் ஆய்வாளர்கள் விட்டுடொதுங்கிவிட்டனர்.

அவர்களின் கவனமெல்லாம் இப்போது நாடு கடந்த அரசியலிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலும், தேர்தல்களிலும் தஞ்சமடைந்துவிட்டது. இவைகளையும் வெகுவிரைவில் எழுதிக் கவிழ்த்து விடுவார்களோ என்ற அச்சம் அண்மைய பத்திரிகைக் கட்டுரைகளை வாசிக்கும்போது தோன்றுகிறது.

இங்கு பேசப்பட்டவைகள் நடப்பு அரசியலை எழுதுதல் தவறு என்ற அர்த்தத்தில் சொல்லப்படவுமில்லை, மக்கள் நலனில் அக்கறையற்றவைகளாக செயற்பட்டன என்றும் சொல்லப்படவில்லை. மாறாக எழுதப்படுபவைகள், அச்சில் வருபவைகள் உண்மையானவையாக, வாசிப்பவரைச் சிந்திக்கத் தூண்டுவனவாக, சுயவிமர்சனத்தை ஏற்படுத்தக் கூடியவையாக, கற்பனை கடந்தனவாக இருக்க வேண்டும். புலிகளை எழுத்தில் ஏமாற்றியது போதும். எஞ்சியிருக்கும் தமிழர்களையாவது எழுத்துக்களிலிருந்து காப்பாற்றுதல் வேண்டும்.

இது ஒருபுறமிருக்க, ஈழப் போராட்டம் தொடங்கிய காலத்தில் இல்லாவிட்டாலும், புலிகளின் தன்முனைப்புக்குப் பின்னர் அதிலிருந்து பிரிந்து சென்றவர்கள், பகைத்துக் கொண்டவர்கள் நடத்திய பத்திரிகைகளின் பிதற்றல், குடிகாரர்களின் புலம்பல்களை விஞ்சி விடும். முகப்பு பக்கத்திலிருந்து, முடிவுப் பக்கம் வரை புலிகளின் அநியாயங்கள், அட்டூழியங்கள் மட்டுமே பதியப்பட்டிருக்கும். தாம் சுத்தமானவர்கள், இலங்கை இராணுவத்தினரும் புனிதமானவர்கள், புலிகள் மட்டுமே கெட்டவர்கள் எனவும் அவர்களே முழுக் கொலைகளுக்கும் பொறுப்பு என்ற பாணியில் தான் முழுக் கட்டுரைகளும் முடித்து வைக்கப்படும். முழுக்க முழுக்க குற்றச்சாட்டு அப்பத்திரிகைகளாக மாறிவிட்ட இவைகள் புலிகளின் காணாமல்போதலின் பின் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுவிட்டன. எழுதுவதற்கு விடயம் இல்லை. இப்போது புதைகுழிக்குள் இருக்கும் புலிகளைப் பற்றி பேசத் தொடங்கியிருக்கின்றனர்.

உண்மையில் இவ்விரு பத்திரிகைத் தரப்பினரும் இதுவரை காலமும் பயணித்த திசை இரு துருவங்களானவை. தமிழர்களை முன்னிலைபடுத்தியவர்களை ஆதரித்தல், எதிர்த்தல் என்ற இரு வகையறாக்களுக்குள் நின்று முழங்கினரே தவிர, அடிநிலைத் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகள் என்ன என்பதை யாரும் கருத்தில் எடுக்கவில்லை. இப்போதும் அந்நிலை தொடரவே செய்கிறது. முள்ளிவாய்க்காலுக்கு பின்னர் மக்களது இயல்பு வாழ்க்கையின் சீர்குலைவு, மீளக்குடியமர்வின் பின்னரான சமூகப் பண்பாடு நிலைகளில் ஏற்பட்டுவரும் சிதைவுகள், முன்னாள் போராளிகளின் அவலம், இறுதிக்கட்டப் போரில் அங்கவீனர்களாக்கப்பட்டவர்களது நிலைமைகள், இன்னும் புனர்வாழ்வில் இருப்பவர்களின் எதிர்காலம், யுத்தம் வடுக்களாய் விட்டுப்போன உளவியல் சிக்கல்கள் எனப் பேசவேண்டிய எத்தனையோ பொதுமக்கள் நலன் சார், அரசியல் சார் விடயங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் விடுத்து நம் பத்திரிகைகள் எவ்வளவு காலத்திற்கு கட்சி அரசியலும், இயக்க அரசியலும், படையியல் கணிப்புக்களும் நடத்திக் கொண்டிருக்கப் போகின்றனவோ தெரியவில்லை.

வியாபாரம், சொந்த மற்றும் கட்சி நலன்களைத் தவிர வாசிக்கும் பொது மக்களைப் பற்றியும் தமிழ் அச்சு ஊடகங்கள் சிந்தித்து செயற்பட வேண்டும். நம்மிடையே காலையில் பத்திரிகை படித்துவிட்டே காலைக்கடனை சீராக முடிப்பவரும், பத்திரிகை வாசித்த பின்னரே முதல் தேனீர் அருந்துபவரும், உண்பவரும் என அதிகமானோர் இருக்கின்றனர். ஞாயிற்றுக்கிழமைகள் விடுமுறை கிடைப்பதே பத்திரிகைகள் வாசிப்பதற்காகத் தான் என நினைத்து வரிசையில் நின்று பத்திரிகை படிப்போரும் உண்டு. இவர்களையாவது கருத்தில் கொண்டு தமிழ் பத்திரிகைகள் மக்கள் நலனில் உண்மையான அக்கறையோடு மக்களைப் பற்றிப் பேச வேண்டும். தொடர்ந்தும் அரசியல்வாதிகளின் கதைகளை மெருகேற்றிக் கொண்டிருந்தால் நம்மை நாமே அரசியல் தற்கொலையொன்றுக்கு தயார்ப் படுத்திய பெருமை பத்திரிகைகளுக்கும் உரியதாய் மாறிவிடும். ✱

# வாடகைப் புரட்சிகள்.....

*(3ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

அதிபர் அலி அப்துல்லா ஷாலே 32 வருடங்களாக ஆட்சியில் இருக்கிறார். இவரது ஆட்சியில் நாடு நலிவடைகிறது. ஊழல் மலிந்து விட்டது. இராணுவத்தினரின் கெடுபிடி நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. இவைகள் எல்லாவற்றுக்கும் எதிராகவே பெப்ரவரி மாதம் தொடக்கம் தலைநகர் ஷனாவின் பல்கலைக்கழக சதுக்கத்தில் இருந்து மக்கள் கிளர்ச்சியில் ஈடுபடுகின்றனர். அரசுக்கு எதிரானவர்கள், ஆதரவானவர்கள் என இரு பிரிவாகப் பிரிந்து கலகத்தில் ஈடுபடுவதால், இதுவரை நூற்றுக்கு மேற்பட்டோர் பலியாகியும், ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் உள்ளனர். இதனைத் தொடர்ந்து சில இராணுவ உயரதிகாரிகளும் மக்கள் பக்கம் சாய்ந்தனர்.

இந்த நிலமைகள் உடனடியாகப் போராட்டக்காரர்காரரிடம் மன்னரைப் பணிய வைத்தது. அவர்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கும்படியும், அமைச்சரவையைக் கலைத்து, தானும் பதவி விலகுவதாகவும் அவர் அறிவித்துள்ளதோடு, இராணுவ உயர் அதிகாரிகளையும் பதவி விலகும்படியும் உத்தரவிட்டுள்ளார். மேலும் இராணுவத்திடம் ஆட்சியைக் கையளிக்காமல் நம்பகமானவர்களிடம் பொறுப்பைக் கையளிக்கப் போவதாகவும் அறிவித்திருக்கிறார்.

இதேபோல் தான் சிரியாவிலும் 1963 இலிருந்து பாத் கட்சி ஆட்சியிலிருந்து வருகிறது. அக்காலத்திலிருந்தே இற்றைவரைக்கும் அவசரகாலச் சட்டம் நடைமுறையில் உள்ளது. மக்கள் மீது எல்லையற்ற வன்முறைகளை சொந்த நாட்டுப் படையினரே மேற்கொள்கின்றனர். இதற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக கடந்த 18 ஆம் திகதியிலிருந்து மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அரச படைகளின் கண்மூடித்தனமான தாக்குதலில் 150 க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டதுடன் 75 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர். அங்கும் அவசரகாலத் தடையை நீக்குவதாக மன்னர் அறிவித்திருக்கிறார்.

இவற்றை அவதானிக்கும் போது, இந்நாடுகளின் மக்களது புரட்சி உடனடி உத்தரவாதத்தினால் மழுங்கடிக்கப்பட்டதாகவே தெரிகிறது. மக்கள் கோரிய ஆட்சி மாற்றம் நிகழாமல் ஆள்மாற்றம் தீர்வாக முன்வைக்கப்பட்டு மக்கள் வீடுகளுக்குத் திருப்பியனுப்பப்படுகின்றனர். புரட்சி வென்றதாகக் கூறப்படும் எல்லா வடஆபிரிக்க நாடுகளினது நிலமையும் இதுதான். அந்த நாடுகளது எண்ணெய் வளத்தைச் சுரண்டி அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகளுக்கு வழங்க முதலிருந்தவர்களுக்குப் பதிலாக வேறு நபர்கள் கிடைத்துவிட்டனர். வேறு நபர்களைத் தெரிந்தெடுக்கத் தடைவிதிக்கும் தலைவர்கள் பயங்கரவாதிகளாக்கப்பட்டு மக்களைக் காக்கும் மனிதாபிமான போர் ஒன்றினூடாக அதனை அடைகின்றன மேற்குலக நாடுகள். இதற்கான அறுவடைகளும் கிடைத்து வருகின்றன. துனிசியாவில் பென் அலிக்குப் பதிலாக நியமிக்கப்பட்டவரும், எகிப்திய இராணுவத்தின் முக்கிய தளபதிகளும், லிபியாவில் கிளர்ச்சியை வழிநடத்தும் லிபிய விடுதலைக் கூட்டணியினரும் அமெரிக்கவாதிகள். பஹ்ரைன், சிரியா, யேமன், அல்ஜீரியா போன்றவற்றின் இப்போதிருக்கும் ஆட்சியாளர்கள் அனைவரும் அமெரிக்கவாதிகள். இவர்கள் மக்களுக்கு உரிய தீர்வுகளை முன்வைக்கும்படி பணிக்கப்பட்டனர். அந்தக் கட்டளைக்கு பணியாவிட்டால் எகிப்து, துனிசீயா, லிபியா போன்று விரட்டியடிக்கப்படும் போது ஒளிந்து கொள்ளக்கூட



இடமிருக்காது என்கிற பயம் அவர்களைப் பணிய வைத்துவிட்டது. மக்களும் வென்றுவிட்ட குதூகலிப்பில் பூச்செண்டுகளைப் பரிமாறிக் கொள்கின்றனர். வட ஆபிரிக்கா மீண்டும் அமெரிக்காவிடம் சரணடைகிறது. மக்கள் எதற்கெதிராகக் கிளர்ந்தெழுந்தார்களோ அதற்கே ஆதரவாளர்களாக்கப்படுகின்றனர். அந்நியப் படையில் நிகழ்ந்தேறும் புரட்சிகள் நடந்து முடிவது இப்படித்தான் மக்கள் சுயமாகப் போராடவில்லை என்று குறிப்பிடவில்லை. அமெரிக்கர்களை வழிநடத்துநர்களாய் வைத்துக் கொண்டு போராடுகிறார்கள். வெற்றிக்கும் தோல்விக்கும் இடையில் புரட்சிகள் தொங்கிக் கொண்டன.



# ஐந்து லட்சத்துக்கு அடிபணியலாமா?

கம்பன் எழுதிய ராமாயணத்தின் இனிய இலக்கியச் சுவையைக் கற்றறிந்தோர் எம்மிடையே நிறையப்பேர் உள்ளனர். கம்பன் கவியால் தம்மைக் கற்றறிந்தோர் என்று தம்பட்டமடித்துப் பலரைத் தம் கைவசப்படுத்திய கபட நாடக கற்றுக்குட்டிகளும் எம்மிடையே இருப்பதை, இருந்ததைத் தமிழர்கள் அறியாமலில்லை. தமிழின் பெருமையை தமிழரின் வாழ்வின் உரிமையைத், தமிழ் மக்களின் சுயத்தைக் காத்த பெருமைக்குரிய எங்கள் முன்னோரின் உயர்வைச் சீர்குலைக்கும் வகையில் கொழும்பில் நடந்த நிகழ்வொன்றில் வெளிப்படுத்தப்பட்ட கருத்தை பத்திரிகைகள் செய்தியாகப் போட்டிருந்ததைப் பார்த்தோம்.

தமிழ் மக்கள் சுயமிழந்து வாழ்ந்ததில்லை. அவர்களைச் சுயமிழக்கச் செய்ய எவராலும் இயலாது. இந்த உண்மைகளையும் தமிழர்களின் உறுதியையும் உணராது ஒரு சிலர் ஆலயக்கட்டத்திருப்பணிக்காக் காசு பெற்றுக் கொண்டு தமிழரின் கௌரவத்தை குறைத்து எடைபோடுவதை அனுமதிக்க முடியாது.

கம்பன் கழகமோ, காசுக்காகத் தற்புகழ்ச்சி பாடும் எவருமோ எமது மக்களைக் காட்டிக் கொடுத்துத் தமது சுயமிழந்து பிதற்றலாம். அந்தப் பிதற்றல்களையெல்லாம் தமிழர்கள் என்ற சுயத்தோடு வாழும் எம்மவர்கள் என்றும் ஏற்றுக் கொள்ளவில்லை.

உண்மைகள் எங்கே ஒளித்துக் கொண்டனவென்று ஏமாந்தவர் எவருமே இல்லாநிலையில், இந்தச் சுயமிழந்த கம்பன் கழக அமைப்பாளரின் கதைகள், கருத்துக்கள் தமிழ் மக்களின் மனத்தை வருத்துகின்றன.

கௌரவமாக வாழும் தமிழினம், கௌரவமாக வாழாத் தம்மையே அர்ப்பணித்த தமிழினத்தின் மத்தியில் அதற்காகத் தம் கருத்துரைக்கும் தமிழினம், இங்கே இந்தச் செயலகண்டு வருந்துகிறது.

இன்றைய் இந்தத் துயர்நிலைக்குக் காரணமானோர் யார்? என்பதை உணரத் தலைப்படாது, உன்னி நோக்காது, காசைக் கண்டதும் வள்ளல் என்று போற்றுதல் போல் ஒட்டுமொத்தத்தில் ஈழத்தமிழினத்தை இழிவுபடுத்தும் வகையில் கருத்து வெளியிட இவர் யார்? யாரைச் சுயமிழந்தோரெனக் கருதுகிறார். தமிழ் மக்களின் தலைவர்களாக இருக்கும் தகுதி யாருக்கு உண்டு என்பதைத் தீர்மானிக்கும் உரிமை தமிழருக்கே உண்டு. எஸ்.ஜே.வி.செல்வநாயகம், ஜீ.ஜீ.பொன்னம்பலம், சி.சுந்தரலிங்கம், அ.அமிர்தலிங்கம், வன்னியசிங்கம் போன்ற தமிழ் அரசியல்வாதிகள் பலர் எம் உரிமைகளுக்காக வாதாடினார்கள், போராடினார்கள். எவருமே சுயமிழந்து அடிமைப்பட்டுக் கையேந்தும் அரசியல் நடத்தியதில்லை.

கம்பனின் காவியத்தைப் பட்டிமன்றமாகவும், கவியரங்காகவும், நாட்டுக் கூத்தாகவும் புனைந்து பொழுது போக்குப் புலமையாளராய் விழா நடத்தித் திரிந்தவர்கள், அரசியல் பேசுகிறார்கள். இவர்கள், எமது தமிழினத்தின் வீரத்தையும், விவேகத்தையும் அடகு வைத்துக் காசு பெறுவது கேவலமென்பதை எப்போது உணரப் போகிறார்கள்? அரசியல் தெரியாவிட்டால் தெரியாதென்று சொல்வதுதானே தகுதியுடையது. அதை விடுத்து இராமனா? இராவணனா? உயர்ந்தவன் என்ற பட்டிமன்றத்துக்குத் தலைமைதாங்கி, பகிடி விட்டு இருவருமே உயர்ந்தவர்கள் என்று தீர்ப்புக் கூறும் இவருக்கு ஏனையா அரசியல்? கம்பன் கழகத்தோடு தனது இராமர் கதையை முடித்துக் கொள்ளாமல் அரசியல் பேச வந்து ஆப்பிழுத்த குரங்காகி நிற்கும் ராஜாவுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.★

**எஸ்.பொன்னையா**
ஆவரங்கால்

# குடாநாட்டுக் கொலைகளின் மர்மம் துலங்குமா?

கடந்த ஆண்டு இறுதிப் பகுதியில் டிசெம்பர் மாதத்தில் தொடர்ந்த கடத்திக் கொலை செய்தல், மர்ம மரணங்கள் மீண்டும் இப்போது அரங்கேற ஆரம்பித்துள்ளன.

சங்கானை முருகமூர்த்தி ஆலயக் குருவின் கொலையுடன் ஆரம்பித்த கொலைகள், கொள்ளைகள் குடாநாட்டை அச்சத்தில் மூழ்க வைத்தன.

அரச அதிகாரிகள், படையினர், பொலிஸ் உயர் அதிகாரிகள் எடுத்த நடவடிக்கைகள் காரணமாக அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருந்தன. குடாநாடு அமைதி நிலைக்கு ஓரளவு திரும்பியிருந்தது.

வேறொரு பாணியில் - அச்சமூட்டும் வகையில் கடந்த வாரத்தில் சில கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

கொலைகளின் நோக்கம் என்ன வென்ற தகவல்கள் வெளிவராத நிலையில், திட்டமிட்டு ஒரு குழு இந்தக் கொலைகளின் பின்னால் செயற்படுகிறது என்பது மட்டும் தெரிகிறது.

சில்லாலையில் செபஸ்தியாம் பிள்ளை மரியதாஸ் (வயது 65) என்பவர் கடந்த 18 ஆம் திகதி காணாமல் போயிருந்தார். அவர் நான்கு நாள்களின் பின்னர் மாதகலில் உள்ள வயற் கிணறு ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வயிற்றுப் பகுதியில் நைலோன் கயிற்றால் கட்டப்பட்டு கல் ஒன்றுடன் பிணைக்கப்பட்ட நிலையில் கிணற்றில் மிதந்த நிலையில் அவர் இவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது. அவரது உடலில் அடிகாயங்கள் காணப்பட்டதாக சட்ட வைத்திய வட்டாரங்கள் தெரிவித்ததால், அவர் கொலை செய்யப்பட்ட பின்னர் கிணற்றில் வீசப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப் பட்டுள்ளது.

அதேபோன்று, வாகன விபத்து ஒன்றில் காயமடைந்ததாகத் தெரிவித்து திருநெல்வேலி படைக்காவலரணுக்கு அருகில் இருந்து மயங்கிய நிலையில் கடந்த 15ஆம் திகதி இளம் ஆசிரியர் ஒருவர் யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். மயக்கம் தெளியாத நிலையில் அவர் பத்து நாள்களின் பின் மரணமாகியுள்ளார்.

குப்பிளானைச் சேர்ந்த சம்பந்தன் சக்திதரன் (வயது 28) என்ற இளம் ஆசிரியரின் மரணத்தை ஆராய்ந்த சட்ட வைத்திய வட்டாரங்கள், அவரின் உடலிலும் அடிகாயங்கள் காணப் பட்டன எனத் தெரிவித் துள்ளன.







அதேவிதமாக கோண்டாவிலில் சபாரத்தினம் ஜெயந்தன் (வயது 53) என்ற குடும்பஸ்தரும் மர்மமான முறையில் கொல்லப்பட்டுள்ளார்.

கோண்டாவிலில் இராணுவக் காவலரணுக்கு சமீபமாகவுள்ள அவரது வீட்டில் வைத்து இவர் தாக்கப்பட்டு, படுகாயத்துடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு கடந்த 27 ஆம் திகதி மரணமாகியுள்ளார். தாக்குதல் இடம்பெற்ற 19ஆம் திகதியில் இருந்து மயக்க நிலையில் இருந்ததால், தாக்குதல் தொடர்பான தகவல்கள் குறித்து வாக்கு மூலம் பெற முடியாது போனதாக கூறப்படுகிறது.

இந்தச் சம்பவங்களுக்கு மேலாக லண்டனில் இருந்து வந்த மீசாலையை சேர்ந்த கதிரவேலு அஜந்தன் (வயது 29) என்பவர் கடந்த 21 ஆம் திகதி யாழ்.நகரில் வைத்து வெள்ளை வானில் வந்தோரால் கடத்தப்பட்டார்.

'சிகரெட்' துண்டுகளால் அவரது உடலில் சுட்டு, சித்திரவதை செய்த பின்னர் வயல்வெளிப்பகுதியில் வீசப் பட்டுள்ளார்.

அதற்கு முன்னால் நல்லூரில் வைத்து 'எக்ஸ்போ' ஹோட்டலின் முகாமையாளர் வசிகரன் என்ற குடும்பஸ்தரும் கடத்தப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

2006 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆயிரக்கணக்காண இளைஞர்கள் கண்டபடி வீதிகளில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டனர். தினம் ஆறு, ஏழு பேர் என சகல இடங்களிலும் இளைஞர்கள் ஈவிரக்கமின்றி சுட்டுக் கொல்லப்பட்டனர். இனந்தெரியாதவர்களால் மேற்கொள்ளப்பட்ட அந்தக் கொலை வெறியாட்டம் யுத்தம் முடிந்தபின் முடிவுக்கு வந்தது.

விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களைத் தான் கொல்கிறோம் என்ற தோரணையில் இந்த கொலைப் படலம் தொடர்ந்தது. இன்று விடுதலைப் புலிகள் ஒழிக்கப்பட்ட நிலையில் இடம் பெறும் கொலைகள், ஆள்கடத்தல்கள் ஆகியவற்றின் பின்னணியில் இருப்பவர்கள் யார் என்ற கேள்வி எழுந்துள்ளது.

குடாநாட்டு மக்களை அச்சத்தில் வைத்திருப்பதற்காக இத்தகைய சம்பவங்களை இனந்தெரியாத குழு திட்டமிட்டு முன்னெடுத்து வருகின்றதா என மக்கள் சந்தேகம் வெளியிடுகின்றனர்.

பெரும்பாலான சம்பவங்கள் படையினரின் காவலரண் அமைந்துள்ள பகுதிகளுக்கு சமீபமாக இடம்பெறுவதால், படையினர் அவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கேட்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் நீதிமன்றங்கள், பொலீஸ் நிலையங்கள் ஒழுங்காகச் செயற்படுவதால், குடா நாட்டில் தொடரும் மர்ம மரணங்களுக்கான சூத்திரதாரிகளை கண்டு பிடித்துத் தண்டிப்பதன் மூலமே மக்களின் அச்சநிலையைப் போக்கமுடியும்.

இடம்பெறும் சம்பவங்கள் தனிப் பட்ட காரணங்களுக்காகவே எனக் கருதினாலும் 1983 ஆம் ஆண்டுக்கு முந்திய பயங்கரச் சூழ்நிலை மீண்டும் திரும்புகிறதா என்ற கேள்வியும் எழுகிறது.

நடக்கும் சம்பவங்களில் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு, தண்டிக்கபடப்டு சட்டம், ஒழுங்கு பேணப்படுமாயின், மக்கள் அச்ச நிலையில் இருந்து மீள்வர்.✱

**யாழவன்**

# நாட்டின் கெட்ட பெயர் அகல...

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அரசு- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உப- குழுவின் பேச்சுக்களின் பந்து தற்போது அரசின் பக்கமே இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளது.

இரு தரப்புக்களுக்கும் இடையில் மூன்று கட்டப் பேச்சுக்கள் முடிவடைந்துள்ளன. நிரந்தரத் தீர்வை நோக்கிய பேச்சுக்கள் மூன்றாம் கட்டமே இடம்பெற்றுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்வது தொடர்பான தமது யோசனைகளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முன்வைத்தது.

கடந்த மாதம் 18 ஆம் திகதி நடந்த மூன்றாம் கட்டப் பேச்சுக்களின் போது அதிகாரப்பகிர்வு குறித்து விரிவாகப் பேசப்பட்டுள்ளது. ஒன்பது அம்சங்கள் கொண்ட யோசனைத் திட்டத்தை கூட்டமைப்பு அரசுத் தரப்பிடம் கையளித்துள்ளது.

அத்திட்டம் குறித்து ஆராய்ந்த போது சில விடயங்களில் பச்சைக் கொடி காட்டிய அரசுத் தரப்பு, சில விடயங்கள் குறித்து அரச உயர் மட்டத்துடன்,கலந்துரையாட வேண்டும்; அதற்கு கால அவகாசம் தேவை எனத் தெரிவித்து அடுத்த கட்டப் பேச்சை ஒரு மாதத்துக்குத் தள்ளி வைத்தது.

இந்தப் பேச்சு இடம் பெற்று 7 நாள்கள் கழித்து அதாவது கடந்த மாதம் 25 ஆம் திகதி உள்ளூர் பத்திரிகை ஆசிரியர்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சந்தித்துள்ளார்.

அப்போது அவர் தெரிவித்த கருத்துக்கள் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளன.

''இனப்பிரச்சினைக்கு எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய நிரந்தர தீர்வை ஏற்படுத்துவதற்கு அரசு ஆர்வமாக இருக்கிறது. 60 ஆண்டுகால பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காண்பது கடினம். அதனால் எல்லாத் தரப்பினருடனும் இப்போது கலந்தாலோசனை நடத்தி வருகிறோம். தமிழ்த் தேசியக் கூட்ட அமைப்பினருடனும் இப்போது பேச்சு நடை பெறுகிறது. தீர்வுக்கான தமது யோசனையை கூட்டமைப்பு இன்னும் முன்வைக் கவில்லை. இப்படி ஜனாதிபதி பத்திரிகை ஆசிரியர்களிடம் தெரிவித்தார்.

கூட்டமைப்பு யோசனையை முன்வைத்து அதுபற்றி அரசு- கூட்டமைப்பு கூடிப் பேசி ஒருவாரம் கழிந்த நிலையில் ஜனாதிபதியின் இந்தக் கருத்து வெளிவந்துள்ளது.

அரச தரப்பு அதுவரை தாம் கூட்டமைப்புடன் நடத்திய பேச்சுத் தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்தாலோசனை நடத்தவில்லையா? அல்லது அடுத்த பேச்சுத் திகதி வரை பேசிய விடயங்கள், கூட்டமைப்பின் யோசனை ஆகியவற்றை அரச தரப்பு கிடப்பில் போட்டுவிட்டதா? என்ற கேள்விகள் எழுகின்றன.

தமிழர் தரப்புடன் பேச்சு என்று சர்வதேசத்துக்கும் இந்தியாவுக்கும் காட்டிக் கொண்டு காலத்தை இழுத்தடிக்கும் அரசின் உள்நோக்கமா இது எனச் சந்தேகம் கிளப்பப்படுகிறது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியையும், அறுதிப் பெரும் பான்மை ஆட்சியையும் கொண்டுள்ள இன்றைய ஆட்சியாளர்கள் அவற்றைப் பயன்படுத்தி இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பார்கள் என எதிர்பார்த்திருக்கும் தமிழ் மக்களுக்கு ஏமாற்றம் தான் மிஞ்சும் போல் தெரிகிறது.

தமிழ் மக்களால் ஏகோபித்து தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்தும் பேச்சை உருப்படியாக முன்னெடுத்து தமிழ் மக்களுக்கு ஒரளவு ஆறுதலைத் தரும் தீர்வை அரசு முன்வைக்க முனையாவிட்டால், தீர்வு என்பது சாத்தியப்படவே மாட்டாது என்பதே சகலரின் கணிப்பாகும்.

தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினையாக கடந்த 60 ஆண்டுகளாகத் தொடரும்பிரச்சினைக்கு எப் போது தான் தீர்வு எட்டப்படும்? நாடு எப்போது தான் பொருளாதாரத்தில் வளர்ச்சி காணும்? சர்வ தேச மட்டத்தில் இலங்கை சம்பாதித்துள்ள கெட்ட பெயர் எப்போது துடைத்தெறியப்படும்? இவை யாவும் இன்று கேள்விக்குறிகளாகவே இருந்து வருகின்றன.

அதற்கான காலம் எப்போது கனியும் எனக் காத்திருக்க வேண்டியது தான்.✱

# மரணத்தின் விளிம்பு வரைசென்று மீண்டேன்

**விடுமுறையை உல்லாசமாகக் கழிக்கும் நோக்கில் யேமன் நாட்டுக்குச் சென்ற மேரிக் குயீன் என்ற சர்வதேச தொண்டு நிறுவனத்தின் பெண் அதிகாரியும் அவருடன் சென்ற உல்லாசப்பயணிகள் சிலரும் எதிர்பாராத விதமாக இஸ்லாமிய தீவிரவாதிகளிடம் பணயக் கைதிகளாக அகப்பட்டுக் கொள்கின்றனர். அவர்களை மீட்டெடுக்க வரும் மீட்புக் குழுவினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையில் இடம்பெறும் சண்டையின் நடுவில் அகப்பட்டுக் கொள்ளும் உல்லாசப் பயணிகள் உயிராபத்தை எதிர்நோக்க நேரிடுகிறது.**




மீட்புப் படையினர் எம்மையும் கடத்தல்காரர்களையும் சிறுகச் சிறுகச் சுற்றிவளைத்தபடி படிப்படியாக முன்னேறி வருவதை என்னால் உணரமுடிந்தது. இருப்பினும் நாங்கள் அவர்களைக் கண்டு கொள்ளக் கூடிய தொலைவுக்கு அப்பாலேயே அவர்கள் இருந்தனர். இருதரப்பினருக்குமிடையில் நடைபெறும் துப்பாக்கிச் சமரில் நாங்கள் எவ்விதம் பாதுகாப்பாக மீட்கப்பட முடியும் என என்னால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. சற்று நேரத்தில் மீட்புப் படையினர் துப்பாக்கிச் சூட்டெல்லைக்குள் வந்துவிட்டனர். கடத்தல்காரர்களோ எங்களை நிறுத்தி வைத்திருந்த மண் சுவர்களின் பின்னால் நின்று சுட்டபடி இருந்தார்கள். எனக்கு அடுத்தாக நின்றிருந்த கத்தரினைப் பார்ப்பதற்காகத் திரும்பினேன். அவள் முகத்தில் கண்ணீர் அருவி போல் பாய்ந்து கொண்டிருந்தது. நான் ஆதரவாக அவளது கையைப் பற்றிப்பிடித்தேன்.

அந்நேரம் எனது கன்னத்தை ஊராய்வது போல ஓர் ரவை பாய்ந்து பின்னால் சென்றது. உடல் முழுவதும் வியர்த்தது. ஓரிரு வினாடிகளில், இதே இடத்தில், நான் பிணமாகப் போகின்றேன் என்பது மட்டும் ஐயத்துக்கிடமின்றி உறுதியாகிவிட்டது. அப்பொழுது திடீரென நீலநிறச் சட்டையணிந்த கடத்தல்காரனொருவன் ஆவேசத்துடன் எனது சட்டையுடன் கழுத்தையும் சேர்த்துப் பிடித்துக்கொண்டு எனது முதுகில் துப்பாக்கி முனையை வைத்து அழுத்தியபடி என்னை அச்சுவரால் குதித்து மீட்புப் படையினர் முன்னேறி வரும் திசையில் செல்லும்படி கத்திக் கொண்டு எனது உடல் மறைவில் தானும் என்பின்னால் வந்த வண்ணமிருந்தான். உயிரைக் கையில் பிடித்தபடி செய்வதறியாது அவன் சொற்படி மெதுவாக முன்னேறிக் கொண்டிருந்தேன்.

என்ன நடந்ததோ? என்ன மாயமோ? எனது முதுகில் ஒரு கணம் துவக்கு முனையின் ஸ்பரிசத்தைக் காணவில்லை. திகைப்புடன் திரும்பிப் பார்த்தேன். நீலச்சட்டைக்காரன் நிலத்தில் கிடந்து புரண்டு புரண்டு முனகிக் கொண்டிருந்தான். எழுந்து நிற்பதற்குத் தடுமாறிக் கொண்டிருந்தான். என்னால் இரத் தத்தைக் காணமுடியவில்லை ஆனால் அவன் முன்பாக அவனது துப்பாக்கி தரையில் கிடந்தது. நான் அதனைக் கைப்பற்ற முடிவு செய்தேன். ஆனால் ஓரிரு காலடிகள் அதனை நோக்கி எடுத்து வைத்ததும் நெஞ்சில் பயம் இழையோடியது. அவன் சிலவேளை குற்றுயிரான நிலையிலும் தட்டுத்தடுமாறி முந்திக்கொண்டு துப்பாக்கியைக் கைப்பற்றுவானானால் என்னை எந்த விதத்திலும் உயிருடன் விட்டு வைக்க மாட்டான். சுட்டுத் தள்ளி விடுவான். இருந்தாலும் மனதில் துணிவை வரவழைத்துக்கொண்டு துப் பாக்கியின் ஒரு முனையைக் கையால் பற்றிப்பிடித்தேன், ஆனால் அவனும் துப்பாக்கியின் மறுமுனையைப் பிடித்தவண்ணம் இழுத்தான். அவனது கண்கள் கொலைவெறி கக்கின. தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் எனக்குப் பேராபத்து என்பதை உணர்ந்த நான், துணிச்சலை வரவழைத்துக் கொண்டு எனது வலது காலை ஓங்கி அவனது தலைமீது ஓர் உதைவிட்டேன். துணிச்சல் வெற்றியளித்தது. துவக்கும் வெடித்தது. அவன் பிணமாக நிலத்தில் சரிந்தான். செய்வதறியாது விக்கித்துப்போய் நின்றேன். உண்மையிலே எனக்குச் சுடத் தெரியாது.

**ஜெகன்**

> **என்ன நடந்ததோ? என்ன மாயமோ? எனது முதுகில் துவக்கு முனையின் ஸ்பரிசத்தைக் காணவில்லை. திகைப்புடன் திரும்பிப் பார்த்தேன். நீலச்சட்டைக் காரன் நிலத்தில் கிடந்து புரண்டு புரண்டு முனகிக் கொண்டிருந்தான்.**

நின்று சிந்திக்க நேரமில்லை. துப்பாக்கியைக் காவியவாறு வயல்வெளியை நோக்கி ஓடினேன் நன்றாகக் களைக்கும் வரையில் ஓடி ஓர் மண்சுவர் அருகே இயலாது சாய்ந்தபடி தரையில் அமர்ந்தேன். சுவரின் மேலாக மெதுவாகத் தலையை உயர்த்தி எட்டிப் பார்த்தேன். மீட்புப் படையினராக இருக்க வேண்டும் என நினைத்தேன். அவர்களின் தலைகள் தெரிந்தன. நான் துப்பாக்கியுடன் அவர்கள் முன் சென்றால் என்னையும் கடத்தல்காரர்களில் ஒருத்தி எனக்கருதிச் சுட்டுத் தள்ளிவிடுவார்கள். எனவே கையில் இருந்த துப்பாக்கியைத் தூர எறிந்து விட்டு சுவரின் மேலால் கடந்து அவர்கள் நின்றிருந்த பக்கமாக நகர்ந்தேன். அவர்களும் என்னை இனங்கண்டு அருகில் வந்து ஆசுவாசப் படுத்தினர்.

இரண்டு மணித்தியால நேரம் இடம் பெற்ற துப்பாக்கிச் சமரின் இறுதியில் நான் மீட்கப்பட்டேன். ஆனால் எனது சகாக்களான றுத் மற்றும் பீற்றர் போன்றோரை மீட்க முடியவில்லை. இரண்டு உல்லாசப் பயணிகள் காயமடைந்தார்கள். நான்கு உல்லாசப் பயணிகளும் மற்றும் மீட்புப் படையினர் இருவரும் உயிரிழக்க நேர்ந்தது. கடத்தல்காரர்கள் பலர் உயிருடன் கைது செய்யப்பட்டனர். இருந்த போதும் பத்துப் பேருக்கு அதிகமான கடத்தல்காரர்கள் பாலைவன வெளியூடாகத் தப்பிச் சென்று விட்டனர். உயிர் பிழைக்க முடிந்தமை குறித்து நான் ஆண்டவனுக்கு நன்றி செலுத்தினேன். ★

## நாலாயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்த ஆரிய நகரம் கண்டுபிடிப்பு

ரஷ்யாவில் பனி படர்ந்த தெற்கு சைபீரிய பகுதியில் 4,000 ஆண்டுகளுக்கு முந்தைய ஆரிய நகரமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கஜாகிஸ்தான் எல்லையை ஒட்டிய இந்தப் பகுதியில் இந்த நகரம் ஆரிய இனத்தினரால் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. ஐரோப்பாவில் மேற்கத்திய நாகரீகப் பரவலின் ஆரம்ப காலத்தில் இந்த நகரம் உருவாகியிருக்கலாம் என்று தொல்லியல் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

எகிப்தில் பிரமிடுகள் கட்டப்பட்ட



காலத்துக்குச் சற்றுப் பிந்திய காலகட்டத்தில் இந்த நகரம் உருவாகியிருக்கலாம். இந்தப் பகுதியில் பல ஆண்டுகளாக தொல்லியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வரும் பெத்தனி ஹூக்ஸ் மற்றும் அவரது குழுவினர் தான் இந்த நகரைக் கண்டுபிடித்துள்ளனர். பிபிசி தொலைக்காட்சியில் குறிப்பிட்டதொரு தொடரை வழங்கி வரும் பெத்தனி இது குறித்துக் கூறுகையில், ''இந்த நாகரீகம் கிரேக்க நாகரீகத்துக்குப் போட்டியானதாக இருந்திருக்கலாம், இந்த நகரில் மட்டும் சுமார் 2,000 பேர் வரை வசித்திருக்கலாம்'' - என்றார்.

இந்தப் பகுதியில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆரியர்கள் குடியேற்றம் இருந்தமை இருபது ஆண்டுகளுக்கு முன்பு தான் தெரியவந்தது. சோவியத் யூனியன் உடைந்த பிறகு இந்தப் பகுதியில் தொல்லியல் ஆய்வுகளுக்கு அனுமதி கிடைத்தவுடன் பெத்தனியும் அவரது குழுவினரும் இங்கு ஆராய்ச்சிகளில் இறங்கினர். அப்போது கிடைத்த சில தடயங்களின்படி இங்கு ஆரிய நகரம் இருந்திருக்க வேண்டும் என்று தெரிய வந்தது.

இதையடுத்து கடந்த பல ஆண்டுகளுக்கு முன் இந்தப் பனிப் பகுதியில் தொல்லியல் ஆராய்ச்சியை அவரது குழு மேற்கொண்டு வருகிறது. இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த நகரில் கிடைத்த பொருட்களில் மேல் நோக்கு வளைவான அமைப்புடன் கூடிய இருபது வீடுகள், மேக்அப் சாதனங்கள், பாண்டங்கள், ஸ்வஸ்திக் புதைக்கப்பட்ட குதிரைகள், ரதத்தின் பாகங்கள், சின்னங்கள் ஆகியவை அடங்கும். ஆரிய நாகரீகத்தின் அடையாளமான சுவஸ்திக்கைத் தான் 1930 களில் ஹிட்லர் தனது நாஜி அமைப்பின் சின்னமாக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகிலேயே சிறந்த இனம் இது தான் என்று கூறிக் கொண்டு பிற இனத்தினரை அழிக்கும் வேலையை, யூதர்களை அழிப்பதில் இருந்து ஹிட்லர் தொடங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. அதே போல பல ஐரோப்பிய மொழிகளின் மூலமாக ஆரிய மொழி இருந்திருக்கலாம் என்பதும் ஆய்வுகளில் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கண்டுபிடிப்புக் குறித்து பெத்தனி கூறுகையில், ''பண்டைய பல இந்திய வேதங்களில் குதிரைகளைப் பலி கொடுப்பது குறித்தும், இறந்த தலைவனின் உடலுடன் அவனது குதிரையையும் கொன்று புதைத்த விவரங்களும் உள்ளன. இங்கு கிடைத்துள்ள ஆதாரங்களுக்கும் அந்த வேதங்களுக்கும் அதிக ஒற்றுமை உள்ளது'' - என்றார். இவர் லண்டனின் கிங்ஸ் கல்லூரியில் வரலாற்றுத்துறை வருகை பேராசிரியராகவும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. ★

**பிரபல கேடியான தனது முதலாளியை ஏமாற்றி அவனது பணத்தைத் திருடிக் கொண்டு தப்பிச் சென்றுவிட்ட டேவிட்டைக் கண்டு பிடிக்கும் பொறுப்பை கூலி அடிப் படையில் ஏற்றுக் கொண்ட இரட்டையர்களான சுழியன்ஸ் டேவிட்டைத் தேடிக் கண்டு பிடிக்க முயல்கின்றனர்.**

அது அவர்களுக்கு அதிஷ்டமான கேஸ் என்றோ கரோலைக் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்தும் என்றோ அப்போது அவர்கள் நினைக்கவில்லை. முதலில் கேஸை ஏற்க மறுத்தது கூலித் தொகையை பத்தாயிரம் டொலரில் கொண்டுவந்து விட்டது.

டேவிட் என்பவன் நியூயோர்க்கின் பிரபல கேடியான ஒரு முதலாளியை ஏமாற்றிவிட்டான். அவன் நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டு தலைமறைவான போது கேஸ் சுழியன்ஸிடம் வந்தது.

டேவிட்டின் புகைப்படம் பிற விப ரங்கள் சகிதம் அவனைத் தேடி நாடு முழுவதும் வலைவிரித்தனர் சுழியன்ஸ். அவர்களிடம் கேஸ் வந்தால் ஆகக் கூடியது ஒரு வாரம்தான். அதற்கிடை யில் அலுவல் ஒப்பேறிவிடும்.

ஆனால் டேவிட் அகப்படவில்லை. காலம் கடந்தது டேவிட்டுக்கும் ஆறு தலைத் தந்தது என்னவோ உண்மை தான். அதற்கிடையில் கண்கள் பறி போய்விட்டனவே?

டேவிட்டிற்கு ஒரு தம்பி - டானியல் - தொலைவில் ஒரு மலைச்சாரல் பண்ணையை வைத்திருக்கிறான் என்ற தகவல் கிடைத்தது. அங்கே டேவிட்டை நிச்சயம் சந்திக்கலாம் என்ற நம்பிக்கை பிறந்தது.

ஒருநாள் இரவு - கும்மிருட்டு - கரிய நிறக்கார். அதன் இருக்கைகள் கண் ணாடிகள் உட்பட எல்லாமே கருமை. உள்ளே சுழியன்ஸ் - கறுப்புத் தொப்பி, கறுப்பு கோட், சூட், ரை, கறுப்பு சொக்ஸ், சப்பாத்து - கறுப்புக் கண்ணாடி மட்டுமா- முகத்துக்கும் கறுப்பு மை பூசி அந்த மலைச்சாரல் பண்ணைக்குள் நுழைந்து கொண டனர்.

இந்தக் கேஸ் தான் அவர்கள் வாழ்க்கையில் கடைசிக் கேஸ் எனத் தீர்மா னித்து விட் டார்கள். இதை முடித்துக் கொண்டு பத் திரிகைக ளில் நிறையத் தகவல்களுடன் பரப ரப்பாக வந்துகொண்டிருக்கும் கரோ லைத் தேடிப் பிடித்தாக வேண்டும்.

கரோலைத் தந்திரமாகக் கையாண்டு விட்டால் அது ஆயிரக்கணக்கான கேஸ் களைக் கையாண்ட லாபத்தைத் தந்து விடும். அவளோடு வாழ்ந்து வெல்ல வேண்டும். அவள் இணங்காத போது அவளைக்கொன்று தனது இலக்கில் வெற்றி பெற வேண்டும். திட்டங்களைச் சரிவரத் தீட்டவேண்டும். பிறகு இரு வரும் சொத்துக்களைப் பகிர்ந்து கொண்டு பிரிந்து போய் விடலாம். கௌர வமாக மைக்காகவும் றொப்பாகவும் வாழ்ந்துவிடலாம்.

சத்தம் கேளாத தொலைவில் எஞ் சினை நிறுத்திவிட்டார்கள். ஏரிக்கரை யோரம் இறக்கமாக பாதையில் கார் உருண்டு கொண்டு இருந்தது. ஓசை ஏதும் இல்லை. இருளைத் துழாவும் சுழி யன்ஸ் விழிகள் நான்கும் ஒரே நரம்பில் இயங்குவது போலச் செயற்பட்டன.

காரை மறைத்து நிறுத்திவிட்டு இரு வரும் இறங்கி இருளோடு சங்கமம் ஆனார்கள். பண்ணை வதிவிடம் தெளி வாகத் தெரிந்தது.

★ ★ ★

டேவிட்டின் முகக் காயத்துக்கு கட் டுப் போட்டுவிட்டு கை அலம்பிக் கொண்டு நின்ற டானியலுடன் கொஞ் சிக் குலவிக் கதைத்தபடி நின்றாள் கரோல். அவன் மீது அவளுக்குக் கொள்ளை பிரியம். டானியலின் வார்த் தைக்கு அவள் எப்போதும் கட்டுப்படு வாள்.

திடீரெனக் கரோலின் மூளையில் ஒரு பொறி தட்டியது. ஏதோ ஆபத்து வருவதாக உள்ளுணர்வு கூறியது. படி களில் இறங்கி வெளியே இருளில் ஓடி மறைந்தாள். இருள் அவளை விழுங்கிக் கொண்டது. அவளைத் தேடித் துரத்தி னான் டானியல். எனினும் இருளில் எதை யும் அடையாளம் காண இயலவில்லை. அடர்ந்த மரங்களில் ஒன்றோடு மோதி அடி பட்டு தடாலென விழுந்தான் அவன்.

''கரோல் கரோல்'' எனக் கத்திய வாறே மண் மீது புரண்டான். எழத் தெம்பு வரவில்லை.

''ஹலோ டானியல்'' புதிய குரல் கேட் டுத் திடுக்கிட்டு உறைந்தான் அவன்.

''யாரது?''

''சுழியன்ஸ் வந்திருக்கிறோம். மூச்'' மயான அமைதி நிலவியது. டானிய லின் இதயம் படபடப்பது மட்டும் தெளி வாகக் கேட்டது.

''யாரது கரோல்? உனது மனைவியா? நீ தனியாகத்தானே? பெண் சகவாசமும் இருக்கா? கேள்விப்பட்டது இல்லையே?''

மயங்கிப்போனவன் போலப் பதில் பேசாமல் கிடந்தான் டானியல்.

''றொப் - நீ இவனைப் பாத்துக் கொள். நான் டேவிட்டை இழுத்து வருகி றேன்.'' என்றான் மைக்.

அவர்கள் இனித் தப்பவே முடியாது. எனவே தான் 'மைக்', 'றொப்' என்ற பெயர்களை வெளிப்படையாகவே பாவிக்கிறார்கள் சுழியன்ஸ்.

படிக்கட்டுகளில் ஏறினான் மைக். உள்ளே கண்கள் கட்டப்பட்ட நிலையில் கையில் துப்பாக்கியுடன் படுத்திருக் கிறான் டேவிட்.

ஏன் கண்களைக் கட்டி வைத்தி ருக்கு? இது யார் வேலை? எனச் சிந் தித்தான் மைக். அருகே வந்து ஒரு கதி ரையைப் போட்டு இருந்துவிட்டான்.

''யாரது? கதிரையை இழுக்கிறது? ஐயோ கரோல் என்னை விட்டுவிடு. இனிச் சேட்டை விடமாட்டேன். என்னை வாழவிடு. எனக்குத் தண்டனை போதும். போதும்.

கத்தினான் டேவிட்.

டேவிட்டின் கையில் இருந்த துப் பாக்கியைப் பிடுங்கி எறிந்தான் மைக். பிடுங்கியது ஒரு ஆண்தான் எனச் சற்று நிம்மதி அடைந்தான் டேவிட். அது டானியலாகத்தான் இருக்கும் ''டானியல். என் கண்களை அவள் பிடுங்கி ஒரு வாரம் ஆகிவிட்டதே. இனி எனக்குப் பார்வையே கிடையாதா? இப்போதும் அவளோடு கொஞ்சிக்குலாவ உனக்கு மனம் வருகிறதா? ''

டானியலை அழைத்து வந்து இவ னோடு பேச விட்டால் வேடிக்கையாக இருக்கும் என நினைத்தான் மைக்.

''நாங்கள் - சுழியன்ஸ் வந்திருக்கி றோம்''

''ஐயோ'' எனக் கத்தியபடி கட்டி லால் குதித்து ஓட முயன்றவனை இழுத்துப்பிடித்தான் மைக்.

''யாரது கரோல்? சொல். நீ பிழைக் கலாம்''

அவளைக் காப்பாற்றியது முதல் எல்லா விவரமும் சொன்னான் டேவிட். சரணாலயத்தில் கரோல் பேக்கர் தப்பிய மறுநாள் காலை இவர்கள் அவளை மீட்டு இருக்கிறார்கள். மைக்கிற்கு எல் லாம் புரியத் தொடங்கியது. அதிர்ஷ்டம் அருகில் நிற்கிறது.

வந்த வேலையை முடிப்பதா? கரோ லைக் கண்டுபிடிப்பதா?

டேவிட்டை இழுத்துக்கொண்டு கீழே றொப்பிடம் வந்தான் மைக். டானி யலும் டேவிட்டும் பதறிக் கொண்டு நின்றார்கள்.

இந்தக் குருடன் வேண்டாம். முத லில் வந்த வேலையை முடி. டானிய லுடன் கரோலைப்பற்றிப் பேசலாம்.

டானியலின் கை கால்களைக் பின் புறம் சேர்த்துக்கட்டி பந்து போல உருட் டிக் கட்டிக் கொண்டுபோய் காரின் பின் சீற்றில் போட்டுவிட்டு வந்தார்கள். ஏற் கனவே அடிபட்டு மயங்கிக் கிடந்தவன் அவன்.

அணு அணுவாகக் கொல்வதில் சுழியன்ஸுக்குப் பிரியம் அதிகம். கொலை யிலும் நிறைந்த ரசனை உடையவர்கள் அவர்கள். அதற்கு இந்தப் பண்ணை மிகவும் வாய்ப்பான இடம். துப்பாக்கிச் சத்தம் கூட யார் காதிலும் விழாது.

டேவிட்டிடம் மோசடி பற்றி விசாரித் தார்கள். கேட்கும்போதே பிஸ்டலால் வலது உள்ளங்கையில் ஒரு சூட்டுத் துவாரம் வைத்துவிட்டார்கள். கையைப் பொத்திக் கொண்டு அலறினான் அவன்.

மோசடி செய்து தமக்கு கேஸ் உருவாக்கியமைக்கு அவ னுக்கு நன்றி கூறினார்கள். அவனிடம் தற்போது கையிருப்பில் உள்ள காசைக் கேட்டார்கள். தான் படுத்திருந்த கட்டிலின் தலை மாட்டில் ஒரு பெட்டியில் அவன் உழைப்பு முழு வதும் இருப்ப தாகச் சொன்னான். தன்னை மட்டும் விட்டு விடும் படி கெஞ்சினான்.

''நோ, சுழியன்ஸ் எப்போதும் விசுவாசமானவர்கள். தொழிலில் நேர்மையானவர்கள். கேஸில் பின்வாங்கவே மாட்டார்கள். விளங்கிக்கொள்'' என்றான் றொப்.

''உனக்கு ஏற்கனவே இரண்டு கண் களும் இல்லை. ஒரு கை - அதுவும் வலது கை சிதைந்து விட்டது. இனி வாழ என்ன இருக்கு?'' என்று கேட்டுக் கொண்டே அவனது உறுப்பில் சிகரெட் டால் சுட்டான் மைக்.

புழுப்போலத் துடித்தான் டேவிட். தான் மயங்கிவிடக் கூடாதா என ஏங்கி னான். இடது கையால் தங்கள் உருவத் தைத் தடவிக் கண்டு பிடிக்கும்படி கட் டளையிட்டார்கள் சுழியன்ஸ். கண்கள் இருந்திருந்தால் அவன் இதயம் நின்றி ருக்கும்.

இப்போது இடது கையில் சூடு விழுந்தது. பின்பு காலில், துடையில், பாதத்தில் என்று பல இடங்களில் இரத்த நாளங்களை அதிகம் தாக்காமல் சுட்டார் கள். அதிகம் இரத்தம் இழக்கப்படாமல் காயங்களுக்குக் கட்டுப்போட்டார்கள்.

இனி டேவிட் மயங்கிவிடுவான் என்ற நிலைமை வந்ததும் அவனை மயங்கவிடாமல் உயிரோடு - நினை வோடு கொல்ல நினைத்தார்கள்.

அருகே நிறைய மரக்குற்றிகள் சீராக அடுக்கி வைக்கப்பட்டு இருந்தன. அதன் மேல் டேவிட்டை நிர்வாணமாகப் படுக்க வைத்துக் கட்டினார்கள். அவன் ஏற்கனவே வேதனையின் உச்சத்தில் இருந்தான்.


அவனது கை, கால், உறுப்பு போன்ற இடங்களில் சில துளி பெற்றோலைச் சிந்தவிட்டுத் தீ வைத்தார்கள். அவன் போட்ட சத்தத்தில் அகிலமே அதிர்ந்தது.

அவன் மயங்கும் சமயம் பெற்றோ லால் குளிப்பாட்டித் தீ வைத்துவிட்டார் கள். எல்லாம் தீயின் விழுங்கும் பசிக்கு சாது. மரக்குற்றிகளை சுவாலை அள்ளிக் கொண்டது.

(இனியும் முள்ளுக் குத்தும்)

மு.சிவநேசன்
sivanesan@usa.com





# வெள்ளை ரோஜா முள்

**''எவரையும் அணு அணுவாகக் கொல்வதில் சுழியன்ஸுக்குப் பிரியம் அதிகம். கொலை செய்வதில் நிறைந்த ரசனை உடையவர்கள் அவர்கள்''**

**விறுவிறுப்பூட்டும் மர்மத்தொடர் - 7**

# பற்றி எரிகிறது உலகம்



"உலகத்தின் அழிவுக்கான குழப்பங்கள் அரபு நாடுகளில் இருந்தே தோன்றும்'' என்று முஹமது நபிகளார் 1432 வருடங்களுக்கு முன்னரே சொல்லி இருக்கிறார்.

இன்று முழு அரபு நாடுகளும் கதிகலங்கிப் போய் இருக்கின்றன. குழப்பத்தின் வாசல் திறந்தே விட்டது. துனீசியாவின் தெருவொன்றில் தான் இந்தப் பெருந்தீக்கான முதல் பொறி தட்டிவிடப்பட்டது.

தனது வாழ்வினைச் சுகிக்க முடியாத, தேவையான சம்பாத்தியம் இல்லாத வறிய ஒரு மனிதனில் இருந்து தான் இந்த மாபெரும் வேள்வித் தீ பற்றிக் கொண்டது.

ஆயுதம் ஏந்தாத புரட்சி மூலம் ஒவ்வொரு நாடுகளாகச் சரிந்து விழுகின்றன. இலங்கைத் தமிழர்களின் முப்பது வருடகால ஆயுதப் போராட்டம் சாதிக்க முடியாததை, முப்பது நாட்களில் சாதித்துக் காட்டினார் துனிசியப் பொதுமக்கள். இச்சாதனைக்கான அடிப்படை ஒற்றுமை. ஒற்றுமையாக ஒன்று திரண்டு விரட்டி அடித்தார்கள் பென் அலியை.

எல்லாச் சர்வாதிகாரிகளுக்கும் எதிராகப் பரவுகின்ற பேரெழுச்சியை நீங்கள் இலங்கையில் இருந்து கொண்டு அறிய முடியாது. ஒவ்வொரு கணமும் உலகத்தில் என்ன நடக்கிறது என்பதனை லண்டனில் இருந்து கொண்டு பார்த்துக் கொண்டிருக்கிறோம் நாம்.

வேலையில்லாத ஏழைப் பையன் ஒருவனுடைய தற்கொலையால் மூண்டது தான் இந்தப் பெருந்தீ. 25 வயதுடைய முஹமது பவாசூசி தகப்பனை இழந்தவர் தனது ஆறு சகோதரிகளின் வயிற்றுப்பசிக்காக தான் பள்ளிக்கூடம் கூடப் போகாமல் தள்ளு வண்டியில் பழங்கள், காய்கறிகளை எடுத்துச் சென்று விற்கும் வியாபாரத்தை ஆரம்பித்தார்.

> **யுத்தம் தொடர்பாக இலங்கை அரசுக்கு எதுவும் சொல்லாத மேற்குலகமும் அமெரிக்காவும் லிபியாவில் ஆயிரம் பொதுமக்களை கடாபி கொன்றபோது கடாபியின் வீட்டின் மீது குண்டுகளைப் போட்டு வீட்டைத் தரைமட்டமாக்கி யிருக்கின்றன.**

கடன் பட்டு வியாபாரம் செய்து அதன் மூலம் கொஞ்ச லாபம் பெற்று தினமும் தனது குடும்பத்தினருக்காகச் செலவழித்து வந்த அன்றாடம் காய்ச்சி அவர்.

2010 டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதி வந்தது வினை. யாருக்கு தெரியும் அன்று தான் உலகத்தைச் சுற்றி பெரு நெருப்புப் படரப் போகிறது என்று?

அன்று அவரது தள்ளுவண்டியை நோக்கி வந்த 45 வயது மதிக்கத்தக்க நகரசபை அதிகாரியும் அவரோடு வந்த பொலிஸ்காரர்களும் அனுமதி இன்றி அவர் அங்கு வியாபாரம் செய்வதாகக் குற்றம் சாட்டினர். வியாபார இடத்தை உடனடியாக அங்கிருந்து அகற்றுமாறு சொன்னார்கள்.

முஹமது தனது குடும்பத்தவரின் பட்டினி நிலைமையை எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் ஏழைகள் துன்புறுத்தக் கூடாது என்று போதிக்கின்ற இஸ்லாம் மதத்தில் இருந்து வந்த அந்த அரபு முஸ்லீம் பொலிஸ்காரர்கள் எதனையும் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

**இளைய அப்துல்லாஹ்**

முஹமதுவை ஏசிப் பேசி அடித்திருக்கிறார்கள். வலுவற்ற முஹமது பெருங்கவலையோடு அந்தப் பொலிஸ்காரர்களுக்கு லஞ்சமாகத் தன்னிடம் இருந்த பணத்தையும் கொடுத்திருக்கிறார்

எதனையும் கேட்காத நகரசபை உத்தியோகத்தரான பெண்மணி முஹமதுவின் கன்னத்தில் அறைந்திருக்கிறார். அவரது முகத்தில் காறி உமிழ்ந்து கண்டபடி திட்டித் தீர்த்திருக்கிறார்.

நடுறோட்டில் வைத்து அவர் தாக்கப்பட்ட பொழுது மற்றவர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தனர். முகமதுவுக்கு அது பெருத்த அவமானமாகப் போய்விட்டது.

தனக்குநேர்ந்த அவமானத்தையும் தனது இயலாமையும் எடுத்துச் சொல்லி முறையிடுவதற்காக அவர் நகரசபை அலுவலகத்துக்கு போனார்.

நகரசபை அலுவலர்கள் இவரை ஒரு பொருட்டாக மதிக்கவே இல்லை. ஏழை சொல் அம்பலம் ஏறுவதில்லையே?

தனது பிரச்சினையைப் புகாராக எடுத்துக் கொள்ளவில்லையானால் தன்னைத் தானே எரித்துக் கொள்ளப் போவதாக முஹமது அங்கிருந்த அதிகாரிகளிடம் சொன்னார். ஆனால் எவருமே அவரைக் கணக்கில் எடுக்கவில்லை.

மனமுடைந்து போன முஹமது 2010 டிசம்பர் 17ஆம் திகதி நகரசபைக்கு முன்பாக தன் மீது தானே எரிபொருளை ஊற்றித் தீ மூட்டிக் கொண்டார்.

உடல் கருகிய நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு போனார்கள் அருகில் இருந்தவர்கள். முஹமது என்ற இளைஞனின் வறுமை, அவரது கவலைகள் துன்பங்கள், நகரசபை அதிகாரிகளின் உதாசீனம், அவருக்கு ஏற்பட்ட கதி துனீசியா் வெங்கும் பரவி எல்லா இடங்களிலும் முஹமது பற்றித்தான் பேச்சு எழுந்தது.

மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக குமுறத் தொடங்கினர். வெடிக்கும் எரிமலைக்கு முந்திய குமுறலாகத்தான் அது இருந்தது என்று ஜனாதிபதி பென் அலிக்கு அப்போது தெரியவில்லை.

பென் அலி, முஹமதுவை வைத்தியசாலைக்குச் சென் பார்வையிட்டார். அது எல்லாம் வெறும் கண்துடைப்பு என்று மக்களுக்குத் தெரியாதா என்ன?

முஹமது சிகிச்சை பலனின்றி 18 நாட்களுக்குப் பிறகு மருத்துவமனையில் இறந்து போனார்.

முஹமதுவின் மரண ஊர்வலத்தில் கலந்து கொண்ட 5,000 க்கும் அதிகமான மக்கள் ''முஹமதுவின் மரணத்துக்குக் காரணமானவர்களை நாங்கள் அழவைப்போம்'' என்று அன்று சபதம் எடுத்தனர். வேலை இல்லாமை, 23 வருடகால கொடுங்கோன்மை, அதிகார ஒடுக்கு முறை, ஏழை மக்களிடம் லஞ்சம் பெறுதல் என்பனவற்றுக்கு எதிரான பேரெழுச்சியாக முஹமதுவின் அந்த மரண ஊர்வலம் அமைந்தது.

**இளைய அப்துல்லாஹ்**

இவ்வாண்டு ஜனவரி 4 ஆம் திகதியில் இருந்து பென் அலி நாட்டை விட்டு ஓடிய ஜனவரி 14 ஆம் திகதி வரை லட்சக்கணக்கான மக்கள் சர்வாதிகாரி பென் அலியை நாட்டை விட்டு ஓட ஓட விரட்டி விட்டுத்தான் ஓய்ந்தார்கள். இது அந்தப் பத்து நாட்களுக்குள் நடந்து முடிந்த மக்கள் புரட்சி.

அதன் தொடர்ச்சியாக எகிப்தின் சர்வாதிகாரி ஹொஸ்னி முபாரக்கைப் பதவி விலக வைக்க 15 லட்சத்துக்கும் அதிகமான எகிப்தியப் பொது மக்கள் எகிப்தின் தஹ்ரீர் சதுக்கத்தில் கூடினார்கள். உலகின் முதலாவது பணக்காரனாக இருந்தும் உலகுக்குத் தெரியாமல் முழுப்பணத்தையும் அமுக்கி வைத்திருந்த, அமெரிக்காவின் செல்லப்பிள்ளையான ஹொஸ்னி முபாரக்கை நாட்டை விட்டுத் துரத்தினார்கள் மக்கள்.

தொடர்ந்து ஈரான், பஹ்ரைன், அல்ஜீரியா, யெமன், சிரியா, சவூதி அரேபியா இப்பொழுது லிபியா என்று மக்கள் போராட்டங்கள் வெடித்த வண்ணமே இருக்கின்றன.

லிபியாவைத் தவிர மற்ற இடங்களில் ஆயுதம் ஏந்தாத மக்களின் மன வலிமை தான் இப்போராட்டங்களை முன்னெடுக்க முக்கியமான காரணியாக இருந்தது.

அந்தவகையில் உண்மையில் தார்மீக ஒற்றுமையுள்ள ஒரு போராட்டத்தை இலங்கை ஆட்சியாளர்களுக்கு எதிராக மேற்கொள்ள ஒருக்காலும் முடியாது. ஏனெனில் அந்தச் சக்தி தமிழர்களிடமும் இல்லை. சிங்களவர்களிடமும் இல்லை.

தமிழர்களும் கன்னை கன்னையாகப் பிரிந்து நிற்கிறார்கள். அவர்களை ஒற்றுமைப்படுத்துவது என்பது கல்லில் நார் உரிக்கும் கதை தான். சிங்களவர்களும் அப்படித்தான். அடக்க அடக்க அடங்கிப் போவோமே தவிர கிளர்ந்து எழ எமக்குத் தெரியாது. எத்தனை பேரைச் சுட்டுப் போட்டார்கள். எத்தனை பேரை பாலியல் வல்லுறவு புரிந்தார்கள். நாம் இன்னும் அடங்கித் தான் போய் இருக்கிறோம்.

**இளைய அப்துல்லாஹ்**

40 ஆயிரம் உயிர்கள் முள்ளிவாய்க்காலில் செத்துப் போனபோது எந்த அதிர்வையும் காட்டவில்லை நாம். வெளிநாடுகளில் வெறுமனே ஊர்வலம் போனோம். ஒருங்கிணைக்கத் தெரியாமல் பிரிந்து போய் நிற்கிறோம். இன்று வலுவிழந்த இனமாக ஈழத் தமிழினம் கையறு நிலையில் நிற்கிறது.

சர்வாதிகாரிகளுக்கு எதிரான மக்கள் போராட்டம் உலகம் முழுக்க கனன்று கொண்டிருக்கும் பொழுது, எமக்கு மௌனம் மட்டுமே மொழியாக இருக்கிறது. துனீசியாவில் ஒரு முஹமது எரிந்த போது துனீசியாவுக்குப் பெரு வெளிச்சம் வந்தது. ஈழத்தமிழருக்காகத் தீக்குளித்த முத்துக்குமார் உட்பட அந்தப் 17 பேர் யாரென்றே தெரியாது எமக்கு. எல்லோரையும் மறந்துவிட்டோம்.

மறதி மட்டுமே எமது சொத்து. ஈழத் தமிழருக்காக தீக்குளித்த இவர்களும் முஹமது போல ஒரு பேரெழுச்சிக்கான பொறியைத் தான் இட்டுவிட்டுப் போனார்கள். ஆனால் தமிழர்களாகச் சேர்ந்து அந்தப்பேரெழுச்சியை ஊதி அணைத்துவிட்டோம். முஹமது ஒரு பொறி. இங்கே 17 பொறிகள். தமிழரின் உணர்ச்சிகளின் வடிவம் எப்படி இருக்கிறது என்று இப்பொழுது புரிகிறதா?

ஒருங்கிணைப்பு, ஒற்றுமையோடு போராடுதல் இல்லாத தமிழ் சமூகத்தில் எடுத்ததெற்கெல்லாம் வெறும் உணர்ச்சி வசப்படுதல், ஒன்றுமைக்கு மாறாக துரோகப் பட்டம் சூட்டுதல் என்று இருக்கும் பொழுது எமக்கான இனவிடிவு அண்மையில் இல்லை என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது.

அரபு நாடுகள் முழுக்கக் கொந்தளித்துக் கொண்டிருக்கும் பொழுது லிபியாவில் கடாபியின் ஆட்சிக்கெதிராகப் பிரிட்டனும் அமெரிக்காவும் பிரான்ஸும் போர்க்கொடி தூக்கி நிற்கின்றன. 'லொக்கர் பீ' விமானக் குண்டு வெடிப்புக்குப் பழிவாங்கப் பிரிட்டன் கங்கணம் கட்டிக் கொண்டிருப்பது போலத் தெரிந்தாலும், அங்குள்ள எண்ணை வளத்தைத் தான் அவர்கள் குறிவைத்திருக்கிறார்கள் என்பது சாதாரண மனிதருக்குக் கூட புரியும் உண்மை.

ஒன்றுமில்லாத சதாம் ஹூசைன் மீது தாக்குதல் நடத்தி ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று கொன்று குவித்த அமெரிக்கா, இப்பொழுது லிபியாவின் எண்ணைக் கிணறுகள் மீது ஆசை வைத்துவிட்டது.

'சிலுவைப் போர்' என்று கடாபி இப்பொழுது சொல்கிறார். இரண்டு வாரத்துக்கு முன்னர்தான் சொன்னார் 'பின்லேடன் ஆட்கள் தாக்குகிறார்கள். லிபியாவில் குழப்பத்தை அல்கைதா ஆரம்பித்துவிட்டது'' என்று.

தனது இருப்புக்காக கடாபி எதனையும் சொல்லத் தயாராகிவிட்டார். தனது மக்கள் மீதே அவர் தாக்கத் தொடங்கியது தான் மேற்குலகத்துக்கு வாய்ப்பாகப் போய்விட்டது. கண்ணுக் கெட்டிய தூரம் வரை அடக்குமுறையாளர்களின் கரங்கள் பொதுமக்களை நோக்கி அகல விரிந்தபடி கபளீகரம் செய்கின்றன.

அமெரிக்காவைத் தூக்கத்தில் இருந்து விழிக்கச் செய்த பயங்கரம் செப்டெம்பர் 11. தானே உலக வல்லரசு என்ற அமெரிக்காவின் மாயையை உடைத்த நாள் அது. அதற்குப் பிறகு உலகம் முழுக்க பயங்கரவாதத்துக்கு எதிரான போர் ஒன்றைத் தொடங்கி அது முடிவுறாத ஒன்றாக நீண்டு கொண்டிருக்கிறது. அமெரிக்காவால் இந்தப் போரை நிறுத்த முடியாது. ஹிட்லர் போல எங்காவது ஒரு புதை குழிக்குள் சென்று புதையும் வரை இது தொடரப்போகிறது. நாற்பதாயிரம் மனித உயிர்கள் முள்ளிவாய்க்காலில் செத்து அழிந்தபோது, யுத்தம் தொடர்பாக இலங்கை அரசுக்கு எதுவும் சொல்லாத மேற்குலகமும் அமெரிக்காவும் லிபியாவில் ஆயிரம் பொதுமக்களை கடாபி கொன்றபோது கடாபியின் வீட்டின் மீது குண்டுகளைப் போட்டு வீட்டைத் தரை மட்டமாக்கியிருக்கின்றன.

இதுதான் உலக நியதி. இதற்குள் தான் நாம் வாழ்ந்து தொலைக்க வேண்டியிருக்கிறது. ✱



# கவிதைப்புனல்

## புகைந்தது போதும்...!



புகைந்தது போதும் பற்றி எரி,,,
புதுமை வாழ்வுக்குப் பாதையிடு,,,!
எரிந்திடும் விறகாய் அடுப்படியில்
இருப்பதுவே உன் தலை விதியா,,,?
தினம்,,, தினம் நெஞ்சுள் புதையலிடும்
துயரக் குமுறலை வெளியில் விடு,,,!
புகைந்தது போதும் பற்றி எரி,,,!
பொன்னவள் ஆற்றலைப் புரியவிடு,,,!

விண்வெளிப் பயணம் சென்றவள் நீ,,,!
விமானம் ஓட்டியும் புகழடைந்தாய்,,,!
ஆண்கள் ஆற்றுவ தத்தனையும்,,,;
ஆற்றும் வல்லமை உனக்குண்டு,,,!
இன்னும் ஆண்மே லாதிக்கம்,,,;
இருப்பதை உடைக்கச் சபதம் எடு,,,!
இந்தச்சமூகம் பெண் உழைப்பை
உறுஞ்சிக் குடிப்பதை மாற்றி அமை,,,!

எத்தனை உயர்பண் புள்ளவள் நீ,,,!
இருந்தும்,,, சமூகத் தூறைந்துள்ள
சொத்துச் சீதனக் கொடுமைகளால்,,,;
சிதைந்து போவதுன் கனவுகளே,,,!
நித்தமுன் வீட்டில் நிகழ்கின்ற,,,
நீஷ்டூரத்தைப் பொறுக்கின்றாய்,,,!
சத்தம் வாசலைத் தாண்டாமல்,,,
சகித்துக் கொண்டே புகைகின்றாய்,,,!

பெண்கள் இரண்டாம் தரமென்று
பேசும் கொள்கையைத் தூக்கி எறி,,,!
ஆண்களின் சேவைக் காகவென
ஆண்டவன் பெண்ணைப் படைக்கவில்லை,,,!
என்றும் நீசமன் ஆண்களுக்கு,,,
என்ற நினைப்பை மறவாதே,,,!
இன்னும் புகைந்தது போதும்,,, நீ,,,;
எரிந்தெழு,,,, வன்முறை,,,, அகன்றிடுமே,,,!

முல்லை வீரக்குட்டி



## என்முகம்



முகம் கழுவாமல் ஒருபோதும் கண்ணாடி பார்த்ததில்லை,
அழகான முகத்தினை எனது கண்ணாடியும் பார்த்ததில்லை,
நீ ஒருநாள் எனது வீட்டிற்கு வந்தாய்,
எனது கண்ணாடியும் உன்னைப் பார்த்துவிட்டதால்
தானோ இவ்வளவு நாளும்
அழகாய் காட்டிய என் முகத்தினை
இப்பொழுது அசிங்கமாய் காட்டுகிறது!

துன்னாலை,
செல்வம்.

## நிலை...!



கருங்கல்லைக் கடைந்து
உளியால் செதுக்கிய
வள்ளலின் சிலைக்கு - தங்க
ஆபரணம் அணிந்து
அழகு பார்க்கிறார்கள் - ஏழையின்
பசித்த வயிற்றுக்கு
ஒரு பிடி
சோறு போடாதவர்கள்,,,!

து. திலக்
யாழ்ப்பாணம்.

## என் கவிதைகள்

பத்திரிகைகளில் பார்த்தேன் -
பல காதல் கவிதைகள்.
எல்லாவற்றையும் அனுப்ப
எண்ணினேன்;
தடுத்தது மனம்.
என்னுயிரே உனை
நினைத்து
என் மனதில்
கிறுக்கியவற்றை
கவிதைகளாகக் கருதி
பிரசுரிப்பார்களா?

KICK தயா,
சதுமலை

## கருணை...?

கன்றைப்
பட்டினி போட்டுக்
கறந்த பாலில்
பாலாபிஷேகம்
நடக்கிறது
அம்மன் சிலைக்கு

ம. சுதன்

## கருத்தரிக்காத கனவுகள்

தொலைந்த
நிம்மதிகளைத் - தேடி(யே)
புறப்பட்டால்
துறவியாகத்தான் - ஆகிவிடணும்...
தோல்வியுற்ற எல்லோரும்.
கடந்துபோன
களிப்பான
பக்கத்தில் (இன்னும்)
இருந்து கொண்டு
தொடரும்
இந்த - வாழ்க்கையில்
பயணிப்பது
கடினமான - காரியம் (தான்)...
எதையாவது
இழந்து விடும்
ஒவ்வொரு தருணங்களிலும்
இந்த ஏமாற்றத்தின் - பின்பு
நிச்சயம் வெற்றி (தான்)
என்று
எண்ணவைக்கிறது - மனது...
ஆயினும்
அந்த (ஒரு) - வெற்றி மட்டும்
இன்னும்
எட்டப்படாமல்
தோல்விகள் (தான்)
தொடர் கதையாகின்றதே!
கறுப்பு
வெள்ளைக் கனவுகள்,
காகிதத் தோணிகள்,
இலவு காத்த
கிளிகள்...
இவைகள் பட்டியலில்
இனிமேல்
என்னையும் சேர்த்திடுங்கள்...


- அட்டாளை நிதி -

## கேட்க வேண்டும் வேற்றுக் கிரகம்



மனிதர்வேயில்லாத ஓர் பாதை
கை கோர்த்தபடி
நீயும் நானும்
தடுக்க யாருமில்லா - எம்
நடைப் பயணம்
துணைக்கு நிலவு மட்டும்
வரட்டும் சாட்சியாய் அல்ல;
உனை நான்
பார்த்து இரசித்திருக்க

வேற்றுக் கிரகம் இறைவனிடம்
கேட்டு வாங்கிக் கொள்ளவேண்டும்
யாரும் உனைக் கடத்திட்டுப் போகாது
காப்பாற்றி வைத்திருக்க
ஓர் நாளாயினும்
அமைதியாக வாழ்ந்து விட வேண்டும்
மறுநாள் சாவரினும்
மகிழ்வோடு ஏற்று நிற்க
நல்ல பொழுதாய்
ஓர்நாள் போதும் நம் காதலுக்கு





ஹொலிவூட் நடிகர்
ஹ்யூ ஜாக்மேன்

# உலகத்திலேயே அழகான பெண் ஐஸ்வர்யா ராயா?

ஐஸ்வர்யா ராய் அழகி தான். ஆனால் உலக அழகி என்று கூறமுடியாது என்று ஹொலிவூட் நடிகர் ஹ்யூ ஜாக்மேன் கூறியுள்ளார். மும்பையில் எப்.ஐ.சி.சி. அமைப்பின் மூன்று நாள் மாநாடு நடந்தது. இதில் ஜாக்மேன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். அவரை வரவேற்ற நடிகை ஐஸ்வர்யா ராய், அழகிய விநாயகர் சிலையைப் பரிசாகக் கொடுத்தார். ஆனால் நிகழ்ச்சியில் பேசிய ஜாக்மேனோ, ஐஸ்வர்யாவை அழகியே அல்ல என்று கூறி அதிர்ச்சியளித்தார்.

ஐஸ்வர்யா குறித்து ஜாக்மேன் கூறுகையில், உலகத்திலேயே அழகான பெண் உங்களை வரவேற்பார் என்று கூறினார்கள்.

உடனே எனக்கு ஒரே மகிழ்ச்சி. ஏனென்றால் அந்த உலக அழகி எனது மனைவி டெபோரா என்று நினைத்தேன். கடைசியில் அது ஐஸ்வர்யா ராயாக இருந்தது. ஐஸ்வர்யா அழகு தான். ஆனால் உலகத்திலேயே அழகான பெண் என்று கூறமுடியாது. என்னைப் பொறுத்தவரையில் என் மனைவி டெபோரா தான் மிகவும் அழகான பெண் என்றார்.

ஐஸ்வர்யா ராய் பேசுகையில், நான் ஹ்யூ ஜாக்மேனை இந்தியாவுக்கு வரவேற்கிறேன். சினிமாத்துறையில் உள்ள அழகான மற்றும் திறமையான நடிகர்களில் ஜாக்மேனும் ஒருவர். இந்தியர்கள் சார்பில் அவரை நான் இந்தியாவுக்கு வரவேற்கிறேன் என்றார்.

விழாவில் ஷாருக்கானும் கலந்துகொண்டார்.

ஐஸ்வர்யாவைப் பார்த்து பலரும் ஜொள்ளு விடும் சமயத்தில், ஜாக்மேன் மட்டும் இப்படிப் பேசியது அனைவரையும் சலசலப்பில் ஆழ்த்தியது. இருந்தாலும் தனது மனைவி தான் மிகப் பெரிய அழகி என்று கூறிய அவரது கண்ணியத்தைப் பாராட்டுவோம்.





## சாய்னாவின்

ரஜினி படத்தில் வாய்ப்புக் கிடை
நடிக்கத் தயார் என்று அறிவித்துள்ள
வீராங்கனை சாய்னா நெவால். ஹரிய
சாய்னா. இந்தியாவின் புகழ்பெற்ற
யாகத் திகழ்பவர், கேல்ரத்னா வி
நிறைய விளம்பரங்களில் நடிக்க

# தமன்னாவின் சம்பள அதிகரிப் தவறிப்போனது தமிழ்ப் பட வ

சென்ற ஆண்டு தமிழில் முன்னணி ஹீரோயினாக இருந்தவர் தம
நடித்தவரும் இவர்தான். ஆனால் இந்த ஆண்டு, கைவசம் ஒரேயொரு படம்
முடிந்த நிலையில் இருக்கிறது. வேறு புதிய படங்கள் எதிலும் தமன்னா ஒ

இதற்கெல்லாம் காரணம் தமன்னாவின் சம்பள அதிகரிப்புத் தான் என்கிற

இப்படியான சம்பள அதிகரிப்பால் தமன்னா 6 - 7 இக்கும் அதிகமான பட
தெலுங்கில் சம்பளம் கொஞ்சம் கூடக் குறைய இருந்தாலும் உடனடியாக ஒ
இதனால், தமிழில் இவருக்கு படங்களே இல்லாத நிலை உருவாகியுள்ளது.

தெலுங்கில் கிட்டத்தட்ட 4 படங்களில் நடிக்கிறார்.

இதுகுறித்து தமன்னாவிடம் கேட்டால், அதிக சம்பளம் என்று கூறுவ
பிடித்திருந்தால்தான் நடிக்க ஒப்புக்கொள்வேன். தெலுங்கில் நான் நடிக்கும்
நான் கலக்கும் அளவு எனக்குப் பொறுப்பான வேடங்கள் வழங்கப்ப
அப்படங்களை ஒப்புக்கொண்டு நடித்துவருகிறேன் - என்றார்.

# ரஜினியின் ரணாவில் 7ஆவது நாயகியாக இலியானா



ரஜினியின் படத்தின் ஏழு நாயகிகளுள் ஒருவராக இலியானா ஒப்பந்தமாகியுள்ளதாக, இப்போதைய தகவல்கள் தெரிவிக்கின்றன. இலியானா தமிழ்ப் படத்தில் நடிப்பது அரிதாகவே இருக்கிறது. கேடி என்ற தமிழ்ப் படத்தில் தான் அவர் முதலில் அறிமுகமானார். ஆனால் அந்தப் படத்துக்குப் பின்னர் தெலுங்குக்குச் சென்றுவிட்டார்.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் அவர் ஒரு தமிழ்ப் படத்தில் நடிப்பதாக அறிவிப்பு வந்தது. அது ராணா படத்தில் ரஜினியுடன் ஜோடி சேர்வதாக இருந்தது. ஆனால் சம்பளம் போதாது என்று நடிக்க மறுத்தார் இலியானா.

அடுத்து விஜய்க்கு ஜோடியாக வேட்டைக்காரனில் நடிப்பார் என்று கூறப்பட்டது. ஆனால் அதில் அனுஷ்கா வந்துவிட்டார். அடுத்து விக்ரம் ஜோடியாக ஒரு படத்தில் ஒப்பந்தமாகி, பின்னர் அதிலிருந்தும் விலகினார். ஒருவழியாக ஷங்கரின் 3 இடியட்ஸில் விஜய்க்கு ஜோடியாக நடிக்க ஒப்பந்தமாகி படப்பிடிப்பிலும் பங்கேற்றுள்ளார்.

இந்த நிலையில், இப்போது ரஜினியின் ஜோடிகளில் ஒருவராக ராணாவில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளாராம் இலியானா.

# ...ா ஆசை

...ந்தால், எந்த நிமிடமும்
...ர் பிரபல பற்மின்டன்
...னாவைச் சேர்ந்தவர்
...பற்மின்டன் வீராங்கனை
...ந்து பெற்றவர். இப்போது
... ஒப்பந்தமாகியுள்ளார்.
...னிமாவில் நடிக்கும் ஆர்வம்
...உள்ளதாகவும் அவர் கூறி
...யுள்ளார்.

''உண்மையாகவே சினிமா
...வில் நடிக்க ஆர்வம்தான்.
... ஆனால் சும்மா வந்தோம்,
...போனோம் என்று இருக்
...கக் கூடாது. சூப்பர் ஸ்டார்
...ரஜினியின் ஜோடியாக
...நடிக்க வாய்ப்பு கிடைக்
...தமா சொல்லுங்கள்...
...இப்போதே, ஒப்பந்தத்தில்
...ளணை மூடிக்கொண்டு
...யெழுத்திட நான் ரெடி.
...ர் படத்தில் நடிக்க எந்தப்
...பண்தான் மாட்டேன்
...ன்பாள்'' - என்றார்.

# ...பினால் ...ாய்ப்புகள்

...ன்னா. அதிகப் படங்களில்
...ான்! அது கூடப் படப்பிடிப்பு
...பந்தமாகவில்லை.
...ார்கள்.
...ங்களைத் தவறவிட்டுள்ளார்.
...ப்புக்கொண்டு நடிக்கிறாராம்.

...ு கீட்டுக்கதை. படக் கதை
... அனைத்துப் படங்களிலும்,
...ட்டுள்ளன. அதனால் தான்

# உதட்டு முத்தம் அருவருப்பான விடயமே அல்ல - ப்ரியாமணி

பருத்தி வீரனில் கற்பழிப்புக் காட்சி, துரோணர் தெலுங்குப் படத்தில் நீச்சலுடைக் காட்சி எனக் கவர்ச்சியில் புரட்சி செய்து கொண்டிருக்கும் ப்ரியாமணி, அடுத்து ராஜ் என்ற படத்தில் உதடும் உதடும் ஒட்டும் முத்தக் காட்சியிலும் நடித்து, தனது நடிப்பு ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளார். இந்த முத்தக் காட்சி குறித்து சமீபத்தில் அவர் ஒரு விளக்கமும் அளித்துள்ளார்.

இதோ அந்த விளக்கம், அவரின் வார்த்தைகளில்...

''முத்தக்காட்சியில் நடிக்க எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை. இயக்குநர் வி.என். ஆதித்யாவும் நாயகன் சுமந்தும் இந்தக் காட்சி கதைக்கு மிகவும் அவசியமாய் இருப்பதாகக் கூறினர். எனவே அந்தக் காட்சியில் மிகுந்த ஈடுபாட்டுடன் நடித்தேன்.முத்தம் என்பது அருவருப்பான விஷயம் அல்ல. அது ஒரு பெரிய விஷயமே இல்லை. நடிப்பைப் போல அதுவும் ஒரு சாதாரண விடயம்தான். அந்தக் காட்சியை மிக அழகாக படமாக்கியிருந்தனர்'' - என்றார்.






# நிறைவேறியது அஞ்சலியின் ஆசை

ஒரு நாயகி என்றால் கண்டிப்பாக ஒரு குத்துப் பாட்டுக்கு ஆடவேண்டும், குட்டைப் பாவாடை அணிந்து ஹீரோவின் கனவில் நுழைந்து ஆட்டம் போடவேண்டும் என்ற இலக்கணத்தை மீறி வருகின்ற ஒரே நாயகி அஞ்சலி மட்டும் தான்.

அஞ்சலிக்கு குழு நடனத்தின் மீதும், கொமேர்ஷல் படங்கள் மீது ஆசையாம். அவரது ஆசை மகாராஜா திரைப்படத்தின் மூலம் நிறைவேறியிருக்கின்றதாம். இப்படத்தில் கொமர்ஷியல் அம்சங்களோடு யதார்த்தத்தையும் மிகைப்படுத்தாமல் சொல்லியிருக்கிறாராம் புதுமுக இயக்குநர் டி.மனோகரன்.

இப்படத்தின் பாடல் வெளியீட்டு விழாவில் சில பாடல் காட்சிகள் திரையிடப்பட்டன. முன்னைய தலைமுறைக்கும், இளைய தலைமுறைக்கும் நடுவே இருக்கின்ற இடைவெளி பற்றிப் பேசுகின்ற படம் இது. என்னுடைய இருபத்தைந்து வருட சினிமா வாழ்க்கையில் நான் ரசித்து நடித்த படம் இது என்றார் நாசர். இப்படத்தின் நாயகனான சத்யா, இதற்கு முன்பு சில படங்களில் நடித்திருந்தாலும், முதன் முறையாக ஒரு ஹீரோவாக முழுமையடைந்திருக்கிறார் என்று நம்ப வைத்தது அந்தப் பாடல் காட்சிகள். இசையில் கலக்கிய டி.இமானுக்கும் ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்புக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சத்யாவைப் பார்க்கும்போது என் மகன் ஜெயம் ரவியை பார்க்கின்ற மாதிரியே இருக்கிறது. அவருக்கு பெரிய எதிர்காலம் அமையவேண்டும் என்று வாழ்த்தினார் விழாவில் பேசிய இயக்குநர் மோகன். ஒரு முன்னணி ஹீரோவின் அப்பா, தன் மகன் போலவே இருக்கிறார் என்று இன்னொரு ஹீரோவை வாழ்த்துவது அபூர்வம். இதையே மேடையில் பேசிய அத்தனை பேரும் கூறினார்கள்.

சத்யாவை ஜெயம் ரவிக்குத் தம்பியாக நடிக்க வைக்கும் எண்ணம் கூட இருக்கிறதாம் இயக்குநர் மோகனுக்கு. 'மகாராஜா'வின் வெற்றிதான் அதனை முடிவுசெய்யவேண்டும்.





# பாத்தும்மா

சிறுகதை

எம்.ஐ.பிந்துல் ஹுதா ஸபீர்
ஓட்டமாவடி.

''வெள்ளத்தம்பி..... வெள்ளத்தம்பி.....''

மச்சானின் காட்டமான குரல் முற்றத்தில் ஒலித்த வேளையில், வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்தார் வெள்ளத்தம்பி. உப்பிப் பெருத்திருந்த கால்களில், கொப்புளங்கள் உருண்டு திரண்டு உதறி விடப்பட்ட நீர்த் துளிகளாக நிறைந்து கிடந்தன. உள்ளிருந்து கசிந்து வழியும் அழுக்கு நீர் கீழே போடப்பட்டிருந்த சாக்கில் ஊறிக்கொண்டிருந்தது.

வலியால் முனகிக் கொண்டிருந்த அவர், மச்சானின் குரல் கேட்டதும் தலையை உயர்த்தினார்.

குசினிப் பக்கமிருந்து ஓடி வந்த அவரது மனைவி பாத்தும்மா, ''வாங்க நானா'' என்று அவரைப் புன்னகையுடன் வரவேற்றாள்.

வெள்ளைச் சாரமும் அடர்ந்த தாடியும் தொப்பியுமாக, செருப்பைக் கழட்டி விட்டு, உள்ளே வந்தமர்ந்த மச்சான், எடுத்த எடுப்பிலேயே விஷயத்துக்கு வந்தார்.

''வெள்ளத்தம்பி! அந்தக் காச எப்ப தரப்போறாய்?

கைகளைப் பிசைந்தார் வெள்ளத்தம்பி.

''இஞ்செ பாரு. ரெண்டு ஏக்கர் வெள்ளாம செஞ்சே. உழவடிக்க, சூடடிக்க என்ட மிசினத்தான் எடுத்துட்டுப் போனெ. வெள்ளாமயெல்லாம் வெட்டி வந்து ஒரு மாசமாவுது. இன்னும் என்ட மிசின் கூலியத் தரல்ல.''''

''மச்சான்! உங்களுக்குத் தெரியுந்தான. வெதச்சி கொஞ்ச நாளெல எனக்கு கிரந்தி புடிச்சி, காலெல்லாம் வீங்கி, வயலுக்கு போவ, பாக்க ஏலாம வயலுக்க பூச்சி அடிச்சிப் போட்டுது. அதால, கதிரு புடுங்கயும் ஆள் கிடெக்காம, அப்படியே கிடந்து வெள்ளாம பழுதாப் பெய்த்து. ரெண்டு ஏக்கருக்கும் நூறு மூடையாவது கிடெய்க்குமெண்டு நினெச்சிருந்தன். கிடைச்ச நெல்லில வித்து கொஞ்சக் கடனத்தான் அடைக்க முடிஞ்சிது. இன்னும் கடன் இரிக்கி. வேற என்னயாவது செய்யெமெண்டு இரிக்கக்குல, திருப்பியும் கால் வருத்தம் புடிச்சிட்டு.''

''உன்ர தரித்திரக் கதெயெலாங் கேக்க நான் வரல்ல. என்ட மிசின் காச தரப்போறியா இல்லியா. அதெச் சொல்லு''

''என்ன மச்சான்! நான் இருந்தா தரமாட்டனா. நான் என்ன செய்யிற.''

''காசில்லாட்டி இரிக்கிற சாமான் எதெயாவது வித்துப் போட்டு காசப் பிரட்டுறான. இதெல்லாம் நானா செல்லிக்கிட்டு இரிக்கணும்''

''அவட கழுத்தில் காதில இரிந்த எல்லாத்தெயும் ஈடு வெச்சிப் போட்டுத்தான் உழவடிச்சி. வெள்ளாம வெதச்ச. இப்ப ஊட்ல விக்கறத்துக்கும் சாமான் ஒண்டுமில்லெ. நகயெ ஈடு மூள்றத்துக்கும் வழியில்லாமல் கிடக்கம். உங்களுக்குத் தெரியுந்தான மச்சான், உறவுக்கார நாம கொஞ்சம் பொறுத்துக்கலாந்தான மச்சான்...''

ஓஹோ... அப்ப, போனமுறை இஸ்லாமியில் ஹாஜியார் மாதிரி நானும் மிசின் கூலிய உட்டுத் தரணும் எண்டு சொல்றியா...?

''அதில்ல மச்சான்.....''

''நல்லாரிக்கே உன்ட கதெ. அவரு பணக்காரு. போடியாரு செய்வாரு, நான் அப்பிடிச் செய்ய ஏலுமா. இதுக்குத்தான் சொந்தக்காரனுவளுக்கு உதவி செய்யக் கூடாதெண்டு சொல்ற. கடெசில நஷ்டப்படுற நாம தான். இப்ப என்ட காசிக்கு என்ன வழியெண்டு செல்லுங்க ரெண்டு பேரும்''

கதவு நிலையில் சாய்ந்து நின்றவாறு, விழிநீர் ததும்ப யோசனையில் ஆழ்ந்திருந்த பாத்தும்மா சட்டென முந்தானையால் கண்களை துடைத்துக் கொண்டாள். சற்றும் மனம் இரங்காது, பணத்திலேயே குறியாய் நிற்கும் தன் நானாவைப் பார்க்கையில், விரக்தி அவளுள் வேதனையாகப் பரவிற்று.

''நானா! கொஞ்சம் பொறுத்துக்குங்க. இவகளுக்கு கால் சுகமாயினவுடன, உங்கட மிசின்ல கூலிக்கு நிக்கட்டும். நீங்க சம்பளம் குடுக்க வாணா. உங்களுக்குத் தாற காசில. கொஞ்சமா அதெக் கழிச்சிக்குங்க'' நானா யோசித்தார்.

''ம்.... அதுவும் நல்ல யோசினதான். அப்பிடித்தான் செய்யணும். வேற வழியில்ல. சொந்தக்காரங்களா வேற இருக்றீங்க பரவால்லெ. மிசின்ல கொஞ்ச நாள் கூடுதலா நிண்டா செரியாப் பெய்த்திம்''

சொல்லி முடித்த போது, அவரது முகம் இறுக்கம் தளர்ந்து புன்னகை துப்பிற்று. மெல்ல விடைபெற்றார்.

'பாத்தும்மா'! இஞ்செ வா...'

அவள், அருகில் வந்தமர்ந்தாள்.

''இப்படி கடன் அடெய்க்க நான் மச்சான்ட மிசின்ல வேலெ செஞ்சிக்கட்டு இருந்தா, ஊட்டுச் செலவுக்கு என்ன செய்ற....?''

''அதெப்பத்தியெலாம் நீங்க ஒண்டுக்கும் கவலப்படாதீங்க. நான் பாயிழைக்கிறென். நெல்லு குத்துறென், பெட்டி தட்டு செய்றென். கோழி முட்ட விக்கிறென். இதாலவாற காச வெச்சி நாம காலெத்த ஓட்டிக்கலாம். முதல்ல கடன அடெய்க்கணும்.''

பாத்தும்மாவைப் பற்றி அவருக்கு, நன்றாகத் தெரியும். வீட்டில் எப்போதுமே அவள் சும்மா இருப்பதில்லை . எதையாவது இழுத்துப் போட்டு ஓடியாடி வேலை செய்து கொண்டேயிருப்பாள். தாயிடம் பழகிய பழக்கம். எப்போதும் ஓய்வு ஒழிச்சல் இல்லாத வேலைதான்.

கல்பன் புல்லு, பயித்தம் புல்லு என கட்டுக்கட்டாக புற்களை வாங்கி அடுக்கி, அவற்றுக்கு பச்சை, சிவப்பு, கறுப்பு என சாயமிட்டு, வெயிலில் காயவைத்து, பருத்தி மனையில் வைத்து அரைத்து, குந்தியிருந்து பாயிழைப்பாள்.

ஒவ்வொரு நிறப்புல்லும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து, ஊடுருவி செழுமையுற்ற நிறக் கோர்வையாக மின்னும்.

எட்டு முழத்துக்கு நீண்டு கிடக்கும் அந்தப் பாய்களை சுருட்டியெடுத்து அசுவில் அடுக்குவாள்.

எஞ்சிய புற்களை வைத்து பல பல வடிவங்களில் பெட்டி தட்டுகளை இழைத்தெடுப்பாள். பாய்க்காரனைக் கூப்பிட்டு, அவனிடம் பேரம் பேசி, பாயையும் பெட்டி தட்டுக்களையும் விற்று, பணத்தைப் பெட்டிக்குள் பத்திரப்படுத்திக் கொள்வாள்.

நெல்குத்துவதிலும் பாத்தும்மா கெட்டிக்காரி. எத்தனை மூடை நெல்லானாலும் தனியாளாய் நின்று குத்தி முடித்து அரிசியாக்கி விடுவாள்.

இவையெல்லாம் பாத்தும்மாவுக்கு கைவந்த கலை. குனிந்து, நிமிர்ந்து ஓடியாடி உற்சாகமாக வேலை செய்து கொண்டேயிருப்பது அவளது இயல்பு. என்றாலும், கோழிக்குஞ்சு வளர்ப்பதில்தான் அவளுக்கு விருப்பம் அதிகம். அதில் ஓர் ஆத்மார்த்தமான மனநிறைவு அவளுக்கு.

ஒரு மாட்டு வாளிக்குள் அரைவாசி அளவுக்கு மண்ணை நிரப்பி, அதில் சுத்தமாகக் கழுவிய பத்துப் பதினைந்து கோழி முட்டைகளை அடை வைப்பாள்.

கோதுகளை உடைத்துக் கொண்டு வெளியே தலைநீட்டிப் பார்க்கும் கோழியின் உருவிலான உயிர்க் குஞ்சுகளைப் பார்க்கும் போது, அவளது உடலெங்கும் ஊமை மகிழ்ச்சி செழுமையுற்றுப் படரும். தாய்மை உணர்வுகள் சிலிர்ப்புற அதனை ரசிப்பாள். தனியாளாய் நின்று குடும்பத்தை நடாத்த வேண்டிய நிலை வந்தாலும், சிரமமின்றி சமாளிக்கக் கூடியவாறு. தன்னம்பிக்கையுடன் சகல கைத்தொழில்களையும் கற்று வைத்திருந்தாள் பாத்தும்மா.

அவளது பேச்சு கொடுத்த தைரியத்தில், மன அமைதியுற்று சுவரில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டார் வெள்ளத்தம்பி.

கஞ்சிப் பானையை அடுப்பிலிருந்து இறக்கி வைத்த பாத்தும்மா, அதில் கொஞ்சம் கோப்பைக்குள் கவிழ்த்து, செம்பில் தண்ணீரும் நிறைத்து எடுத்துக் கொண்டு வந்தாள்.

''என்ன படுத்துட்டீங்களா? குறுணல் கஞ்சி காச்சியிக்கென. எழும்பிக் குடிங்க. ராவும் ஒண்டுந் தின்னயுமில்ல''

கண்களைத் திறந்து சோர்வுடன் கஞ்சிக் கோப்பையை வாங்கிக் கொண்டார் வெள்ளித்தம்பி. சூடு தணிய வாயால் ஊதி ஊதி அதை உறிஞ்சிக் குடித்துக் கொண்டிருந்த போது, கட்டப்பைத் தாண்டி மீண்டும் சத்தம் கேட்டது.

''வெள்ளத்தம்பி... வெள்ளத்ம்பி...''

''மாமா வாறாக போலயிருக்கு'' சேலையைச் சரி செய்து கொண்டே எழுந்து சென்று வரவேற்றாள் பாத்தும்மா.

கஞ்சிக் கோப்பையை கீழே வைத்து விட்டு ''வாங்க வாப்பா இரிங்க'' என்றார் வெள்ளத்தம்பி.

பாயில் அமர்ந்து கொண்ட வாப்பா வெள்ளத்தம்பியைப் பார்த்துச் சொன்னார்.

''மகன்! உன்ட கால் வ்ருத்தம் சுகமாவணுமெண்டு நேத்திக் கடன் வெச்சிருந்தேன். நீ தந்த ரெண்டு மூட நெல்லுலெ ஒரு மரைக்கால வேறயா எடுத்து. நிய்யத்துப் பாணி காச்சி, ஹயாத்து நபி பேரல் பாத்திஹா ஓதணுமெண்டு நினெச்சிருந்தென். அவ உன்ட உம்மா அதெயும் தேடிக் கண்டுபுடிச்சி கொட்டித் திண்டுட்டா. நேத்திக்கடன் நிறைவேத்தினாத்தான் வருத்தம் சுகமாவும். அதால இஞ்செதான் பாத்திஹா ஓதுற வேலெயப் பார்க்கணும்''

அவர் சங்கடப்பட்டுக் கொண்டே தயங்கித் தயங்கித் தயங்கிச் சொன்னபோது. புன்னகைத்துச் சிரித்தாள் பாத்தும்மா.

''பரவால்ல மாமா. இஞ்செ கொஞ்சம் அரிசி கிடக்கு. நான் நிய்யத்துக் காச்சிறென். பாத்திஹவெல ஓதிடுவொம்''

அரிசியை அரித்து. பாவனைக்குள் கொட்டி, பக்கத்து மாட்டுப் பண்ணையில் பசும்பால் அரை போத்தல் கடனாகப் பெற்று, ஒரு மணி நேரத்திற்குள் நிய்யத்துப் பாணியை தயாரித்து முடித்துவிட்டாள். பாணியை பீங்கான்களில் அள்ளிவைத்து, தட்டினால் மூடியெடுத்துக் கொண்டு வந்து கணவருடன் பேசிக் கொண்டிருந்த மாமாவின் முன்னால் வைத்தாள். அங்கிங்கு தடவி ஊதுபத்திக் குச்சி இரண்டைக் கண்டெடுத்தாள். அதனைக் கொழுத்தித் திண்ணையில் வைத்துவிட்டு முக்காடுடன் ஓரமாக ஒதுங்கிக்கொண்டாள். பாத்ஹாவும் துஆவும் ஓதி ஸலவாத்தும் சொல்லி முடித்துவிட்டு நய்யத்துப் பாணியை கைகளால் தூக்கி உறிஞ்சி உறிஞ்சிக் குடித்தனர் இருவரும். பாத்துமா குசினிக்குச் சென்று பானைக்குள் எஞ்சியிருந்த பாணியை வழித்தெடுத்து மாமரத்துக்குக் கீழ் கூடி நின்ற வாண்டுகளைக் கூப்பிட்டு கொடுத்தாள்.

அகம் நிறைந்த சிரித்த முகத்துடன் விடைபெற்றுச் சென்ற வாப்பாவை வழியனுப்பிவிட்டு சுவரில் சாய்ந்து கொண்டார் வெள்ளத்தம்பி.

சேலையைத் தூக்கி இடுப்பில் செருகிக் கொண்டு, கையில் கோப்பையும் சீலையுமாக பக்கத்தில் வந்தமர்ந்தாள் பாத்தும்மா.

கையிலிருந்த அழுக்குச் சீலையால் அவரது கால் கொப்புளங்களில் வழிந்து கசிந்திருந்த நீரை ஒற்றியெடுத்துத் துடைக்கத் தொடங்கினாள்.

''பாத்தும்மா...''

''ம்...''

''என்னால உனக்கு எவ்வளவு கஷ்டம்''

''கஷ்டமெண்டு நினெச்சா கஷ்டம்தான். எனக்கு ஒண்டு வந்தா நீங்க பாக்கணும். உங்களுக்கு ஒண்டு வந்தா நான் பாக்கணும். இதுக்காவத்தான கல்யாணம் முடிக்கிறது. சரி அதிருக்கட்டும். மத்தியானத்துக்கு காதர் வாறணெண்டு சொல்லியிருக்கான். அவன்ட மோட்ட சைக்கிள்ளயே புளியந்தீவு ஆஸ்பத்திரியிலே போனா, லேசா மருந்தெடுத்திட்டு வந்திரலாம். ஊராணெண்டாலும் அவன்தான் சமயத்தில் நமக்கு உதவுறவன்'' நீரை ஒற்றியெடுத்து, வெள்ளைத் துணியால் காலில் கட்டுப் போட்டு விட்டு குசினிப் பக்கம் நுழைந்து கொண்டாள் பாத்தும்மா.

வெள்ளத்தம்பி, சுவரில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டார். கால் சுகமானதும் மச்சானின் மிசினுக்கு வேலைக்குப் போக வேண்டும். மிசினோடி ஓடி கடனை அடைக்க வேண்டும்.

வாழ்க்கை பாலைவனமாக வரட்சியுற்ற காட்சி. அவரது மூடிய விழிகளுக்குள் ஊமைப் படமாக ஓடிற்று. அந்தப் பாலைவனத்தில், ஒரு பசுந்தளிர் ரோஜா மலர்ந்து சிரிக்கிறது. அது தன் மனைவி பாத்தும்மா தான் என்பது அவருக்கு நிச்சயமாகத் தெரியும். மூக்கில் வந்து மொய்த்த கொசுவைக் கைவீசித் துரத்தியவாறு நிம்மதியாக உறங்கத் தொடங்கினார் வெள்ளத்தம்பி. ★

# தொழிற்சங்கத் தலைமைகள் பொறுப்புணர்ந்து செயற்படட்டும்

இரா.புத்திரசிகாமணி

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலின்போது முட்டி மோதி பிய்த்துப் பிடுங்கி சின்னாபின்னப்படுத்தியது போன்று தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுப் பிரச்சினையையும் மலையகத் தலைமைகள் நாசமாக்கி விடக்கூடாது.

இப்பொழுது தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாகக் கூட்டு ஒப்பந்தம் காலாவதியாகிவிட்ட நிலையில் மலையகத் தொழிற்சங்கங்கள் அனைத்தும் தனித் தனியாக அறிக்கைகளை விட ஆரம்பித்து விட்டன.

ஒவ்வொரு தொழிற்சங்கமும் எழுநூறு ரூபா முதல் ஆயிரம் ரூபா வரை தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்று வாய்க்கு வந்தபடி கூறுகின்றன.

**முன்பு தான் தொழிலாளர்களின் தலைவர்களான நீங்கள் கட்சிக்காக, உங்களது கொள்கைக்காக என்று பிரிந்து நின்றீர்கள். ஆனால் இப்போது இந்தச் சம்பள உயர்வுக் கோரிக்கை விடயத்தில் கட்சி, கொள்கை, கருத்து முரண்பாடு என்ற பேச்சுக்கே இடமில்லை.**

எல்லோரும் கேட்கின்றார்களே என்று நாமும் ஒரு தொகையைக் கேட்டு வைப்போம் என்று கேட்டுவிட்டு ஓய்ந்துவிடும் தொழிற் சங்கங்களும் இருக்கத்தான் செய்கின்றன.

இப்பொழுது மலையகத் தலைமைகள் தோட்டத் தொழிலாளர்களைப் பல பிரிவுகளாகப் பிரித்து வைத்துக் கொண்டு தேர்தல் நாடகத்தை நடத்தி மக்களை முட்டாளாக்கி விட்டுள்ளனர்.

ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், சாந்தினிதேவி, இராதாகிருஷ்ணன் ஆகியோரின் இணைத் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி, வேலாயுதத்தைச் செயலாளராகக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு அங்கமாக இருக்கும் இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், இவற்றுக்கு மேலாக ஓ.ஏ.இராமையாவின் செங்கொடிச் சங்கம், தீகாம்பரத்தின் தொழிலாளர் தேசிய சங்கம் என்பனவும் சதாசிவம், மனோகணேசன், பிரபா கணேசன் ஆகியோரது சங்கங்களும் சம்பள உயர்வு தொடர்பாகப் பலவித கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

இவர்களோடு ஜே.வி.பியின் முன்னாள் எம்.பி. இராமலிங்கம் சந்திரசேகரனின் தலைமையில் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கும் மலையகத் தொழிற்சங்கமும் போர்க்கொடி தூக்கியுள்ளது.

இந்த மலையகத் தலைவர்கள் தேர்தலின்போது தத்தமக்கு - தாம் சார்ந்த கட்சிகளுக்கு கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெறுவதற்காக தத்தமது நோக்கங்களுக்கு ஏற்றவாறு தொழிலாளர்களைப் பிரித்து வைத்துக் கொண்டனர்.

முன்பு பலருக்காக, பல கட்சிகளுக்காக, தமது சுயநலத்துக்காக தொழிலாளர்களைப் பிரித்து வைத்தனர்.

ஆனால் இப்பொழுது தலையெடுத்துள்ள சம்பள உயர்வுப் போராட்டம் ஒட்டுமொத்தமான தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்துடன் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ள ஒன்று.

முன்பு உங்களுடைய வார்த்தைகளைக் கேட்டு, உங்களை நம்பி, நீங்கள் கை காட்டியவர்களுக்கு ஓட்டுப் போட்டு, ஓட்டாண்டியானவர்களின் பிரச்சினை இது.

முன்பு தான் தொழிலாளர்களின் தலைவர்களான நீங்கள் கட்சிக்காக, உங்களது கொள்கைக்காக என்று பிரிந்து நின்றீர்கள். ஆனால் இப்போது இந்தச் சம்பள உயர்வுக் கோரிக்கை விடயத்தில் கட்சி, கொள்கை, கருத்து முரண்பாடு என்ற பேச்சுக்கே இடமில்லை.

எல்லோரது நோக்கமும் தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதுதான். இதை எந்தவொரு தலைவராலும் மறுக்கமுடியாது.

இப்பொழுது எழுநூறு, எழுநூற்றைம்பது ரூபா நாள் சம்பளம் வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கை பெரும்பாலான தொழிற்சங்கங்களால் முன்வைக்கப்பட்டுள்ளன.

இத்தொழிற்சங்கங்கள் உண்மையாகவே தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுக்கவேண்டும் என்று சிந்திப்பார்களேயானால், தோட்டத் துரைமார் சம்மேளத்துடன் பேச்சுக்களை ஆரம்பிக்கும் முன்னர் அனைத்துத் தொழிற் சங்கங்களையும் அழைத்துக் கலந்துரையாடி தொழிலாளர்களின் நாள் சம்பளமாக குறிப்பிட்ட ஒரு தொகையைக் கோருவதென ஏகமனதாகத் தீர்மானித்துக் கொண்டு பேச்சு நடத்தவேண்டும்.

கடந்த முறை சம்பள உயர்வு தொடர்பான பேச்சுவார்த்தையின்போது இடம்பெற்ற கசப்பான, விரும்பத்தகாத சம்பவங்களை மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்ட வேண்டிய அவசியம் கிடையாது.

'நல்ல மாட்டுக்கு ஒரு சூடு' என்பது போல் ஏற்கனவே இவர்கள் சூடுபட்டிருக்கின்றனர். மீண்டும் மீண்டும் இந்தத் தவறை மேற்கொள்ளக்கூடாது.

எந்தவொரு துறையிலும் இல்லாத வகையில் அடிப்படைச் சம்பளம் என்று ஒரு சிறுதொகையும், வரவுக்கான கொடுப்பனவு, தேயிலை இறப்பர் விற்பனை விலைக்கேற்ற கொடுப்பனவு, விசேட கொடுப்பனவு, மேலதிக வேலைக்கான கொடுப்பனவு என சிறு சிறு தொகைகளை உட்புகுத்தி இவற்றையெல்லாம் மொத்தமாகக் கூட்டி நாம் சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுத்துவிட்டோம் என்று தம்பட்டம் அடிக்கக் கூடாது.

இவ்வாறு பல பிரிவுகளாகப் பிரித்து சம்பளம் நிர்ணயிக்கப்படுவதாலும், இந்தக் கூட்டு ஒப்பந்தத்தில் உட்புகுத்தப்பட்டிருக்கும் நிபந்தனைகளாலும் 99 சதவீதமான தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளம் எனக் குறிப்பிடப்பட்ட சிறு தொகைக்கு மட்டுமே ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பன வழங்கப்படுகின்றன.

அதுமட்டுமன்றி சேவைக்காலக் கொடுப்பனவு, பிரசவ சகாயநிதி என்பனவும் அந்தச் சிறுதொகையின் அடிப்படையிலேயே கணிப்பிடப்படுகின்றன.


இதனால் உழைக்கும் தொழிலாளர்கள் தமக்குக் கிட்டவேண்டிய பல லட்சம் ரூபாய்களை இழக்க நேரிடுகிறது. எனவே எதிர்காலத்திலும் இப்படியான பாதிப்புக்கள் ஏற்பட தொழிற்சங்கங்கள் இடமளிக்கக்கூடாது.

இவை அனைத்தையும் உள்ளடக்கிய அடிப்படைச் சம்பளம் நிர்ணயிக்கப்படவேண்டும்.

அது எழுநூறு ரூபாவாகவோ அல்லது அதற்கு ஈடான தொகையாகவோ இப்போது நீங்கள் முன்வைத்துள்ளது போல் ஒரே குரலில் அடிப்படைச் சம்பளமாகப் பெற்றுக்கொடுத்து தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும்.

பெருந்தலைவர், சிறிய சங்கம் என்று பேதப்படுத்தாமல், சிறு துரும்பும் தேவைப்படும் என அனைத்துத் தொழிற்சங்கங்களின் இணக்கப்பாட்டுடன் கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவேண்டும். இவ்விடயத்தில் பெருந்தலைவர்கள் சிறிது விட்டுக்கொடுப்புடன் நடந்து இதர தொழிற்சங்கங்களையும் அரவணைத்து ஒரு உடன்பாட்டுக்கு கொண்டுவர முயற்சிக்க வேண்டும். இதைவிட்டு விட்டுத் தான் தோன்றித் தனமாகவும் தன்னிச்சையாகவும் ஒப்பந்தங்களைச் செய்துவிட்டு, நான் செய்ததுதான் ஒப்பந்தம் அதனைத் தான் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று விதண்டாவாதமாகப் பேசக்கூடாது.

ஏனைய தொழிற்சங்கங்களும் கூட்டு ஒப்பந்தம் செய்துகொண்டபின் இல்லாத மீசையை முறுக்கக்கூடாது, அப்படியான ஒரு தவறு ஏற்பட்டு விடும் என்ற நிலை உருவாகுமானால், இதர தொழிற்சங்கங்கள் அனைத்தும் ஒன்றுபட்டு அதனை ஆட்சேபிக்க இடமுண்டு. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பது போல் நீங்கள் ஒன்றுபட்டால் எதையும் சாதிக்க முடியும். இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால் தோட்டத்தொழிலாளர்களுக்கு விடிவே கிடையாது. ✱





## மூளைக்கு வேலை தரும் மாயச் சதுரம்

### கணிதப் புதிர் - 10


| | | | | |
|---|---|---|---|---|
| 22 | 25 | 32 | 09 | 16 |
| 17 | 19 | 26 | 12 | 10 |
| 11 | 13 | 20 | 27 | 29 |
| 30 | 28 | 14 | 21 | 23 |
| 24 | 31 | 08 | 15 | 18 |

இடம் மாறியுள்ள நான்கு எண்களை மாத்திரம் உரிய கூட்டிற்குள் மாற்றியிடுவதன் மூலம் நிரை, நிரல், மூலைக்கு மூலை கூட்டுத்தொகை 100 ஆகும் வண்ணம் எண்களை ஒழுங்கமையுங்கள். உங்கள் முயற்சி வெற்றியளித்ததா? என்பதை அறிய அடுத்த வாரம் இளஞ்சுடரைப் பாருங்கள்.

**கணிதப் புதிர் - 09 இன் சரியான விடை**

| | | | | |
|---|---|---|---|---|
| 20 | 13 | 06 | 29 | 22 |
| 21 | 19 | 12 | 10 | 28 |
| 27 | 25 | 18 | 11 | 09 |
| 08 | 26 | 24 | 17 | 15 |
| 14 | 07 | 30 | 23 | 16 |

# கற்றுயர்ந்த சிறுவன்



ஆரணன் ஏழாம் வகுப்பு மாணவன். அவன் ஆறாம் வகுப்பிலிருந்து மிகக் குறைந்த மதிப்பெண் எடுத்துத்தான் தேர்ச்சி பெற்று வந்தான். ஒருநாள் ஏழாம் வகுப்பில் அவனது ஆசிரியர் நன்னெறிப் பாடம் நடத்தினார். சிறந்த மாணவனாகக் கல்வி கற்கும் வழிமுறைகளைச் சொல்லிக் கொடுத்தார். பாடப்புத்தகம் தவிர வேறு வழிமுறைகளைக் கடைப்பிடித்து அறிவை விருத்தி செய்ய வேண்டும் என்றார்.

ஆரணன் இந்த முறைகளை அன்றே கடைப்பிடிக்கத் தொடங்கினான். பள்ளி ஓய்வு வேளைகளில் நூல் நிலையத்திற்குச் சென்று பெரியோர்கள் எழுதிய அறிவு நூல்களைப் படித்தான். வீணாக அங்கும் இங்கும் அலைவதில்லை. வானொலிப் பெட்டியின் அருகில் உட்கார்ந்து கேட்பான். இரவு வேளைகளில் தொலைக்காட்சிப் பெட்டியில் போதிக்கப்படும் கல்விச் செய்திகளையும் நாடகங்களையும் கண்டு களிப்பான். ஆரணனை அவனது அப்பா அடிக்கடி கவனிக்கத் தொடங்கினார். "இவ்வாறு வானொலியையும் தொலைக்காட்சியையும் ஆர்வமுடன் பார்க்கிறானே, எதைப் பார்க்கிறான்?" என்று கவனித்தார். அவன் பாட சம்பந்தமான வரலாறுகளைக் கவனிக்கிறான் என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைந்தார்.


இவ்வாறு கற்றுக் கொண்டே ஓய்வுவேளைகளில் சில அறிவியலில் மின் சாதனங்களைப் பயன்படுத்தி புதுமையானவை எதுவும் கண்டுபிடிக்க முடியுமா என்று முயற்சித்தான். ஏழாம் வகுப்பில் படிக்கும் போதே தானாக இயங்கும் ஒரு பொம்மையையும் செய்தான். அவனது வகுப்பில் முதல் மாணவனாகத் தேர்ச்சி பெற்றான். கல்வியில் சிறந்தான். வெளிநாடு சென்று படித்துப் பட்டம் பெற்றான். சிறந்த விஞ்ஞானியாகி நாட்டுக்கும் தனது வீட்டுக்கும் தனது நற்தொண்டுகள் செய்தான்.

ஆரணனை முன்னேற்றமடையச் செய்தது வெறும் பாடப்புத்தகங்கள் மட்டுமல்ல; கல்வியை வேறுமுறைகளிலும் கற்று வந்தால் அவன் சிறந்த கல்விமான் ஆனான்.

**- தே.கஜார்த்தன்**




## கிரகணம்



ஒரு வான ஜோதியின் ஒளியை ஒரு கிரகம் தடுக்கும்போது கிரகணம் தோன்றுகிறது. சந்திரன் பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் ஒரே நேர்கோட்டில் செல்லும்போது சூரியகிரகணம் உண்டாகிறது. சந்திரனுக்கும் சூரியனுக்கும் இடையில் பூமி செல்லும்போது, சந்திர கிரகணம் உண்டாகிறது. சந்திரன் சூரியனின் ஒளியினாலேயே பிரகாசிக்கிறது. அந்த ஒளியையே பூமி மறைக்கிறது. இதுவே சந்திர கிரகணம் எனப்படுகிறது.


## சூரியனும் பூமியும்



கிரேக்கர் முற்காலத்தில் பூமி அசையாமல் ஓர் இடத்தில் இருக்கிறதென்றும், கிரகங்களும் சூரியனும் பூமியைச் சுற்றி வருகின்றன எனவும் கருதினார்கள். போலந்து நாட்டைச் சேர்ந்த கொபர்நிக்கஸ் (Copernicus 1473 - 1543) எனும் வான சாஸ்திரி சூரியனைச் சுற்றியே பூமியும் ஏனைய கிரகங்களும் சுழல்கின்றன என்ற உண்மையைக் கண்டறிந்தார்.

கிறிஸ்துவுக்குப் பின் இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த டொலமி என்பவர், பூமியைச் சூரியன் சுற்றி வருவதாக படம் வரைந்துள்ளார்.

## பேன்




பேன் இறக்கை இல்லாத பூச்சி வகையைச் சேர்ந்தது. இது பறவை, மனிதர், விலங்குகளில் காணப்படுகிறது. பறவைகளில் வாழும் பேன் இறகுகளின் சில பகுதிகளையும் தோலின் பகுதிகளையும் கடித்துத் தின்று உயிர் வாழுகின்றது.

கோழிப்பேன் இவ்வகையைச் சேர்ந்ததாகும். மனிதர்களிலும் விலங்குகளிலும் இருக்கும் பேன்கள் இரத்தத்தை உறிஞ்சிக் குடித்து வாழ்கின்றன. பேன் பல தொற்றுநோய்களுக்குக் காரணமாகின்றது. ஒரு பேன் நாளொன்றுக்கு பத்து முட்டைகள் வீதம் ஒரு மாதத்துக்கு முன்னூறு முட்டைகள் வரை இடுகின்றன. பேன்களின் முட்டைகளை ஈர் என அழைக்கின்றோம். பேனின் முட்டைகள் மயிர்களில் ஒட்டிக் கிடந்து பொரிக்கின்றன.

## துலங்கும் புள்ளிகள்

# விபுலானந்த அடிகள்



தங்கத் தமிழ் விரியும் தமிழ் வாழும் மண்செழிக்க
எங்கும் ஒளிபரப்பி ஏற்றமுற- எங்களது
புத்திபுதுக்கு விபுலானந்தக் கல்விச்சீர்
சித்திக்கவர் துணையே சேர்.

அதிபராய் கல்வி ஆசானாய்ப் பத்திரிகை
பதியாகப் பலமொழிதேர் பண்டிதராய்- அதிமேதை
பயில்நற் பலகலைகள் பண்புணர்த்தும் பல நெறிகொள்
மயில்வாகனனெனும் பேர் மன்.

ஆன்மீகம் அன்பொளிர அறவழியில் நற்சேவை
தான் தொடர்ந்த தண்ணளி சேர் தகைமையுளர்- தேன்கலந்து
இனியவைகள் பேசி இனியவற்றைச் செய்தாண்ட
இனியவரை இதயத்தே இனி.

- 1892.03.26 இல் கிழக்கு மாகாணத்தின் காரைதீவில் பிறந்தார்.
- விபுலானந்தரின் இளமைப் பெயர் மயில்வாகனன் என்பதாகும்.
- 1924 ஆம் ஆண்டில் துறவறம் பூண்டார்.
- ஆசிரியாராய், அதிபராய், பாடசாலை முகாமையாளராகப், பல்கலைக்கழக விரிவுரையாளராய், பத்திரிகை ஆசிரியராய், மொழி பெயர்ப்பாளராய் பல நிலைகளில் கல்விக்குத் தொண்டாற்றினார்.
- இலங்கையின் வடக்கிலும், கிழக்கிலும் அவராற்றிய பணிகள் எண்ணிறந்தவை.
- 1947 இல் விபுலானந்த அடிகள் காலமானார்.

## இளஞ்சுடர் அங்கத்தவராகுங்கள்

மாணவர்களே இது உங்கள் பக்கம். இதில் உங்கள் ஆக்கங்களை வெளியிடுவதன் மூலம் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துங்கள். பக்கத்தில் உள்ள படிவங்கள் மூன்றை நிரப்பி உங்கள் பாஸ்போட் அளவான புகைப்படத்துடன் இளஞ்சுடருக்கு அனுப்பி வையுங்கள். பதிவு செய்யப்படும் அங்கத்தவரின் ஆக்கங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

## இளஞ்சுடர் விண்ணப்பப் படிவம்

பெயர்:- ..........................................................

பிறந்த திகதி:- ..........................................

வகுப்பு:- ..........................................

பாடசாலை:- ..........................................

சொந்த முகவரி:- ..........................................

கையொப்பம்:- ..........................................

மேற்படி மாணவர் எங்கள் பாடசாலையில் கல்வி கற்கிறார் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

அதிபர்/ ஆசிரியர்

..........................

கையொப்பம்

# நடிகர் விஜய் ஒருநாள் எம்.ஜீ.ஆர்.போல் புகழ் பெறுவார்




ஒரு காலத்தில் சினிமா நட்சத்திரங்கள் சின்னத்திரைக்கு வந்தால், 'சினிமாவில் வாய்ப்பு இல்லாமல் சின்னத்திரைக்கு வந்துவிட்டார்கள் என்று சிரிப்பார்கள். ஆனால், இப்போது கதையே வேறு. ஒரு சூப்பர் ஹிட் கொடுத்துவிட்டு, சின்னத்திரையில் கேம் ஷோ செய்கிறார் சல்மான் கான். கௌதம் மேனன்கூட சின்னத்திரையில் சீரியல் பண்ணப் போகிறார் என்று விகடனில் தான் படித்தேன். சின்னத்திரையும் கலையின் ஒரு பகுதி தானே'' - பேட்டியை இவ்வாறு பீடிகையுடன் ஆரம்பிக்கிறார் நடிகர் சத்யராஜ். விஜய் ரி.வியின் 'ஹோம் ஸ்வீட் ஹோம் கேம்' நிகழ்ச்சியில் சத்யராஜ்தான் முக்கிய நடிகர்.

கே:-''உங்கள் சின்னத்திரை பிரவேசத்துக்கு வாழ்த்துக்கள். அப்படியானால், இனிமேல் சினிமாவில் உங்கள் நகைச்சுவைக் காட்சிகளைப் பார்க்க முடியாதா?''

ப:-''இந்திய சினிமாவில் டூயட் முக்கியம். குறிப்பிட்ட வயதுக்கு மேல் ஒரு கதாநாயகன் டூயட் ஆடிக் கொண்டு இருந்தால், சகித்துக் கொள்ள முடியுமே தவிர, பார்க்க நன்றாக இருக்காது. இப்போது எனக்கு 57 வயது. சினிமாவில் எனக்கு அமிதாப் தான் ரோல் மொடல். ரி.வி-யிலும் அவரையே ரோல் மொடலா வைத்துக் கொள்ளலாமே என்று முடிவு எடுத்துதான் இந்த ரி.வி வாய்ப்பை ஏற்றுக் கொண்டேன்''

கே:-''உங்கள் மகன் சிபிராஜால் சினிமாவில் இன்னும் ஒரு நல்ல இடம் பிடிக்க முடியவில்லையே?''

ப:-''இந்த மாதம் மட்டும் சிபி மூன்று படங்களில் நடிக்க வந்த வாய்ப்பை மறுத்திருக்கிறான். இதே சூழ்நிலையில் நான் இருந்திருந்தால், வருகின்ற வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வோமே என்று நினைத்திருப்பேன். ஆனால் இன்றைய இளைஞர்களுக்கு அந்த அவசரம் இல்லை. இப்போது கார்த்தி நடிக்கும் படங்கள் அடுத்தடுத்து வெற்றி. முன்பு இப்படி வெற்றி பெற்றிருந்தால், இந்நேரம் 50 படங்களில் நடிப்பதாக அறிவிப்புகள் வந்திருக்கும். ஆனால், கார்த்தி எவ்வளவு நிதானமாய் இருக்கிறார் பாருங்கள். நானும் சிபியும் சேர்ந்து நடிக்க நிறைய வாய்ப்புக்கள் வந்தன. ஆனால் மறுத்து விட்டோம். நான் படிக்கிற காலத்திலேயே லேசாக பாஸ் பண்ணிவிட்டால் போதுமென்று நினைக்கிற ஆள். ஆனால், சிபி பரீட்சையில் சிறப்பாக சித்தி பெறவேண்டும் என்று நினைக்கிறான். அதற்கு கொஞ்சம் காலம் ஆகலாம். ஆனால், சிபி கட்டாயமாக சினிமாத்துறையில் வெற்றி பெறுவான்''

கே:-விஜய்யும் நிச்சயம் அரசியலில் பிரவேசிப்பார் என்று எண்ணுகிறோம். அவர் அரசியலிலும் வெற்றி பெறுவாரா?

ப:-''பொதுவாக, தங்கள் துறையில் வெற்றி கண்டவர்களுக்கு அடுத்து என்ன செய்யலாம் என்ற வேகம், உத்வேகம் அதிகமாக இருக்கும். அந்த ஆர்வம் விஜய்யிடம் நிறையுவே இருக்கிறது. அவரது சினிமா பிரவேசம் இலகுவாக இருந்திருக்கலாம். ஆனால், தனக்கென்று ஓர் இடத்தைப் பிடிக்க அவர் 20 வருடங்கள் போராடியிருக்கிறார். அந்தப் போராடும் குணம் விஜய்யை எந்தத் துறையிலும் ஜெயிக்கவைக்கும். ஒரு முறை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரைப் பற்றிக் கூறிய பேரறிஞர் அண்ணா 'தம்பி எம்.ஜி.ராமச்சந்திரன் சினிமாவில் முதல் இடத்தில் இருக்கிறார். சினிமாத் தொழிலுக்குவராமல் வேறு எந்தத் தொழிலுக்குச் சென்றிருந்தாலும், அங்கும் அவர் முதல் இடத்தில்தான் இருந்திருப்பார்' என்று தெரிவித்தார். 10 வருடங்கள் கழித்துப் பாருங்கள். அதே போலத்தான் விஜய்யும் வெற்றி பெற்றிருப்பார்.

கே:-இலங்கைக்குள் திருமாவளவனை அனுமதிக்க மறுத்ததற்குக் கண்டனம் தெரிவித்தீர்கள். ஆனால் எதிர்கா லத்துக்குப் பயன்படுத்திக்கொள்கிறார் என்றும் ஒரு குற்றச்சாட்டு இருக் கிறதே?''

ப:-அரசியல் கட்சிகள் தேர்தலை மனதில் வைத்துச் செயற்படுவதைத் தவிர்க்க முடியாது. இப்போது நான் மனதில் நினைக்கிற அளவுக்கு, வெளியே உரத்துக் குரல் கொடுக்க மாட்டேன். ஏதாவது அதிகமாகப் பேசி 'சத்யராஜ் சட்டத்துக்குப் புறம்பாகப் பேசிவிட்டார் என்று சொல்லி சீமான் மாதிரி நாலைந்து மாதம் என்னைப் பிடித்து உள்ளே போட்டுவிட்டார்களானால், என்னை நம் பிப் படம் எடுக்கும் தயாரிப்பாளர்க ளுக்கு யார் பதில் சொல்வது? இது மாதிரியான காரணங்களை மனதில் வைத்துத்தான் எந்த ஒரு மனிதனும் போராட வேண்டி இருக்கிறது. இந்திய சுதந்திரப் போராட்டம் நடந்தபோது இந்தியாவின் சனத்தொகை 35 கோடி. அதில் வெறும் 35 ஆயிரம் பேர்தான் மறியலுக்குப் போனார்களாம். அதிகாலை எழுந்து பால் வாங்க வேண்டும், உணவுப் பொருள் வாங்க வேண்டும் , பிள்ளைகளை பாடசாலையில் கொண்டு போய் விடவேண்டும் என்றறெல்லாம் அவனவனுக்கு தினமும் போராட்ட வாழ்வுதான். அதை எல்லாம் தாண்டித்தான் வாழ்க்கையில் முன்னேற வேண்டியிருக்கிறது. அந்த வகையில் திருமாவளவன் தன்னால் முடிந்ததைச் செய்கிறார். அவ்வளவு தான்!''

கே:-பார்வதியம்மாள் மரணத்துக்கு இங்கு ஒரு கௌரவமான அஞ்சலிக் கூட்டம்கூட நடத்த முடியவில்லையே?''

ப:-என் தமிழ்க் குடும்பத்தில் நிகழ்ந்த மரணம் இது. உலகத் தமிழர்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு. இறுதிக் கட்டப் போரின்போதும், மகனையும் தம் மக்களையும் விட்டுச் செல்ல மாட்டோம் என்ற வைராக்கியத்தோடு களத்தில் நின்ற அந்த வீரத் தாய்க்கு என் வணக்கங்கள்.

80 வயதைக் கடந்த அந்தத் தாய்க்கு தமிழகத்திலும் ஈழத்திலும் நேர்ந்த கொடுமைகள் மறக்க முடியாதவை. தமிழகத்துக்குச் சிகிச்சைக்கு வந்த அவரைத் திருப்பி அனுப்பியது, மத்திய, மாநில அரசுகள் செய்த மாபெரும் தவறு. துரோகம். ✱

# பெண்களை ஆபத்திலிருந்து மீட்கும் கவரிங் நகை



ஆபரணங்கள் அணிந்து தம்மை அழகு படுத்த விரும்பாத பெண்கள் யாராவது இருக்கிறார்களா? என ஆய்வு செய்தால் எவரையுமே இந்த அணிக்கெனத் தேடிக்கொள்வது கடினமாகலாம். துறவறம் பூண்டோரில் ஒரு சிலர் தான் கழுத்தில் மாலையே அணியாமல் காட்சிதரக் கூடும். ஆபரணங்கள் பெண்களை அழகு செய்கின்றன. கையிலே வளையல், காலிலே கொலுசு, இடுப்பிலே ஒட்டியாணம், காதிலே தோடு, கழுத்திலோ சங்கிலி, அட்டியல், தாலிக் கொடி எனப் பல வகையான ஆபரணங்களைப் பெண்கள் அணிகிறார்கள். மேலும் மூக்குத்தி, தலையிலே உச்சிப்பட்டம், விரலிலே மோதிரம் என்று ஆபரணங்களின் பட்டியலோ நீண்டு செல்கின்றது.

திருமணமாகும்போது பெண்களை ஆபரணங்களால் அலங்கரித்து மணவறையிலே மணமகளாக அமரவைத்திருப்பார்கள். பாவையாய்ப், பதுமையாய் அவள் அலங்காரியாய், ஒய்யாரியாய் எல்லோர் கவனத்தையும் ஒரு கணம் ஈர்த்து விடுகிறாள். அவளது மணக்கோலத்தைக் காணவரும் உறவினர்களோ, நண்பர்களோ, பெண்களாயின் அவர்களும் இந்த ஆபரணங்களை அணியாமல் திருமணத்திற்கு வருவதில்லை. அதிலே விசேடம், அனைத்துமே தங்கத்தாலானவையாக ஒளி விடுகின்றன. அவர்களின் சொந்தமாக இல்லாவிட்டால் இரவலாகவேனும் வாங்கி அணியாமல் எமது பெண்கள் விசேட நிகழ்வுகளுக்குப் போவதற்கு விரும்பு வதில்லை. அது வெட்கம், கௌரவக் குறைவு எனக் கருதப்படுகிறது.


மதிப்பு மிக்கதும் பெறுமதி மிக்கதுமான இத்தகைய நகைகள். ஆபரணங்கள் பெண்களின் மதிப்பை உயர்த்துகின்றன. ஆபரணங்களால் தம்மை அழகூட்டும் பெண்கள் அதனால் பலவேளைகளில் ஆபத்தையும் தேடிக் கொள்ள நேர்கிறது. வீட்டிலிருந்து வெளியே எங்கு செல்வதானாலும் கழுத்தில் ஒரு சிறிய சங்கிலியாவது அணிந்து செல்லுதல் தமிழர் மரபு. இன்றைய நாட்களில் கழுத்துச் சங்கிலியை கண்பார்த்திருக்க பலாத்காரமாக கள்வர்கள் அறுத்துச் செல்லும் - பறித்துச் செல்லும் பல சம்பவங்கள் நிகழ்ந்து வருகின்றன. கடைக்குப் போகும்போதும், கோவிலுக்குப் போகும்போதும், களியாட்டங்களுக்குப் போகும்போதும் கள்வர்கள் காத்திருந்து பின் தொடர்ந்து நகைகளைப் பறித்துச் செல்கின்றனர். பெறுமதிமிக்க தங்க நகைகளை அணிவோர் இதனால் சிலவேளை உயிரிழக்கும் ஆபத்தையும் தேடிக் கொள்வதுண்டு.

ஆபரணங்கள் தங்கத்தில் மாத்திரமன்றி வெள்ளியிலும் செய்யப்பட்டாலும், அவற்றைத் தவிர்த்து கவரிங் நகைகளை இப்பொழுது விற்பனை செய்யும் கடைகள் தாராளமாக உள்ளன. அவை தங்க நகைகளிலும் மேலான கண்ணைக் கவரும் கவர்ச்சியுடையவைகளாய் உருவாக்கப்படுகின்றன. எமது உயிர்காக்கவும் தங்க உடமைகளைப் பாதுகாக்கவும் அவை எமக்கு உதவும். எனவே பெறுமதி மிக்க தங்க ஆபரணங்கள் எம்மி டம் இருப்பினும், பொது இடங்களுக்கு அவற்றை அணிந்து செல்வதைத் தவிர்ப்போம். தங்கம் பெறுமதியானது. அத்தகைய தங்க நகைகளை வைத்திருப்போரின் செல்வத்தின் மதிப்பை அவை அளவிட்டுக் காட்டுகின்றன. அந்தத் தங்க நகைகள் எமது அவசிய தேவைகளுக்கு அடைவு நகைகளாகி எமது தேவையை நிறைவு செய்வதுண்டு. எனினும் பெண்கள் தமது உயிரையும், மதிப்பு மிகும் ஆபரணங்களையும் இழப்பதைத் தடுக்கக் கவரிங் நகைகளே பாதுகாப்பானவை. சிலவேளைகளில் அவை கவரிங் நகையென்பதை அறியாத கள்வர்கள். அதனைத் தங்க நகையென எண்ணிச் செயற்படுவதுமுண்டு.

தனிமையில் சென்றுகொண்டிருந்த பெண்ணொருவரின் நகையை அறுத்துச்சென்ற கள்வன், அது கவரிங் நகையென அறிந்தபோது அந்தப் பெண்ணைத் தாக்கி ஏசி, தான் அறுத்தெடுத்த சங்கிலியை கண்முன்னால் வீசிச்சென்ற சம்பவமும் நிகழ்ந்துள்ளது. எனவே தங்க நகையணிவோரே கவனம். புன்னகையைப் போன்று உயர்வான நகை வேறெதுவும் பெண் களுக்கு அழகைத் தராது என்பது பெரியோர் வாக்கு எனவே என்றும் புன்னகை பூத்த முகத்தினராய் மற்றவர்களுக்கு மதிப்பளித்து, கௌரவமளித்துப் பழகுவீர்களானால் அது என்றும் உங்களுக்கு சமூகத்தின் மத்தியில் மதிப்பையும் கௌரவத்தையும் பெற்றுத் தரும். இருப்பினும் நகைகளை அணியும் வேளைகளில் உங்களை ஆபத்திலிருந்து பாதுகாக்கும் வழி வகையையும் தெரிந்து கொண்டே அணியுங்கள். ★

தர்மினி பார்த்தீபன்

# குடற்புண் ஏற்படக் காரணம் என்ன?




கேள்வி:- குடற்புண் என்று சொல்கிறார்களே, அப்படி என்றால் என்ன? வயிற்றுக்குள் புண் எதனால் ஏற்படுகிறது? அதற்கான அறிகுறிகள் எவை?

பதில்:- எமது சமிபாட்டுத் தொகுதியின் உட்பகுதி ஒரு மென்சவ்வுப் போர்வையால் பாதுகாக்கப்படுகின்றது. எமது இரைப்பையில் சுரக்கப்படும் அமிலத்தன்மை வாய்ந்த சமிபாட்டுச் சூறுகளால் இவை சாதாரணமாக பாதிக்கப்படுவதில்லை. ஆனால் அமிலத்தின் அளவு கூடும் போது (கரப்பு கூடுவதனாலோ அன்றி புறக்காரணிகளாலோ) இந்த மேலணிப் போர்வை பாதிக்கப்பட்டு துவாரங்கள் அல்லது காயங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. இதனையே வயிற்றுப் புண் அல்லது குடற்புண் என அழைக்கிறோம். பாதிப்பு இரைக்குழாயில் ஏற்படும்போது DES OPHAGEAL ULLER எனவும், இரைப்பையில் ஏற்படும் போது GASTRIC ULCER எனவும் முன் சிறுகுடல் பாதிக்கப்படும் போது DUOD ENAL ULCER எனவும் அழைப்போம். இப்போது இந்நோயின் தாக்கம் உலகளாவிய ரீதியில் அதிகமாகக் காணப்படுகிறது. அதே போல் மிக நவீன சக்திவாய்ந்த மருத்துவ முறைகளும் இப்போது நடைமுறைக்கு வந்துள்ளன.

இந்நோய் எப்படி ஏற்படுகிறது? நீண்ட காலமாக இரைப்பையில் சுரக்கப்படும் அளவுக்கதிகமான அமிலமே இந்நோய்க்கான காரணியாக நம்பப்பட்டு வந்தது. எனவே அமிலத்தை நடுநிலைப்படுத்துவது மட்டும் நோயைக் குணப்படுத்தும் எனவும் கருதப்பட்டது. நோயை உண்டாக்குவதில் அமிலத்தின் பங்கு மிகக் கணிசமாகுமென்பது உண்மைதான். எனினும், தற்கால ஆய்வுகளின்படி Helicobacter Pylori cus (H.pylori) எனும் பக்ரீரியாவே பாதிப்பை ஏற்படுத்துவதில் முக்கிய பங்காற்றுவது தெரியவந்துள்ளது. இதனை விட, தற்காலத்தில் பெருமளவில் பாவிக்கப்படும் ஸ்ரிரொயிட் அல்லாத வலி நிவாரணிகள் nonsteroidal anti-inflama tory drugs (NSAIDS) காரணமாயிருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. (உதாரணம்: அஸ்பிரின்), சிகரட் புகைப்பதும் பாதிப்பை ஏற்படுத்துவதோடல்லாமல் சிகிச்சை தோல்வியடையவும் காரணமாக அமைகிறது. H.pylori கிருமி நோயுடன் தொடர்புபட்டிருப்பது அறியப்பட்டுள்ளது. மேலும் H.pylori நுண்ணுயிர் எதிர் மருந்துகள் மூலம் அழிக்கப்படும் போது நோயாளர்கள் பூரண குணமடைவதும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

புரஸ்ரோ கிளன்ரின் (Prostogl andin) என்னும் பதார்த்தம் எமது உடலில் ஏற்படும் தொற்றுக்களை எதிர்த்து வெல்ல அவசியமானவை. சமிபாட்டுத் தொகுதி மேலணி பழுதடைவதிலிருந்து இது பாதுகாப்பை வழங்குகிறது. NSAID வலிநிவாரணிகள் புரஸ்ரோகிளன்டினைத் தடுப்பதன் மூலம் மேலணி பழுதடைவதை ஊக்குவிக்கின்றன. அஸ்பிரின் (Aspi rin), புரூபன் (Lbu pro ten), நப்ரொக்சென் (Na proxen) ஈரிடோலெக் (Eto dolac) என்பன இந்தவகை மருந்துகளில் சிலவாகும்.

புகைத்தல் குடற்புண்ணை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் பாதிக்கப்பட்ட இடத்திலிருந்து இரத்தம் வெளியேறல், இரைப்பை அல்லது முன்சிறுகுடல் பாதிப்படைதல், (PERFORATION) குடல் அடைப்பு என்பன ஏற்படவும் காரணம் ஆகிறது. ஆனால் எம்மில் பலர் நம்பிக் கொண்டிருப்பதைப் போல மதுசாரம், கோப்பி, காரமான உணவுகள், கபீன் (Caffeine) என்பன வயிற்றுப்புண்ணை ஏற்படுத்துவதற்கு விஞ்ஞான பூர்வமான ஆதாரங்கள் இல்லை. ஆனால் இவை வேறுவகை ஆபத்துக்களை விளைவிக்கக் கூடும். எனவே இந்தப் பதார்த்தங்களுக்கும் வயிற்றுப் புண் ஏற்படுவதற்கும் தொடர்பு இல்லை என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

அநேகமாக இந் நோயாளர்களில் வெளிப்படையான அல்லது உபாதை ஏற்படுத்தக் கூடிய குணங்குறிகள் இருக்க மாட்டாது (Silent). பொதுவாக சாப்பாடு சரியாக சமிபாடடையாதது போலவும், வயிற்றின் மேற்பகுதியில் சிறிது எரிவும் காணப்படும். அமில நடுநிலையாக்கிகளுடன் (Antacids) குணமாகி விடும். வயிறு நிறைந்தது போல் காணப்படும். குறிப்பாக நீராகாரம் அருந்த முடியாமல் இருக்கும். சாப்பிட்டு 1-3 மணித்தியால நேரத்திற்குள்ளாகவே வெற்று வயிறு (பசி) உணர்வு மேலிடும். சிலவேளை மெல்லிய வயிற்றுப் பிரட்டல் இருக்கலாம். வாந்தி இந்த நிலையைச் சீர் செய்யும். அநேகமாக நடுநிசியில் வயிற்று நோ உங்களை நித்திரையிலிருந்து எழச் செய்யும்.

இவற்றைவிட கறுப்பு நிறமாக மலம் வெளியேறுவதும் இடம்பெறலாம். வாந்தியுடன் இரத்தம் வெளியேறக் கூடும். இவை ஆபத்தான அறிகுறிகளாகும். மேலும் நெஞ்சு நோ, களைப்பு, நிறைக்குறைவு என்பனவும் ஏற்படலாம். வயிற்றுப்புண் இருப்பதாக உணர்ந்தால் உடனடியாகவே மருத்துவ ஆலோசனை பெறுவதே சாலச் சிறந்தது. ✱ ✱

இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் ஜோன் பொன்னையா. நீங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரிகள்.

**இலவச மருத்துவ ஆலோசனை**

I.) சுடர்ஒளி, யாழ்.அலுவலகம்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

II.) சுடர்ஒளி,
85, ஐயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

# வெங்காயத்தின் மருத்துவ குணங்கள்

வெங்காயத்தை ஆங்கிலத்தில் 'ஒனியன்' என்கிறார்கள். இது யூனியோ என்ற லத்தீன் வார்த்தையிலிருந்து தோன்றியது. இதற்கு பெரிய முத்து என்று அர்த்தம்.

வெங்காயத்தின் காரத் தன்மைக்குக் காரணம் அதில் அலைல் புரோப்பைல் டை சல்பைடு என்ற எண்ணெயாகும். இதுவே வெங்காயத்தின் நெடிக்கும், நமது கண்களில் பட்டு கண்ணீர் வரவும் காரணமாக இருக்கிறது. சிறிய வெங் காயம், பெல்லாரி வெங்காயம் இரண்டும் ஒரே தன்மையை உடையன. ஒரே பலனைத்தான் தருகின்றன.

வெங்காயத்தில் புரதச்சத்துக்கள், தாது உப்புக்கள், வைட்டமின்கள் உள்ளன. எனவே நம் உடம்புக்கு இது ஊட்டச் சத்தைத் தருகிறது.

பல நாடுகளில் வெங்காயத்தை மருந்துப் பொருளாகப் பயன்படுத்துகிறார்கள். நமது பாட்டி வைத்தியத்திலும், வெங்காயம் முக்கிய இடம் வகிக்கிறது. விஞ்ஞானிகள் வெங்காயத்தின் மகிமையைப் பாராட்டுகிறார்கள்.

வெங்காயத்தை எப்படிப் பயன்படுத்தினால், என்ன பலன்கள் கிடைக்கும்?

✱ நாலைந்து வெங்காயத்தை தோலை உரித்து அதோடு சிறிது வெல்லத்தைச் சேர்த்து அரைத்து சாப்பிட பித்தம் குறையும், பித்த ஏப்பம் மறையும்.

✱ சம அளவு வெங்காயச் சாறு, வளர்பட்டை செடி இலைச்சாற்றை கலந்து காதில்விட காதுவலி, குறையும்.

✱ வெங்காயச் சாறு, கடுகு எண்ணெய் இரண்டையும் சம அளவில் எடுத்து சூடாக்கி இளஞ் சூட்டில் காதில் விட, காது இரைச்சல் மறையும்.

✱ வெங்காயத்தைத் துண்டுகளாக நறுக்கி, சிறிது இலவம் பிசினைத் தூள் செய்து சேர்த்து, சிறிது கற்கண்டுத் தூளையும் எடுத்து, அவைகளையும் பாலுடன் சேர்த்து சிறிது சாப்பிட்டு வர எல்லா மூலக்கோளாறுகளும் நீங்கும்.

✱ வெங்காய நெடி சில தலைவலிகளைக் குறைக்கும். வெங்காயத்தை வதக்கிச் சாப்பிட உஷ்ணத்தால் ஏற்படும் ஆசனக் கடுப்பு நீங்கும்

✱ வெங்காயத்தைச் சுட்டு, சிறிது மஞ்சள், சிறிது நெய் சேர்த்து, பிசைந்து மீண்டும் லேசாகச் சூடு வைத்து உடையாத கட்டிகள் மேல் வைத்துக் கட்டினால் கட்டிகள் உடனே பழுத்து உடையும்.

✱ வெங்காயச் சாறு சில வயிற்றுக் கோளாறுகளை நீக்கும். இதை மோரில் விட்டுக் குடிக்க இருமல் குறையும்.

✱ வெங்காயச் சாற்றையும், வெந்நீரையும் கலந்து வாய் கொப்பளித்து, வெறும் வெங்காயச் சாற்றை பஞ்சில் நனைத்து பல் ஈறுகளில் தடவிவர பல்வலி, ஈறுவலி குறையும்.

✱ வெங்காயத்தைச் சமைத்து உண்ண உடல் வெப்ப நிலை சமநிலை ஆகும். மூலச்சூடு தணியும்.

✱ வெங்காயத்தை அவித்து, தேன், கற்கண்டு சேர்த்துச் சாப்பிட உடல் பலமாகும்.

✱ வெங்காயத்தை வதக்கி வெறும் வயிற்றில் சாப்பிட்டுவர நரம்புத் தளர்ச்சி குணமாகும்.

✱ வெங்காயத்தை வதக்கித் தேன் விட்டு இரவில் சாப்பிட்டு, பின் பசும் பால் சாப்பிட ஆண்மை பெருகும்.

✱ படை, தேமல் மீது வெங்காயச் சாற்றைப் பூசி வர அவை மறைந்து விடும்.

✱ திடீரென மூர்ச்சையானால் வெங்காயத்தைக் கசக்கி முகரவைத்தால் மூர்ச்சை தெளியும்.

✱ வெங்காயச் சாற்றையும் தேனையும் கலந்து அல்லது வெங்காயச் சாற்றையும், குல்கந்தையும் சேர்த்துச் சாப்பிட்டால் சீதபேதி நிற்கும்.

✱ வெங்காய ரசத்தை நீர் கலந்து குடிக்க நன்கு தூக்கம் வரும்.

✱ பனைமர பதநீரோடு வெங்



காயத்தை நறுக்கிப் போட்டு சூடாக்கிக் குடித்து வர மேகநோய் நீங்கும்.

✱ வெங்காயம், அவரை இலை இரண்டையும் சம அளவு எடுத்து அரைத்துச், சாப்பிட மேகநோய் குறையும்.

✱ வெங்காயத்தில் குறைவான கொழுப்புச் சத்து உள்ளது. எனவே குண்டானவர்கள் தாராளமாக வெங்காயத்தைப் பயன்படுத்தலாம்.

✱ பச்சை வெங்காயம் நல்ல தூக்கத்தை தரும். பச்சை வெங்காயத்தை தேனில் கலந்து சாப்பிடுவது நல்லது.

✱ வெங்காயம் வயிற்றிலுள்ள சிறுகுடல் பாதையைச் சுத்தப்படுத்துகிறது. ஜீரணத்துக்கும் உதவுகிறது.


✱ வெங்காயம் ரத்த அழுத்தத்தை குறைக்கும். இழந்த சக்தியை மீட்கும்.

✱ தொடர்ந்து புகைப்பிடிப்பவர்கள் வெங்காயச் சாற்றை நாள் ஒன்றுக்கு அரை அவுன்ஸ் வீதம் மூன்று வேளை சாப்பிட்டு வர நுரையீரல் சுத்தமாகும்.

# கனல் கக்கும் வெய்யிலில் அனல் பறக்கும் பிரசாரம்!







எஸ்.சுரேந்திரஜித்

தமிழகத் தேர்தல் பிரசாரம் மிகமிக அவசர காலத்தில் அரங்கேறி வருகிறது. கலைஞர் திருவாரூரிலும், ஜெயலலிதா திருச்சியிலும் தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்து வைத்துள்ளனர். தத்தமது பூர்வீக ஊர்கள் எனக் கூறியபடி இங்கு பிரசாரத்திற்கு பிள்ளையார் சுழியிடப்பட்டது. கருணாநிதியின் ஊழல் கட்சியைப் பற்றி ஜெயலலிதா பேசும் போதெல்லாம் அவர் செய்த ஊழல்கள் நினைவுக்கு வருகின்றன. இருகட்சிகளுக்கும் மாற்றான அணியைத்தான் மக்கள் தேடுகின்றனர். ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தால் என்ன செய்வார் என்பதனை மனக் கண்முன் நிறுத்த இப்போதே பலர் முயன்று வருகின்றனர். ஆனால் அ.தி.மு.க வேட்பாளர்களில் ரவுடிகள் மிகக் குறைவே என்பது அக்கட்சி ஆதரவாளர்களுக்கு நிம்மதி தரும் விடயமாகும். மாறாக தி.மு.க வேட்பாளர்கள் கொலை, கற்பழிப்பு, ஆட்கடத்தல், அடிதடி, கப்பம் , ஊழல், என ஏதோ ஒரு வகையில் கெட்டபெயர் சம்பாதித்தவர்களே.

இதேவேளை தி.மு.க.வுக்கு நிகரான 'இலவச' பட்டியலை அ.தி.மு.க.வும் இவ்வாரம் வெளியிட்டது. உண்மையில் இலவசங்களால் காரியம் கைநழுவிப் போகும் என அ.தி.மு.க நிச்சயமாகவே அஞ்சுவது தெளிவாகிறது. பணப் பட்டுவாடா செய்வதைத் தடுக்க ஆடு, மாடு, கோழிகளைக் கூட வாகனங்களில் அதிகளவில் எடுத்துச் சென்றால் தேர்தல் ஆணையம் பாய்ந்து பிடித்துக் கொண்டு விடுகிறது. இலவச நகைக் கடை டோக்கன்கள் கொடுக் கவும் தி.மு.க தரப்பு வியூகம் வகுத்தது. இலவச அம்புலன்ஸ் ஊடாகவும் பணப்பட்டுவாடா செய்யப்பட்டதை தேர்தல் ஆணையம் முகர்ந்து பிடித்துவிட்டது. இதுதவிர வாகன விபத்தில் காயமடைந்தவர்களை மந்திரி சந்தித்து ஹோர்லிக்ஸ், பழம், பிஸ்கட், இனமாக பணம் எனக் கொடுத்துத் துக்கம் விசாரிக்கும் கூத்தும் தென்மரவட்டத்தில் நடந்துள்ளது. இவ்வாறு இலவசம் வழங்கவும் பெறவும் அல்லாடும் கட்சியையும் வாக்காளரையும் கண்டு தேர்தல் ஆணையர் மலைத்துப் போயுள்ளாராம்.

**விஜய், வைகோ என முக்கிய ஆயுதங்கள் இன்றியே ஜெயலலிதா களத்தில் இறங்கி விட்டார். தன்னம்பிக்கையையே தமது முக்கிய ஆயுதமாக அவர் கருதுவது நினைவு கூரத்தக்கது. அதுபோல் மிதமிஞ்சிய தன்னம்பிக்கை அவரைக் கவிழ்த்ததும் உண்டு.**

தேர்தல் ஜுரம் உச்சஸ்தாயியில் தமிழகத்தைப் பிடித்துவரும் நிலையில் எந்த அணி வெல்லும் என்பது கடைசிக் கட்ட பிரசாரத்தில் முடிவாகும் எனத் தெரிகிறது. ஜெயலலிதா தந்திரோபாயமாக தே.தி.மு.கவை, காங்கிரஸ் மற்றும் பா.ம.க கட்சிகள் போட்டியிடும் தொகுதிகளில் களமிறக்கி உள்ளார். காங்கிரசுடன் உடன்பாட்டுக்குக் காத்திருந்த விஜயகாந்த் இதுவரை வெளிப்படையாகக் காங்கிரசை விமர்சிக்கவில்லை; கருணாநிதி குடும்பம், கட்சி, பா.ம.க எனத்தான் தாக்குதல் தொடுத்து வந்தார். இப்போது வேறு வழியின்றி காங்கிரசையும் ஒரு பிடி பிடிக்கவேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு உண்டாகியுள்ளது. ம.தி.மு.கவின் தேர்தல் பகிஷ்கரிப்பால் மனமுடைந்திருக்கும் அவரது கட்சி ஆதரவாளர்களுக்குப் பல சலுகைகளை வழங்கி தி.மு.க அவர்களைத் தன் பக்கம் ஈர்த்து வருகிறது. கூட்டணி ஆட்சி தமிழகத்தில் தவிர்க்க முடியாத ஒன்று என்பது நிகழ்வுகளில் தெரியும் தெளிவான அம்சமாகும். தேர்தலுக்கு முன்பே மறைமுகமாக கூட்டணி ஆட்சிதான் என்பதை வெறும் 120 தொகுதிகளில் போட்டியிடுவதன் மூலம் தி.மு.க ஏற்றுவிட்டது. அ.தி.மு.க 160 தொகுதிகளில் போட்டியிட்டாலும் 117க்குக் குறைவாக அக்கட்சி வெற்றி பெறுமானால் விஜயகாந்த் அல்லது கம்யூனிஸ்ட்டுகளின் ஆதரவு தேவைப்படலாம். தவிர்க்க முடியாதபடி பெரிய கட்சிகளின் தனி ஆதிக்கம் முடிந்துவிட்டதையே இது காட்டுகிறது.

அ.தி.மு.க தலைவி ஜெயலலிதா வகுத்துள்ள வியூகப்படி தி.மு.கவின்பெரிய தலைகளை உருட்டித் தள்ளி வெற்றி பெறும் அ.தி.மு.க வேட்பாளருக்கு நேராக அமைச்சர் பதவி என்ற சன்மானம் கிடைக்குமாம் கலைஞர் ஸ்டாலின், பேராசிரியர் அன்பழகன் என வீழ்த்துவதற்கே இவ்வாறு சன்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது. இலவசங்களை மட்டுமே மலையாக நம்பி தி.மு.க போராடி வருகிறது. அதன் கூட்டணிக் கட்சியான காங்கிரஸ் கணிசமான இடங்களை வென்றால், அது தி.மு.க.வுக்கு வில்லங்கமாக முடியும். தமிழக சட்டசபை வரலாற்றில் தீர்க்கமான ஒரு அணிக்கு அல்லது கட்சிக்கே ஆட்சி அதிகாரம் வழங்குவது.தமிழக மக்களின் வழக்கம். ஆனால் கடந்த சில தேர்தல்களைப் பார்த்தால் இரு அணிகளும் மிக நெருக்கமான போட்டியில் நூலிழையில் வென்றிருப்பதையே காண்கிறோம். எனவே காலம் மாறுகிறது என்றே கூறவேண்டும். மக்களுக்கு இன்ன கட்சிதான் என உறுதியான தெரிவு இல்லாவிட்டால் தொங்கு சட்டசபை கூட அமையலாம். தி.மு.க., அ.தி.மு.க இரண்டுமே மக்களின் விருப்பத் தெரிவில் இல்லை என்பது பெரும்பாலான வாக்காளரின் எண்ணத்தினை அறிந்தவர்களுக்குப் புரியும். ஒருவேளை விஜயகாந்த், கம்யூனிஸ்ட், வைகோ என 3வது அணி விஜய்காந்த் தலைமையில் அமைந்திருந்தால் அது அமோக வெற்றி பெற்றிருக்கும் எனக் கருதப்படுகிறது. 1977ல் எம்.ஜீ.ஆர் பெற்ற வெற்றியை ஒத்ததாக இது இருந்திருக்கும்.

காங்கிரஸ் கட்சிக்குள் குத்துவெட்டும், குழி பறிப்பும் என கோஷ்டிச் சண்டை உச்சமாக நடந்து வருகிறது. தமிழக தலைவர் தங்கபாலுவின் மனைவி ஜெயந்தி சென்னையில் மைலாப்பூர் தொகுதியில் போட்டியிட கட்சிக்குள் கடும் எதிர்ப்புண்டாகியுள்ளது. இவ்வாறு பல இடங்களில் புகைச்சல் தோல்வியாக மாறக்கூடும். சமீபத்தில் காங்கிரசில் இணைந்த திருநாவுக்கரசுக்கு அவரது பூர்வீக தொகுதியான அறந்தாங்கி தரப்பட்டதால் கோபமடைந்த அத்தொகுதி தி.மு.க, எம்.எல்.ஏ அ.தி.மு.கவில் ஐக்கியமாகி விட்டார். இவ்வாறான உட்கட்சிச் சண்டையுடன் பா.ம.கவும், தி.மு.க.வும் காங்கிரசுக்கு எதிரான உள்ளடி வேலையில் இறங்கவும் முனைந்துள்ளன. இத்தேர்தலில் வெற்றிபெறாவிட்டால் அதோகதிதான் என்ற நிலையில் பா.மா.க களமிறங்கியுள்ளது.

திரைப்பட நடிகர் நடிகையர் பட்டாளத்தைப் பெருமளவில் க்ளமிறக்க ஜெயலலிதா முயன்ற போதும், விஜய் அ.தி.மு.கவுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்யாதது ஜெயலலிதாவின் காய் நகர்த்தல் நூறு வீத வெற்றியைத் தரவில்லை என்பதையே காட்டுகிறது. எனினும் சென்னையில் அ.தி.மு.கவின் வெற்றிநடை தொடருமென்றே தெரிகிறது.

விஜய், வைகோ என முக்கிய ஆயுதங்கள் இன்றியே ஜெயலலிதா களத்தில் இறங்கிவிட்டார். தன்னம்பிக்கையையே தமது முக்கிய ஆயுதமாக அவர் கருதுவது நினைவு கூரத்தக்கது. அது போல் மிதமிஞ்சிய தன்னம்பிக்கை அவரைக் கவிழ்த்ததும் உண்டு. கலைஞர் போட்டியிடும் கடைசித் தேர்தல் என்பதுடன் அ.தி.மு.க தோற்றால் ஜெயலலிதா போட்டியிட்ட கடைசித் தேர்தலாகவும் இதுவே அமையக் கூடும் தேர்தல் பிர்சாரம் தொடங்கியுள்ள இந்த நிலையில் எதிர்கட்சிக்கு ஆளும் கட்சி ஈடு கொடுப்பது போலத் தான் தெரியும். ஆனால் பிரசாரம் முடியும் போது எதிர்கட்சிக்கு ஆதரவாகவும் ஆளும் கட்சிக்கு எதிராகவும் காத்திரமான அலை ஒன்று எழும். அது ஆட்சியைக் கவிழ்க்கும். இதுதான் வழக்கமாக தமிழக சட்டசபைத் தேர்தல்களில் காணப்படும் போக்கு. கலைஞர் இதை அறியாதவர் அல்ல. வரலாற்றை மாற்றி எழுதுவதே அவரது முன்னாலுள்ள சிக்கலான பணி. முக்கியமாக, வாக்களிப்பு வேளை நெருங்க நெருங்க வாக்காளருக்குத் இலவசமும் பணப்பட்டுவாடாவும் செய்வது இன்னும் சிரமமாகலாம். வாக்காளருக்கு தாம் பெற்றுக் கொண்ட இலவசங்கள் மறந்தும் போகலாம். எப்படிப் பார்த்தாலும் எதிரணிக்குச் சாதகமாக நிறைய அம்சங்கள் இருக்கவே செய்கின்றன. அதை இல்லாமல் செய்ய கலைஞரின் சாணக்கியம் உதவுமானால், நிச்சயமாக அது ஒரு வரலாற்றுத் திருப்பு முனையாகவே அமையும். ★

# அதிர்ஷ்டம் என்பது எமக்கு இல்லையா?







பெயரைக் கேட்டாலே அதிர்கிற மாதிரி அமர்க்களமான அணி. துடுப்பாட்டம், பந்துவீச்சு மட்டுமல்ல அசத்தலான களத்தடுப்புக்கும் நல்ல தரச் சான்றிதழ் கொடுக்கலாம். இப்படி ஆயிரம் இருந்தும்... திறமைகள் இருந்தும் தென்னாபிரிக்காவுக்கு உலகக் கிண்ணம் தண்ணி காட்டி வருகிறது.

லீக் சுற்றில் 'சூப்பராக' விளையாடும் இந்த அணி 'நொக் அவுட்' என்றாலே தொடை நடுங்கி சொதப்பி விடுகிறது. ஒன்றல்ல... இரண்டல்ல 5 ஆவது முறையாக அந்த அணி 'நொக் அவுட்' சுற்றில் நாக்குத் தள்ளிப் பரிதாபமாக வெளியேறி உள்ளது.

நடப்புத் தொடரின் 3ஆவது காலிறுதியில் 'பி' பிரிவில் முதலிடம் பிடித்த தென்னாபிரிக்காவும், 'ஏ' பிரிவில் 4 ஆவது இடம் பிடித்த நியூசிலாந்தும் மோதின. சமீபத்தில் பங்களாதேஷுடன் நடந்த ஒருநாள் தொடரில் 4 - 0 என்ற கணக்கில் பரிதாபமாக தோற்ற நியூசிலாந்தை தென்னாபிரிக்கா ஊதித் தள்ளி விடும் என்றே எல்லோரும் எதிர்பார்த்தனர். அதற்கேற்ப நியூசிலாந்தை 221 ஓட்டங்களுக்குள் தென்னாபிரிக்கா கட்டுப்படுத்தியதும், இந்த முறை விதி விளையாடுவதற்கு வாய்ப்பில்லை என்றே தோன்றியது.


துரத்தலின்போது கலிஸ், டி வில்லியர்ஸ் இருவரும் பொறுமையாக ஓட்டங்கள் சேர்த்து நம்பிக்கையை அதிகரித்தனர். ஜேக்கப் ஓரம் பந்துவீச்சில் விக்கெட்டுகள் சரிய, திடீர் நெருக்கடியால் தென்னாபிரிக்க வீரர்களுக்கு வழக்கம்போல் கை, கால் உதற ஆரம்பித்துவிட்டது. பலமான துடுப்பாட்ட வரிசை சீட்டுக்கட்டு போல சரிய 172 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. நியூசிலாந்து 49 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அதிர்ச்சி வெற்றி பெற்று அரை இறுதிக்குள் அடி வைத்தது. வரலாற்றை மாற்றி எழுதலாம் என்ற உறுதியுடன் வந்த தென்னாபிரிக்க வீரர்கள் நொறுங்கிய இதயத்துடன் உலகக் கிண்ணத்தில் இருந்து மீண்டும் பரிதாபமாக வெளியேறினர்.

செய்தியாளர்களைச் சந்தித்த அணித் தலைவர் ஸ்மித்துக்கு கொஞ்ச நேரம் பேச்சே வரவில்லை. அவரது வழக்கமான கம்பீரமான நடை, சிரித்த முகம், தன்னம்பிக்கை எல்லாமே 'மிஸ்ஸிங்'. தொங்கிய முகத்தோடு ஸ்மித் தழதழத்த குரலில் பேசியதாவது:


''இந்த தொடரில் எமது பந்து வீச்சு அபாரமாக இருந்தது. ஸ்ரெய்ன், மோர்கல், பீற்றர்சன், போத்தா, இம்ரான் சிறப்பாகப் பந்து வீசி எதிரணிகளை கட்டுக்குள் வைத்திருந்தனர்.

ஆனால், வலுவான துடுப்பாட்ட வரிசை இப்படிக் காலை வாரிவிட்டது வேதனையாக உள்ளது. காலிஸும், டி வில்லியர்ஸும் ஆடிய விதத்தைப் பார்க்கும்போது எளிதாக வெற்றி பெறுவோம் என்று நினைத்தேன். அவர்கள் ஆட்டமிழந்தவுடன் அடுத்தடுத்து விக்கெட்டுக்கள் சரிய தோல்வியைத் தவிர்க்க முடியவில்லை. அடுத்து வந்தவர்கள் ஓரளவு சிறப்பாக ஆடியிருந்தாலே வெற்றி பெற்றிருக்க முடியும்.

இந்த மாதிரி ஆடுகளத்தில் நிதானமாக விளையாடி, மோசமான பந்துகளை மட்டும் பவுண்டரிக்கு விரட்டி வந்தால் மட்டுமே வெற்றிபெற முடியும். ஆஸி.க்கு எதிராக இந்தியாவின் வெற்றி இதற்கு உதாரணம். சர்வதேச போட்டியில் வீரர்கள் பதற்றத்துடன் விளையாடுவதைத் தவிர்க்க வேண்டும். அரை இறுதிக்கு எளிதாக முன்னேறுவோம் என்று நினைத்தேன். ஆனால், அதிர்ஷ்ட தேவதை இந்த முறையும் எங்களுடன் இல்லை. தோல்வி குறித்து தேர்வுக் குழுவினருடன் விவாதிப்பேன். புதிய அணித்தலைவர், புத்தம் புதிய அணியை தேர்வு செய்யும்படி கேட்டுக் கொள்வேன்'' - என்றார் தட்டுத் தடுமாறி பேசி முடித்த ஸ்மித்தின் விழியோரம் கண்ணீர் எட்டிப் பார்த்தது.



# வேகத்துக்கு விடைகொடுத்தது சர்வதேசம்




சர்வதேச ஒரு நாள் ஆட்டத்திலிருந்து ஆஸ்தி ரேலிய வேகப் பந்துவீச்சாளர் ஷோன் ரைட் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஷோன் ரைட் (28 வயது). கடந்த 2005 இல் டெஸ்ட் போட்டியில் களமிறங்கிய இவர், 2007 இல் முதன்முதலில் சர்வதேச ஒருநாள் மற்றும் 'ரி-20' அரங்கில் காலடி வைத்தார். டெஸ்ட் போட்டியில் இருந்து சமீபத்தில் ஓய்வை அறிவித்த இவர், தற்போது ஒருநாள் போட்டிகளில் இருந்தும் ஓய்வை அறிவித்துள்ளார்.

இதுவரை இவர் 3 டெஸ்ட் ஆட்டங்கள் (5 விக்கெட்டுக்கள்), 35 ஒரு நாள் (62 விக்கெட்டுக்கள்), 19 சர்வதேச 'ரி-20' போட்டிகளில் பங்கேற்றுள்ளார். இவர் 'ரி-20' போட்டிகளில் தொடர்ந்து விளையாட இருப்பதாக தெரிவித்துள்ளார். தற்போது நடக்கும் உலகக் கிண்ணத் தொடரில், ஆஸ்திரேலிய அணி காலிறுதியோடு வெளியேறியது. இந்தத் தொடரில் இவர் பெரிய அளவில் சாதிக்கவில்லை.

இதுகுறித்து ரைட் கூறியதாவது:

ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வை அறிவித் தது எளிதான முடிவல்ல. ஆனால் எனக்கான நேரம் வந்து விட்டது. தொடர்ந்து 'ரி-20' போட்டிகளில் ஆஸ்தி ரேலிய அணியின் வெற்றிக்குப் பாடுபடுவேன். கடந்த 2007 இல் உலகக் கிண்ணத்தை வென்ற ஆஸ்தி ரேலிய அணியில் இடம் பெற்றிருந்ததை எனது வாழ் நாளில் என்றும் மறக்க முடியாது. போட்டியில் சாதிக்க எனக்கு ஒத்துழைப்புத் தந்த ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை, சக மற்றும் எதிரணி வீரர்கள், ரசிகர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் - என்றார்.

# முடிவுக்கு வந்தது பொண்டிங்கின் ஆட்டம்



ஆஸ்திரேலிய அணியின் ஒருநாள் மற்றும் டெஸ்ட் அணித் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் அறிவித்துள்ளார்.

உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் இந்திய அணியுடன் தோல்வியடைந்த பின்னர், ஆஸ்திரேலியா உலகக் கிண்ணத் தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து ரிக்கி பொண்டிங் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவார் என பரவலாகப் பேசப்பட்ட நிலையில் அணித் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக அவர் அறிவித்துள்ளார்.

இந்த நிலையில் புதிதாக நியமிக்கப்படவுள்ள அணித் தலைவருக்குத் தான் பூரண ஒத்துழைப்பை வழங்கவுள்ளதாகவும் அணிக்காகத் தொடர்ந்தும் சிறந்த முறையில் விளையாட உள்ளதாகவும் ரிக்கி பொண்டிங் அறிவித்துள்ளார்.

ஸ்ரீவ்வோவுக்கு அடுத்தபடியாக ஆஸ்திரேலிய அணியின் டெஸ்ட் அணித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட பொண்டிங் 77 போட்டிகளுக்குத் தலைமை வகித்து 48 போட்டிகளை வெற்றி கொண்டுள்ளார்.

அத்துடன் 228 ஒருநாள் போட்டிகளுக்குத் தலைமை வகித்துள்ள அவர் 164 போட்டிகளில் வெற்றி கண்டுள்ளார். இதில் தொடர்ச்சியாக இரு உலகக் கிண்ணங்களையும் கைப்பற்றிய சாதனை ரிக்கி பொண்டிங்கைச் சாரும் என்பது குறிப்பிடத்தக்கது.

# அணித் தலைவர் கிளார்க்



உலகக்கிண்ண போட்டியில் ஆஸ்திரேலிய அணி தோல்வியடைந்ததை அடுத்து அணியின் தலைவர் மற்றும் துணை அணித் தலைவர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி ஒருநாள் போட்டி மற்றும் டெஸ்ட் போட்டிகளுக்கு அணித் தலைவராக மைக்கல் கிளார்க்கும் துணை அணித் தலைவராக ஷேன் வொட்ஸனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பொண்டிங் அணித் தலைவராக இருந்த காலத்தில் மைக்கல் கிளார்க் துணை அணித் தலைவராக இருந்தார். பொண்டிங் தலைமை தாங்காத ஆட்டங்களில் கிளார்க் சிறப்பாக அணித் தலைமைப் பொறுப்பை வழிநடத்தியமையினாலேயே ஆஸியின் அடுத்த அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# ஓய்கிறது அலை







சுழற் பந்துவீச்சு என்றாலே எல்லோருக்கும் ஞாபகம்வரும் நாமம் முரளிதான். அந்த நாமம் சர்வதேச கிரிக்கெட்டுக்கு விடைகொடுத்துவிட்டது.

முரளி தனது ஒருநாள் கிரிக்கெட் பயணத்தை இந்தியாவுடன் 1993ஆம் ஆண்டு ஆரம்பித்தார். 18 வருடங்களின் பின்னர் அதே அணியுடன் தனது பயணத்தை முடித்து வைத்தார்.

கண்டி மண்ணில் பிறந்து இலங்கை அணியில் இணைந்து உலகக் கிரிக்கெட் ரசிகர்கள் நெஞ்சில் புகுந்து இன்று எல்லோரையும் பிரிந்து வெளியேறு கிறார் சுழல் மாயாவி முரளி. பள்ளிப் பருவ கிரிக்கெட் அணியில் வேகப் பந்துவீச்சாளராய் அறிமுகமான இவர், பயிற்சியாளர் சுனில் பெர்னாண்டோவின் வழிநடத்தலினால் சுழற்பந்துவீச்சாளராய் மாறி இந்த உலகத்தையே கலக்கினார்.

ஒருநாள் மற்றும் டெஸ்ட் ஆட்டங்களில் அதிகூடிய விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் என்ற பெருமையை இறுதிவரை தன்னகத்தே கொண்டிருக்கிறார் முரளி.

கடந்த வருடம் ஜூலை மாதம் 22ஆம் திகதியுடன் தனது டெஸ்ட் வாழ்க்கைக்கு முடிவு கட்டினார். இந்த இறுதி டெஸ்ட் ஆட்டம் இலங்கை மண்ணிலேயே இடம்பெற்றது. 792 விக்கெட்டுக்களுடன் இறுதி டெஸ்ட் ஆட்டத்துக்குள் நுழைந்த முரளி 800 விக்கெட்டுக்கள் என்ற மைல் கல்லை எட்டுவாரா என பலர் ஏக்கத்துடன் இருந்தனர். தன்னால் முடியும் என்று அதை நிரூபித்தார் முரளி.

இவரது டெஸ்ட் ஆட்டச் சாதனைகளை கௌரவப்படுத்த விரும்பிய இலங்கை அரசு, இவருக்காய் தங்க நாணயத்தை வெளியிட்டது.

ஒரு சாதனை வீரரனின் பின்னால் பல சர்ச்சைகள் ஒளிந்திருக்கும். ஆனால் முரளியை நோக்கிவந்த பல சர்ச்சைகள் தானாகவே விலகிக்கொண்டன.

முரளி பந்தை எறிகிறார் என்று நடுவர் குற்றஞ்சாட்டி, ஆட்டத்தில் தொடர்ந்து பந்தைவீச முடியாது எனத் தெரிவித்தார். பெரும்பாலும் அத்துடன் முரளியின் ஆட்டம் முடிவுக்கு வந்துவிடும் என்று அந்தக் கணப்பொழுது பலரும் நினைத்திருந்தனர். அன்றைய அணித் தலைவராக இருந்த அர்ஜுன ரணதுங்க துணிச்சலாய்ச் செயற்பட்டு, முரளியை தொடர்ந்து பந்துவீச அனுமதிக்காததால் நடுவருடன் வாக்குவாதப் பட்டுவிட்டு வீரர்களுடன் மைதானத்தைவிட்டு வெளியேறியிருந்தார்.

ஆசிய நாட்டவனின் சாதனைகளைப் பொறுக்காத ஆஸி. நாட்டவர்கள், பந்தை எறிகிறார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து ஒரு சாதனை நாயகனை கேவலப்படுத்த முயன்றனர். இருந்தும் அவர்களால் முரளி பந்தை எறிகிறார் என்று நிரூபிக்கமுடியவில்லை.

ஒருநாள் போட்டியில் 349 ஆட்டங்களில் விளையாடியுள்ள முரளி 534 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். இதில் 10 தடவைகள் 5 விக்கெட்டுக்களுக்கு மேல் கைப்பற்றியுள்ளார். இதில் அதிகபட்சமாக 30 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை வீழ்த்தியதே இவரது சிறந்த பெறுபேறாகும்.

உலகக் கிண்ண கிரிக்கெட் அரங்கில் முரளி 1996ஆம் ஆண்டு முதன் முதலாக உட்பிரவேசித்தார். இவரது பந்துவீச்சு ஆரம்பத்திலேயே எதிரணிகளுக்கு அபாயகரமானதாக இருந்தது. இவர் உலகக் கிண்ணத்துக்கு அறிமுகமான தடவையே இலங்கை முதன் முதலாக உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. தொடர்ந்து 1999ஆம் ஆண்டு இடம்பெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளில் முரளி பெரிதாகச் சோபிக்கவில்லை. 2003, 2007ஆம் ஆண்டு உலகக் கிண்ணங்களில் முரளியின் பந்துவீச்சு மிகச்சிறப்பானதாவே இருந்தது.

இதுவரை 39 உலகக் கிண்ண ஆட்டங்களில் (2011 உலகக் கிண்ண இறுதி ஆட்டத்தைத் தவிர்த்து) ஆடியுள்ள முரளி, 68 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். உலகக் கிண்ண ஆட்டங்களில் அதிகூடிய விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் வரிசையில் முரளி இரண்டாம் இடத்தில் இருக்கிறார். இன்னும் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றும் பட்சத்தில் முதலிடத்தில் உள்ள மெக்ராவின் சாதனை சமன் செய்யப்படும்.

பெரும்பாலும் சாதனை நட்சத்திரங்கள் ஓய்வுபெறும்போது, தமது சொந்த மண்ணிலேயே ஓய்வுபெறுவார்கள். இருப்பினும் முரளிக்கு அந்த அதிஷ்டம் கிடைக்கவில்லை. இலங்கை மண்ணில் இறுதியாய் இடம்பெற்ற நியூஸிலாந்துடனான அரையிறுதியாட்டமே அவரது சொந்த மைதானத்தில் இடம்பெற்ற இறுதி சர்வதேச கிரிக்கெட் ஆட்டமாகும்.

முரளி ஓய்வுபெற்றாலும் அவரது சாதனைகள் அந்த முரளி என்னும் நாமத்தை தொடர்ந்து ஒலிக்கச் செய்துகொண்டே இருக்கும்.




பெயர் - முத்தையா முரளிதரன்

பிறந்த திகதி - 17.04.1972

விளையாடும் அணிகள் - இலங்கை, ஆசியா 11 பேர் அணி
கென்ற், லங்கா ஷெயார், தமிழ் யூனியன்

பங்கெடுக்கும் முறை - சுழல் பந்துவீச்சாளர்

துடுப்பாட்ட முறை - வலதுகைத் துடுப்பாட்ட வீரர்

பந்து வீசும்முறை - வலது சுழற்பந்து, தூஷ்ரா

உயரம் - 5அடி 7 அங்குலம்

கல்வி - கண்டிப் புனித அந்தோனியார் கல்லூரி

ஒருநாள் ஆட்டத்தில் அறிமுகம் - 1993.08.12 இந்தியாவுக்கு எதிராக






அச்சுனி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்

எதிலும் வெற்றியை விரும்பும் நீங்கள், அதற்காக ஓயாமல் உழைப்பீர்கள். உற்சாகம் பிறக்கும். எதிர்பார்த்த பணம் வரும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். முகப்பொலிவுக் கூடும். தடைப்பட்டிருந்த வீடு கட்டும் பணி தொடரும். மனைவிவழி உறவினர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். புது வாகனம் வாங்குவீர்கள். வெளிநாட்டிலிருந்து நல்ல செய்தி வரும். வேலைக் கிடைக்கும். கண் எரிச்சல், அடி வயிற்றில் வலி, தூக்கமின்மை வந்து போகும். பொறுப்புகள் அதிகரிக்கும் வாரமிது.



கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்

விழுவதெல்லாம் எழுவதற்கே என நினைக்கும் நீங்கள், கடின உழைப்பால் சாதாரண நிலையிலிருந்து சாமான்ய நிலையை எட்டிப்பிடிப்பவர்கள். நினைத்த காரியம் நிறைவேறும். எதிர்த்தவர்கள் நண்பர்களாவார்கள். நாடாளுபவர்கள் உதவுவார்கள். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். குழந்தை பாக்யம் கிடைக்கும். அயல்நாடு செல்லும் வாய்ப்பு வரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். பிள்ளைகள் நீண்ட நாள் கேட்டுக் கொண்டிருந்ததை வாங்கித் தருவீர்கள். பழைய வாகனத்தை மாற்றுவீர்கள். மூத்த சகோதரிக்கு இருந்த பிரச்னைகள் நீங்கும். அச்சம் விலகி அதிகாரம் பெருகும் வாரமிது.



மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

உதிக்கும் போது விதித்ததை உணரும் ஆற்றல் கொண்ட நீங்கள் தடை வந்தப் போதும் தளர மாட்டீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. உங்கள் ரசனைக்கேற்ப வீடு, வாகனம் அமையும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். உங்களை தாழ்த்திப் பேசியவர்கள் திருந்துவார்கள். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் பரந்த மனதை புரிந்து கொள்வார்கள். அரசு காரியங்கள் சாதகமாக முடியும். உறவினர்கள்; நண்பர்களால் ஆதாயம் உண்டு.



புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயில்யம்

யாருக்கும் அஞ்சாமல் அதிரடி முடிவெடுக்கும் நீங்கள் தன்னைப் போல் மற்றவர்களும் மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என நினைப்பீர்கள். சனி வலுவாக இருப்பதால் பெரிய திட்டங்கள் தீட்டுவீர்கள். பெரிய பதவியில் இருப்பவர்களின் தொடர்பு கிடைக்கும். சுப நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள். குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். பூர்வீக சொத்தை மாற்றி புது வீடு, மனை வாங்குவீர்கள். பழைய சொந்தங்கள் தேடி வந்து பேசுவார்கள். பழைய கடன் பிரச்னை ஒன்று தீரும். வியாபாரத்தில் ஆர்வம் பிறக்கும். எதிர்பார்த்தவைகளில் சில நிறைவேறும் வாரமிது.



மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்

எல்லோரும் நல்லவர்களே என்று நினைக்கும் நீங்கள், நியாயத்தின் பக்கம் நிற்பீர்கள். புதிய யோசனைகள் பிறக்கும். கடனாக கொடுத்தப் பணம் கைக்கு வரும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். தள்ளிப் போன உறவினர்களில் சிலர் வலிய வந்து பேசுவார்கள். ஆலயங்களை புதுப்பிக்க உதவுவீர்கள். உடன்பிறந்தவர்களுடன் மனத்தாங்கல் வரும். சொத்து வாங்குவது, விற்பதில் அவசரம் வேண்டாம். வியாபாரத்தில் மற்றவர்களை நம்பி பெரிய முதலீடுகள் செய்வதை தவிருங்கள். உத்தியோகத்தில் உங்கள் கடின உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். கடின உழைப்பால் முன்னேறும் வாரமிது.



உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்

மனக்கோட்டை கட்டும் நீங்கள், ஒரு போதும் பணக் கோட்டைக்கு அடிமையாக மாட்டீர்கள். கல்வியாளர்கள், அறிஞர்களின் நட்பு கிடைக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்துக் கொள்வார்கள். பழைய வீட்டை நல்ல விலைக்கு விற்று புது இடம் வாங்குவீர்கள். உறவினர்கள் உங்கள் உதவியை நாடுவார்கள். கோபத்தால் இரத்த அழுத்தம் அதிகரிக்கும். உடன்பிறந்தவர்கள் குறைப்பட்டுக் கொள்வார்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள், அவமானங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். நிதானத்தால் வெல்லும் வாரமிது.



சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்

இயற்கையை உணரும் சக்தி கொண்டவர்களே! பாதியில் நின்ற வேலைகள் முடியும். ஆட்சியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். வீடு கட்ட எதிர்பார்த்த வங்கியிலிருந்து கடன் கிடைக்கும். வர வேண்டிய பணம் கைக்கு வரும். கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் அதிரடி லாபம் உண்டு. உத்தியோகத்தில் உயரதிகாரிகளின் நம்பிக்கையை பெறுவீர்கள். சிக்கல்களில் இருந்து விடுபடுவதுடன் புதிய பாதையில் பயணிக்கும் வாரமிது.




விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை

ஈரப் பார்வையால் எல்லோரையும் தன் வசம் ஈர்க்கும் ஆற்றல் கொண்ட நீங்கள் எப்போதும் இதயத்திலிருந்து பேசுவீர்கள். எதற்கும் அஞ்சமாட்டீர்கள். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். உடன்பிறந்தவர்கள் வலிய வந்து உதவுவார்கள். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். வெளியூர் பயணங்கள் சிறப்பாக அமையும். வேலையாட்களின் ஆதரவுக் கிட்டும். திருமணம், சீமந்தம் போன்ற சுப நிகழ்ச்சிகளால் வீடு களை கட்டும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பிள்ளைகளால் மதிப்புக் கூடும். உறவினர்கள் பாராட்டும்படி நடந்துக் கொள்வீர்கள். மனோபலத்தால் நினைத்ததை முடிக்கும் வாரமிது.



மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்

சதாசர்வ காலமும் உழைத்துக் கொண்டே இருக்கும் நீங்கள், அவ்வப்போது எதிர்மறையாக சிந்திப்பீர்கள். பிரபலங்களின் தொடர்பு கிடைக்கும். நட்பு வட்டம் விரியும். குடும்பத்தில் நல்லது நடக்கும். சொத்து சேரும். பழைய சிக்கல்கள் தீரும். வீட்டை அலங்கரிப்பீர்கள். மகனுக்கு நல்ல வாழ்க்கை துணை அமையும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் குறையும். அலைச்சல் அதிகரிக்கும். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் வந்து போகும். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி காணும் வாரமிது.



உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்

யாரையும் காயப்படுத்தாமல் பேசும் குணங்கொண்ட நீங்கள் தொலை நோக்குச் சிந்தனையால் வெற்றி பெறுபவர்கள். கௌரவப் பதவிகள் தேடி வரும். பணம் வரும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். விருந்தினர்களின் வருகையால் வீடு களை கட்டும். பிள்ளைகளால் அந்தஸ்து உயரும். கோவில் விழாக்களை முன்னின்று நடத்துவீர்கள். பிள்ளைகளின் பெருமைகளை சொல்லி சொந்தம் பந்தங்கள் மத்தியில் திருப்தியடைவீர்கள். உறவினர்கள் உங்கள் நிலையறிந்து உதவி செய்வார்கள். வீட்டில் சந்தோஷம், நிம்மதி நிலவும். தோல்வியிலிருந்து விடுபடும் வாரமிது.



அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்


உள்ளன்று வைத்து புறமொன்று பேசாத நீங்கள் எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமென நினைப்பீர்கள். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். மூத்த சகோதர வகையில் நன்மை உண்டு. புதிதாக வீடு, மனை, வாகனம் வாங்குவீர்கள். சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும், அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். யோகா, தியானத்தில் மனம் லயிக்கும். பற்று வரவு சுமார் தான். சக ஊழியர்கள் மதிப்பார்கள். எண்ணங்கள் ஈடேறும் வாரமிது.



பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

தீர்க்கமாகவும், திடமாகவும் முடிவெடுக்கும் நீங்கள், சிலநேரங்களில் பாசத்தால் குழம்புவீர்கள். தேச பக்தி உள்ள நீங்கள், அநியாயத்தைத் தட்டிக் கேட்பவர்கள். பிரபலங்களின் உதவியால் தடைப்பட்ட சில காரியங்களை முடிப்பீர்கள். மவாகனப் பழுது சரியாகும். பிள்ளைகளிடம் உங்களின் எண்ணங்களைத் திணிக்க வேண்டாம். பிராத்தனைகளை நிறைவேற்றுவீர்கள். உடன்பிறந்தவர்களை அனுசரித்துப் போங்கள். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் வந்துப் போகும். சொத்து விஷயத்தில் அவசர முடிவுகள் வேண்டாம். கோபத்தை அடக்குவதால் மகிழ்ச்சி பொங்கும் வாரமிது.

# 13 ஆம் எண் தீங்கு தருமா?



13ஆம் திகதி, அதுவும் வெள்ளிக்கிழமை என்றாலே அயல் நாடுகளில் பொதுவாகப் பயப்படுகிறார்கள். தற்பொழுது 13 என்ற எண்ணை பலர் பயன்படுத்துவதே இல்லை. 12, 12ஏ, 14 என்றெல்லாம் வைத்துக் கொள்கிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். இதுகுறித்து நிறைய நாவல்களெல்லாம் கூட ஆங்கிலத்தில் வந்திருக்கின்றன. எண் கணிதம் அல்லது ஜோதிட ரீதியாக இதுபோன்ற அச்சத்திற்கு அடிப்படை ஏதாவது இருக்கிறதா?

இராகு வலுத்திருந்தால் எதுவும் பிரச்சனை கிடையாது. இராகு அசுர கிரகம். அசுரர்களின் தலைவர் சுக்ராச்சாரி. அதாவது சுக்ரன். அவருடைய வாரம்தான் சுக்ர வாரம், வெள்ளிக்கிழமை. இந்த இரண்டும் சேரும்போது ஒருவிதமான மாற்றம், அதாவது இயல்புநிலையை மாற்றியமைத்தால்தான் இராகு, சுக்ரனுடைய வேலையே. புரட்சி போன்ற சிந்தனையை கொடுப்பதே இராகுவும், சுக்ரனும் தான். அதனால், வெள்ளிக்கிழமை சுக்ரனுடைய கிழமை. 4ஆம் எண் - 13 கூட்டினால் வருவது 4 - என்பது இராகு. இதுபோல இராகுவும், சுக்ரனும் ஒன்று சேரும் போது இழப்புகளும், ஏமாற்றங்களும் வருவது என்பது இயல்பு.


ஒரு சாம்ராஜ்ஜியத்தை கவிழ்ப்பது, ஒரு விபத்தை உண்டாக்குவது போன்ற நிகழ்வுகள் மூலமாக புதியவர்களுக்கு வாய்ப்பு அளிப்பது. இதுதான் இந்த இரண்டு கிரகங்களுடைய வேலையே. பறித்து மற்றொருவர் கையில் கொடுப்பது. அதனால்தான் அயல்நாடுகளில் பார்த்தால் 13ஆம் தேதியும், வெள்ளிக்கிழமையும் சேர்ந்து வந்தால் பயப்படுவதற்கு காரணம், ஆட்சியில் இருப்பவர்களுக்கு அந்தக் கூட்டு ஒத்துவராது.

நன்றாக குடும்பம் நடத்திக் கொண்டிருப்பவர்களுக்கு பிரச்சனை இல்லை. நன்றாக வியாபாரம் நடத்திக் கொண்டிருப்பவர்களுக்கு மாற்றம் வரும். புதிதாக ஒருவர் வந்து அவருக்கு திசை மாறிவிட்டது என்று சொல்வார்களே அதுபோல நடக்கும். அதிகாரத்தைப் பரவலாக்கும் கிரகங்கள் இந்த இரண்டும். சுக்ரனும், இராகுவும் அதிகாரம், மகிழ்ச்சி, இதெல்லாம் ஒரு இடத்தில் முடங்கிக் கிடப்பதைப் பரவலாக்கக் கூடிய கிரகங்கள். அதனால் தான் இந்த கிரகங்களுக்கு அழிக்கும் சக்தியை விட ஆக்கும் சக்தி அதிகம். ஒரு அழிவில்தான் பல ஆக்கங்கள் உருவாகின்றன என்பார்கள். அதுபோலத்தான் இந்த இரண்டுகளும் செய்து கொண்டிருக்கும். ஆனால், நம் நாட்டில் இந்தப் 13 ஆம் எண் குறித்து பலபேர் பெரிய அளவில் அலட்டிக் கொள்வதில்லை.

அதற்காகத்தான், நம் நாட்டில் நாகதோஷம் என்றெல்லாம் பரிகாரம் செய்கிறோம். புற்று மண் இருந்தால் அதனை பாதிப்படைய விடுவதில்லை. அதற்கென்று தனி மரியாதை கொடுப்போம். நாகங்கள் நடமாடும் இடமாகவும் நம்முடைய நாடு இருக்கிறது. காட்டுக்குள் மட்டுமல்லாமல் நாட்டிற்குள் கூட நாகங்கள் நடமாடுகின்றன.

பல இடங்களில் முண்டகக்கன்னி அம்மன், புற்று அம்மன் என்றெல்லாம் வைத்து வழிபடுகிறோம். நாகதேவதையையும் வழிபடுகிறோம். அந்த அதிர்வு, நம்பிக்கை நம்மைப் பாதுகாக்கிறது. பாம்பு நம்மை ஒன்றும் செய்யாது என்ற எண்ணம் நம்மில் பலருக்கு உள்ளது. அதனாலேயே அதற்கு நல்ல பாம்பு என்று பெயரும் வைத்துள்ளோம். இந்து மதத்தவர்கள் பாம்பை தெய்வமாகக் கூட வழிபடும் வழக்கம் இருந்து வருகிறது. இதுபோன்ற சாதகமான எண்ணங்களே நமக்கு அதிகமான பாதிப்புகளை கொடுக்காமல் இருக்கிறது.★

## சொற்சிலம்பம் - போட்டி இல: 463



அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### மேலிருந்து கீழ்

01.கூறுதல்/ சொல்லுதல்.
02.சாப்பிடு
03.காடு
04.காசு/ பணம்.
05.தற்செருக்கு
06.பல விலங்குகளுக்கு உள்ள உறுப்பு.
08.காசு.
10.இரப்பு/ பிச்சை.
12.சூரியன்
14.மூன்று புரம்.
16.படிப்பது இதனை.
18.புணர்வு/ கூடுதல்.
19.இல்லை என்பதைக் குறிக்கும்
20.உருவமற்ற.
21.இடம்/ புரம்/ தலைவன்.

### இடமிருந்து வலம்

01. பழங்காலக் கதை.
05.அளவுக்கு மிஞ்சிய ஆசை.
07.சாரளம்.
08.வெளிச்ச வேளை
09.திருமணம்
11.நகரம்/ ஊர்/ ஒரு பக்கம்
13.உழைத்துப் பெறு
15.அந்தரப்படு
16.ஒரு பாத்திரம் கலம்
17.திறை/ தீர்வை.
18.தாண்டு.
19.எய்தவன் இருக்க இதனை நோவதா?
20.அரற்றுதல்/ புலம்புதல்/ கழுவுதல்
22.சிறிய புள்
23.பொட்டு.

### சொற்சிலம்பம் போட்டி இல. 463

*சொற்சிலம்பம் 463 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் திணம் 2011 ஆண்டு ஏப்ரல் 17 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஆகியன ஏப்ரல் 24 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.*

*முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.*

*அனுப்பவேண்டிய முகவரிகள்:*
**சுடர் ஒளி,**
**85, ஜெயந்த மல்லி மராச்சி மாவத்தை,**
**கொழும்பு-14.**

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### போட்டி இல. 460 இல் பரிசு பெற்றோர்

1 ஆம் பரிசு — **கே.எவ்.சுபானி,** 14, புளியடி குறுக்கு வீதி, ஏறாவூர்-6

2 ஆம் பரிசு — **அ.அங்கயற்கண்ணி,** 7/27 புதிய சோனகத்தெரு, திருகோணமலை.

3 ஆம் பரிசு — **ந.நிரோசன்,** யா/ஆவரங்கால் ராமலிங்க வித்தியாலயம், புத்தூர்.

### சொற்சிலம்பம் போட்டி இல.460 விடைகள்

**மேலிருந்து கீழ்**

01.சங்கதி 02.தகனம் 03.தினம் 04.இன்பம் 05.தலைவிதி 08.வடக்கு 10.தமக்கு 12.சளி 13.உடும்பு 14.பாக்கு 15.பாகம் 16.பன்மை 17.திறல்

**இடமிருந்து வலம்**

01சந்ததி 04.இந்த 06.கனவான் 07.கவனம் 09.பதவி 11.திடம் 12.சம்மதி 13.உளி 14.பாகுபாடு 16.பகுதி 18.கம்பன் 19.குறும்பு 20.மையல்

### பாராட்டுப் பெறுவோர்

(1) **திருமதி.செ.பூமணி,**
15/06 புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம்.

(2) **ச.சுரேந்தினி,**
42, இனிசியர் வீதி, தெகிவளை.

(3) **ச.அன்ரனி,**
புதுக்குளம், கனகராஜன் குளம் தெற்கு, வவுனியா.

(4) **ஜெ.நவபுத்திரன்,**
இல.90- அண்ணாமலை -01,32308, கல்முனை.

(5) **வே.கார்த்திகேசு,**
விபுலானந்தர் வீதி, வாழைச்சேனை.

(6) **அ.தினேஸ்குமார்,**
த.பெ.இல-01, பதியத்தலாவை, அம்பாறை.

(7) **ந.துஷ்யந்தினி,**
வம்மியடி வீதி, நற்பிட்டி முனை, கல்முனை.

(8) **ரா.சூரிதன்,**
குருமனை தென்னிந்திய திருச்சபை, உடுவில்.

(9) **சி.குகராஜா,**
36/35 கண்டி வீதி, சுமேதகம, திருகோணமலை.




**அ.யசோதரா,**
**புதுக்குடியிருப்பு.**

கேள்வி: சீதனம் வாங்காமல் திருமணம் செய்யும் ஆண்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்:பெரும்பாலும் காதல் விடயமாய் இருக்கும். காதலியைப் பொறுத்தவரை தியாகி. பெற்றோருக்குத் துரோகி. மாமன் மாமி உட்பட அயலவர்களின் கணிப்பு ஏமாந்த சோணகிரி.

**ப.புத்திரசிகாமணி,**
**கோப்பாய்.**

கேள்வி:ஏமாற்றும் உரிமை ஆண்களுக்கும், ஏமாறும் உரிமை பெண்களுக்கும் வாய்க்கிறது என்கிறார்களே? உண்மையா?

பதில்:உதெல்லாம் அந்தக் காலத்து வேதாந்தம்.இன்றைய நாட்டு நடப்பு தலைகீழாகவல்லவா இருக்கிறது.

**கா.பா.குலசிங்கம்,**
**அட்டாளைச்சேனை.**

கேள்வி:குடும்பத்தில் அடக்குமுறைகளிலிருந்து விடுபடப் பெண்கள் போராட வேண்டும் என்கிறார்களே?

பதில்:குடும்பத்தில் அடக்கப்படுபவர்கள் தான் அதிலிருந்து விடுபடப் போராட வேண்டும். இந்தக் காலத்தில் பெண்களாவது, அடக்கப்படுவதாவது.

**அருந்ததி,**
**கொழும்பு.**

கேள்வி:அரசியலுக்கும் சினிமாவுக்கும் என்ன ஒற்றுமையுள்ளது பித்தரே.

பதில்:இரண்டிலும் வெற்றிபெற வேண்டுமானால் நன்றாக நடிக்கத் தெரியவேண்டும்.

**அருணாசலம்,**
**கோண்டாவில்.**

கேள்வி:கட்டிய கணவனாலா, நுளம்பாலா அதிக தொல்லை பித்தரே?

பதில்:நுளம்பு முழு இரவும் தொல்லை தரும்.

**ம.வடிவேற்கரசி,**
**ஹட்டன்.**

கேள்வி:திருமணத்தின் போது மணமகளைக் கொண்டு அம்மி மிதிக்க வைப்பதேன் பித்தரே!

பதில்:ஏதோவெல்லாம் கர்ணபரம்பரைக்கதை சொல்கிறார்கள். அதெல்லாம் இந்தக் காலத்துக்குப் பொருந்தாது, தேவைப்பட்டால் கணவனையும் இப்படி மிதிப்பேன், ஏறுக்கு மாறாக நடந்தால் மாமிக்காரிக்கும் இது தான் மருந்து என்பதை நினைவூட்டத்தான் மணமகள் அம்மி மிதித்துக்காட்டி உணர்த்துகிறாள் என்பது என் ஊகம்.

**க.இந்திராணி,**
**பதுளை.**

கேள்வி:பித்தரே, தங்கள் திருமணம் பெற்றோரால் நிச்சயிக்கப்பட்டதா? அல்லது காதல் திருமணமா?

பதில்:நான் யானை ரகமாக்கும் புரியவில்லையா? யானைதான் தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளுமாம்.

**வே.பெரியதம்பி, கிளிநொச்சி.**

கேள்வி:திருமணமாகிக் குழந்தைகள் பெற்ற பெண்கள் கூட 'மினிஸ்கேட்' அணிந்து வெளியில் நடமாடுவது குறித்து என்ன சொல்கிறீர்கள்?

பதில்:என்னத்தைச் சொல்ல? செந்தமிழ் நாட்டுத் தமிழச்சியே, சேலை கட்ட மறந்தனையோ? என்ற பாட்டு வரிகள் தான் ஞாபகத்துக்கு வருகிறது.

**எஸ்.சரண்யா, பருத்தித்துறை.**


கேள்வி:தங்களில் சாமி வந்திருப்பதாகக் கூறி கலை சொல்லி ஏமாற்றுபவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில்:ஏதோ சிக்கலில் இருக்கிறீர் என்று கணக்குப் போட்டு, குழம்பிப் போயிருக்கிற உம்மை மேலும் குழப்பி விடும் ஆ'சாமி'கள் இவர்கள். எச்சரிக்கையாய் இரும்.

**ஆர்.இராஜகோபால்,**
**ஓட்டுமாவடி.**

கேள்வி:எனது வீட்டுக்கு அடுத்த வீட்டில் வசிக்கும் பெண்ணைக் காதலிக்கிறேன். பிறந்த வீட்டுக்கு அருகில் புகுந்த வீடும் இருந்தால் எப்படி?

பதில்:நீர் இனித் தப்பிப் பிழைக்கவே வாய்ப்பில்லை. உமக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.



### இந்த வார ஜோக்.

சிறுவனொருவனை அவனது தந்தை கடுமையாக அடித்துவிட்டார். சிறுவனுக்கு தந்தை மீது தாங்க இயலாத கோபமும் வெறுப்பும். அண்மையிலிருந்த கோயிலுக்குப் போய் கடவுளிடம் அழுதழுது நடந்ததை முறையிட்டான். சிறுவனின் அழுகையைக் கண்டு இரங்கி அவனுக்குக் காட்சி கொடுத்த கடவுள் ' உனக்கு இப்போது என்ன வேண்டும்?'' என்று கேட்டார். ''எனது தந்தை இறக்க வேண்டும்'' என்றான் சிறுவன். கடவுளும் எவ்வளவோ புத்திமதி சொல்லிப் பார்த்தார். சிறுவனோ 'தந்தை இறக்க வேண்டும்' என்பதில் உறுதியாயிருந்தான். கடைசியில் கடவுளும் அப்படியே ஆகட்டும் என வரம் கொடுத்தான்.


திருப்தியுடன் வீட்டுக்கு வந்த சிறுவனுக்குப் பெரும் அதிர்ச்சி. அவனது தகப்பன் வீட்டு வாசலில் சாய்மனைக் கதிரையில் அமர்ந்திருந்தார்.

ஆனால் பக்கத்து வீட்டில் ஒப்பாரிச் சத்தம் கேட்டது.



# சிறுவர் சுடர்

தொகுப்பு -
எஸ்.ஜெயா




அ.மு.இப்றாஸ்
மூதூர், மத்தியகல்லூரி.



நக்சத்ரா
கிங்ஸ்ரன் கல்லூரி, வெள்ளவத்தை.





ர.மனோஜின்.
கொக்குவில் இந்து
ஆரம்பப் பாடசாலை

## நான்கு குருடர்கள்



நான்கு குருடர்கள் ஒரு யானையைப் பார்க்கச் சென்றார்கள். ஒருவன் காலைத் தொட்டு தூணைப்போல் இருக்கிறது என்றான். இரண்டாமவன் துதிச்கையைத் தொட்டு உலக்கையைப் போல் உள்ளது என்றான். மூன்றாமவன் வயிற்றைத் தடவிப் பார்த்து பானைபோல் இருக்கிறது என்றான். நான்காமவன் காதைத் தடவிப் பார்த்து சுளகுபோல இருக்கிறது என்றான்.




இவ்வாறாக நால்வரும் தமக்குள் சச்சரவுப் பட்டுக்கொண்டிருந்தார்கள். அந்த வழியால் சென்ற ஒருவன் அவர்களைப் பார்த்து நீங்கள் அனைவருமே தவறாக அறிந்துகொண்டீர்கள். நீங்கள் பார்த்த அனைத்தும் சேர்ந்ததுதான் யானையின் உருவம் என்று கூறினான். கடவுளின் படைப்பில் குறிப்பிட்ட ஏதோ ஒரு வடிவத்தினை மட்டும் பார்ப்பவர்கள் குருடர்களைப் போல சர்ச்சரவில் ஈடுபடுகிறார்கள். ஆனால் முழுமையைத் தெரிந்து கொண்டால் சர்ச்சரவுக்கு இடமே இல்லை.

## இரண்டு சேவல்கள்



இரண்டு சேவல்கள் தங்களுக்குள் யார் பலசாலி என்பதை அறிய முயற்சித்தன.




சேவல்கள் இரண்டும் தமக்குள் பலமாகச் சண்டையிட்டுக்கொண்டன.



வெற்றிபெற்ற சேவல் தனது வெற்றியை பறைசாற்ற வைக்கோல் போரின் மேல் ஏறி பலமாகக் கூவியது.



அச்சமயத்தில் வானத்தில் பறந்து வந்த கழுகு ஒன்று வைக்கோற் போரில் கொக்கரித்துக் கூவிய சேவலைக் கண்டது.



அச்சேவலை கழுகு பறந்துவந்து தூக்கிச் சென்றது. அதனைக் கண்ட தோற்றுப்போன சேவல் கவலையடைந்தது. கர்வமடைந்தால் அழிவு வரும்.

## தம்பி



சின்னத்தம்பி சிரிக்கிறான்
சேர்ந்து பாடி மகிழ்கிறான்.
சொன்ன சொல்லைக் கேட்கிறான்.
சோம்பல் இன்றிப் படிக்கிறான்
அன்னை தந்தை அன்பிலே
ஆடிப்பாடிக் களிக்கிறான்
என்னைத் தன்னோடிணைத்துமே
இனிய பாடல் படிக்கிறான்.

செ.மகேந்திரன்.

## குறும்புக்காரன் குட்டீஸ்





# கண்முன்னால் அச்சுறுத்திய மரணம்




ஆசியாவின் சுவர்க்கபுரி சிங்கப்பூரின் 'செந்தோசா தீவு' இன்னொரு குட்டிச் சுவர்க்கம். சிங்கப்பூருக்குச் செல்லும் வெளிநாட்டவர்கள் 'செந்தோசா' என்ற அந்தக் குட்டித் தீவைத் தரிசிக்காமல், அங்குள்ள விநோதங்களையும் களியாட்டங்களையும் கண்டு களிக்காமல் நாடு திரும்பமாட்டார்கள். ஏனெனில் அத்தீவு, சுவர்க்கத்துக்குள் ஒரு சுவர்க்கம் போன்றது. சிங்கபூர் துறைமுகக் கடலைத் தாண்டி ஏறத்தாழ ஒரு மைல் தூரத்தில் அந்தக் குட்டித் தீவு அமைந்துள்ளது.

அத்தீவுக்குச் செல்லக் கடல் மார்க்கமாகப் பாதை இருந்தாலும், வானவீதியூடாக 'கேபிள் கார்' எனப்படும் கூண்டு மூலமாகப் போவதையே சகலரும் விரும்புவர். இருகரைகளிலும் மிகப் பிரமாண்டமான தூண்களை எழுப்பி உருக்குக் கம்பிகளை அவற்றோடு இணைத்து மின்சார மூலம் தரையிலிருந்து 185 அடி உயரத்தில் இக் கூண்டு வண்டிகள் கம்பியில் நகரும் விதத்தில் இயக்கப்படும். இக் 'கேபிள் கார்'களில் போவது வித்தியாசமான ஒரு அனுபவமாகும். முழுச் சிங்கப்பூர் தீவையும், அழகான அதன் துறைமுகத்தையும் கண்டு களித்தபடி வானில் ஊர்ந்து செந்தோசாத் தீவை அடைவதையே சகலரும் விரும்புவர். இப்பயண அனுபவம் மனதைப் புல்லரிக்கச் செய்வதாக இருக்கும்.

அது 1983ஆம் ஆண்டு ஜனவரி 29ஆம் திகதி சனிக்கிழமை. நேரம் மாலை 5.50 மணி. செந்தோசாத் தீவில் அதன் களியாட்டங்களில் திளைத்து மகிழ்ந்தவர்கள் சிங்கப்பூர் திரும்பும் நேரம் அது. இந்தியாவைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழுபேர் 'கேபிள் கார்' ஸ்டேசனில் இருந்து ஒரு சிவப்பு நிற கேபிள் காரில் ஏறினார்கள். ஸ்டேசனிலிருந்து 'விர்' என்று 185 அடி உயரத்துக்கு அந்தக் கார் கம்பியின் மேல் உயர்ந்து எழும்பி சிங்கப்பூர் நகரை நோக்கி நகரத் தொடங்கியது. கீழே பளிங்கு நிறக் கடலும் சுற்றிலும் தெரிந்த ரம்மியமான காட்சிகளும் மனதை மயக்குவதாக இருந்தன. மழை வருவதற்கு அறிகுறியாக மேகங்கள் திரள்வது கூட ரம்மியமாக இருந்தது.

இருபத்தைந்து வயதான மாளவிகா அவளது மாமியாரான 60 வயது நிரம்பிய பிருந்தா, அவளது 43 வயது நிரம்பிய மைத்துனி நீனா, 44 வயது நிரம்பிய மைத்துனன் மகேந்திரகாந்த் ஆகியோர் கேபிள் காரில் பயணித்தபடியே சுற்றிவரத் தெரிந்த காட்சிகளை ரசித்தபடி தங்களுக்குள் உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

நீனாவின் எட்டு வயது ராணாவும் மாளவிகாவின் நான்கு வயது நிரம்பிய அரவிந்த் மற்றும் 22 மாதங்களே நிரம்பிய பிரசாந்தும் கீழே தெரிந்த கடலையும் மிதந்து சென்ற படகுகளையும் ரசித்துக் கொண்டிருந்தார்கள்.

திடுதிப்பென்று அவர்கள் சென்ற கேபிள்கார் பயங்கரமாக அசைந்து இடமும் வலமுமாக ஊசலாடத் தொடங்கியது. அதே சமயம் அவர்களுக்கு முன்னே சென்று கொண்டிருந்த ஒரு நீல நிற கேபிள் கார் கம்பியிலிருந்து பிய்த்துக் கொண்டு 185 அடிக்குக் கீழே கடலில் பாய்ந்ததைக் கண்ட மாளவிகா பயத்தால் உறைந்து போனாள். அவர்களுக்குப் பின்னால் வந்த இன்னொரு காரும் கம்பியிலிருந்து பிய்த்துக் கொண்டு கடலில் பாய்ந்தது. அப்படி விழும் போது, காரின் பக்கக் கதவுகள் திறந்து கொண்டதால் உள்ளிருந்தவர்கள் வெளியே வீசியெறியப்பட்டு வானில் சிதறினார்கள்.

அப்போது வலதும் இடதுமாக மிக வேகமாக ஊசலாடிக்கொண்டிருந்த அவர்கள் பயணம் செய்த கேபிள் கார், கேபிள் இணைக்கப்பட்டிருந்த கம்பியில் மேலும் கீழுமாகச் சுழலத் தொடங்கியது. இது முன்னரை விடக் கொடூரமாக இருந்தது. அப்படிச் சுழலும் போது கதவுகள் படீர் படீர் எனத் திறந்து கொண்டன. சிறுவன் ரானாவைப் பிடித்துக் கொண்டிருந்த மகேந்திரகாந்த் கதவு ஓரத்திலிருந்து உள்நோக்கி அவனைத் தள்ளிவிட்டான். இல்லையேல் திறந்த கதவினூடாக ரானா கணப்பொழுதில் கடலில் வீழ்ந்திருப்பான்.

இப்படித் தள்ளிவிட்டபோது கேபிள் காரின் சுழற்சி காரணமாகச் சுதாகரித்துக் கொண்டு எழும்பிய போது, பிருந்தா தனது பேரனைப் பாதுகாப்பாகப் பிடித்துக் கொண்டதை மகேந்திரகாந்த் கண்டான். இவற்றையெல்லாம் கண்ட மாளவிகா சுயநினைவிழந்து அப்படியே மயங்கி விழுந்துவிட்டாள். சுதாகரித்துக் கொண்டு எழும்பிய மகேந்திரகாந்த் காரின் இன்னொரு சுழற்சியில் கால்கள் தடுமாற திறந்திருந்த கதவின் வழியே தலைகுப்புறக் கீழே விழுந்தான். அந்தோ பரிதாபம்! அவனது உடல் கூட இனிக் கிடைப்பது கஷ்டம். சரியான நேரத்திலே ரானாவை உள்நோக்கி அவன் தள்ளாமலிருந்தால் அந்தச் சிறுவனும் பலியாகியிருப்பான். கண்முன்னே இந்தக் கொடூரம் நடப்பதை எப்படித்தான் பிருந்தா சகித்துக் கொண்டாளோ தெரியாது. பிரமை பிடித்தது போல் சிறுவனை இறுக அணைத்துக் கொண்டு ஆதாரத்துக்கு, கையில் அகப்பட்ட எதையோ பிடித்துக் கொண்டிருந்த அவளுக்குத் தாங்கள் எல்லோரும் மரணத்தின் விளிம்புக்கு வந்துவிட்டதான உணர்வு ஏற்பட்டது. இனித் தப்புவது உலக அதிசயமாகத் தான் இருக்கும். எப்படிப்பட்ட கொடூரம்? கணநேரத்திலே என்னவெல்லாம் நடந்து முடிந்துவிட்டது? முன்னால் சென்ற கேபிள் காரிலிருந்த ஏழுபேர் வீசியெறியப்பட்டதைக் கண்ணால் கண்ட அந்தப் பெண் பைத்தியமாகாமல் இருந்தது எப்படி? இப்படிப்பட்ட பயங்கர அனுபவம் வேறு எவருக்காவது ஏற்பட்டிருக்குமா?

பின்னால் வரிசையாக வந்துகொண்டிருந்த பதின்மூன்று கேபிள்கார்களும் அசையாமல் அப்படியே நின்று விட்டன. அதனுள்ளே இருந்தவர்கள் பயத்தினால் உறைந்து போயிருந்தார்கள். இருள் மெல்ல மெல்லக் கவியத் தொடங்கியதோடு, காற்றும் மழையும் தொடங்கிவிடவே என்ன நடக்கின்றது என்றே ஒருகணம் புரியவில்லை. போதாதற்கு மின்சாரமும் துண்டிக்கப்பட்டதால் ஒரே காரிருள்.

அந்தவேளையில் துறைமுகக் கட்டிடத்தொகுதியில் மீட்புப் பணிகளுக்காக அமைக்கப்பட்டிருந்த ஒரு உயர்ந்த கோபுரம் போன்ற கட்டடத்தின் பதின்நான்காவது மாடியிலிருந்த மீட்புப் பணிகளுக்குப் பொறுப்பான இராணுவக் கேர்னல் லீ செங்லூங் இந்த விபத்தை நேரில் அவதானித்துக் கொண்டிருந்தார். என்ன நடந்ததென்பதை துறைமுகக் காவல் அதிகாரிகள் அவருக்கு விளக்கியிருந்தார்கள்.

கடலில் எண்ணெய் அகழ்வுக்காக 223 அடி உயரமான பாரிய உருக்குத் துளை போடும் கருவியைத் தாங்கியிருந்த கப்பலை நடுக்கடலுக்குச் சில படகுகள் (டக்போட் எனக் கூறப்படுபவை) இழுத்து வந்தன. கரையிலிருந்தே இயங்க முடியாத இப்படியான கப்பல்களை நடுக்கடலுக்குப் படகுகள் மூலம் இழுத்து வந்த போது, படகுகளின் இணைப்பிலிருந்து அறுபட்ட கப்பல் திசைமாறி கேபிள் கார்கள் பயணிக்கும் உருக்குக் கம்பியைத் தாக்கிவிட்டது. 223 அடி உயரமான உருக்குத் துளை போடும் கருவி கேபிள் கார் கம்பிகளில் வேகமாகத் தாக்கியதால் தான் இந்த அனர்த்தம் விளைந்தது. அதில் ஒரு கார் பிரதான இணைப்பிலிருந்து விடுபட்டு காரையும் கம்பியையும் இணைத்த ஒன்றரை அங்குல சுற்றளவுள்ள இன்னொரு கம்பியில் தொங்கிக் கொண்டிருந்தது. இதில் தான் மாளவிகாவின் குடும்பம் மாட்டிக் கொண்டிருந்தது. இன்னும் இரண்டு கார்கள் ஏற்கனவே கூறியபடி சுழன்றபடி கடலுக்குள் வீழ்ந்து விட்டன. மற்றைய கார்கள் இயக்கத்தை நிறுத்திய படி ஓரளவு பாதுகாப்பாக இடைநடுவில் சிக்கி நின்றுவிட்டன.

தொங்கிக் கொண்டிருந்த கார் எத்தருணத்தில் இணைப்பு அறுந்து கடலில் விழும் என்று கணிக்க முடியாது. உடனடியாக கிரேன் இணைக்கப்பட்ட ஒரு கப்பலை காருக்கு நேராகக் கொண்டு வந்து ஒரு கூடையில் பயணிகளை ஏறச் செய்து அவர்களைக் காப்பாற்ற முயற்சி எடுக்கப்பட்டது. இதற்குள் காற்றும் மழையும் எட்டுக் கடல் மைல் வேகத்தில் வீசத் தொடங்கியிருந்தன. கிரேன் பொருத்தப்பட்ட கப்பல் காருக்கு நேராகக் கொண்டு வரப்பட்ட போது கிரேனின் உயரத்துக்கும் தொங்கிக் கொண்டிருந்த கேபிள் காரின் உயரத்துக்கும் பெரிய இடைவெளி இருந்ததால் அம்முயற்சி பயனளிக்கவில்லை. ஆகவே உடனடியாக மீட்புப் பணிக்காக ஹெலிகொப்டர்கள் வரவழைக்கப்பட்டன.

அதற்குள் இன்னொரு பயங்கரம் நடந்துவிட்டது. காரின் இன்னொரு சுழற்சியில் தடுமாறிய பிருந்தா பிரசாந்தை எட்டிப்பிடித்தாள். குழந்தையைப் பிடித்த மறுகணம் கதவை நோக்கித் தள்ளப்பட்டு வெளியே வீசப்பட்டாள். அவளும் குழந்தையும் இருளோடு கலந்துவிட்டார்கள்.

பேபி

இவற்றையெல்லாம் கண்டு விறைத்துப் போன நீனா மெதுவாக மயக்க நிலைக்குப் போய்விட்டாள். இவர்களில் நான்கு வயது நிரம்பிய அரவிந்த் மட்டும் ஆச்சரியப்படும் விதத்தில் அமைதியாக இருந்ததோடு மட்டுமல்லாது, மற்றைய குடும்ப அங்கத்தினருக்கும் ஆறுதல் வார்த்தைகள் மழலை மொழியில் சொன்னான். "கடவுள் காப்பாற்றுவார், காப்பாற்றுவார், நம்புங்கள், நம்புங்கள்" என்று திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டிருந்தபோதே அவனிடமிருந்து விம்மல்கள் வெடிக்கத் தொடங்கின. *(வளரும்)*

# பிரபல ஹொலிவூட் நடிகை எலிசபெத் ரெய்லர் மரணம்



நடிப்பில் மட்டுமல்லாது, எட்டு முறை திருமணம் செய்து பரபரப்பை ஏற்படுத்திய ஹொலிவூட்டின் இளவரசி என்று வர்ணிக்கப்படும் நடிகை எலிசபெத் ரெய்லர் மரணம் அடைந்தார். அவருக்கு வயது 79. அமெரிக்க - பிரிட்டிஷ் தம்பதியரான பிரான்சிஸ் லென் ரெய்லருக்கும், சாராவுக்கும் 1932ஆம் ஆண்டு பெப்ரவரி 27ஆம் திகதி மகளாகப் பிறந்தவர் எலிசபெத் ரெய்லர். 1942ஆம் ஆண்டு முதல் தனது நடிப்புப் பயணத்தைத் தொடங்கிய எலிசபெத், 'நஷனல் வெல்வெட்', 'கிளியோபற்றா', 'பட்டர்பீல்ட் 8' உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். 12 வயதில் அவர் நடித்த 'நஷனல் வெல்வெட்' என்ற படம் அவருக்கு மிகப் பெரிய புகழைத் தேடிக்கொடுத்தது. 'கிளியோப்பற்றா'எலிசபெத்தை புகழின் உச்சியில் அமர வைத்தது. ஹொலிவூட்டின் புகழ் பெற்ற கலைஞர்கள் வரிசையில் எலிசபெத்துக்கு தனி இடம் உண்டு. 2 முறை ஒஸ்கார் உட்பட பல விருதுகளை வென்றுள்ளார்.

ஹொலிவூட்டின் இளவரசியாகத் திகழ்ந்த எலிசபெத் எட்டுமுறை திருமணம் செய்து பரபரப்பை ஏற்படுத்தியவர். 1950ஆம் ஆண்டு தன்னுடைய 18வயதில் நிக்கி ஹில்டன் என்பவரை முதல் திருமணம் செய்தார். பின்னர் அவரை விவாகரத்துச் செய்துவிட்டு 1952இல் மைக்கேல் வைல்டிங் என்பவரை 2ஆவது திருமணம் செய்தார். அவருடன் சிலகாலம் வாழ்ந்த எலிசபத், 1957இல் மைக்கல் டாட் என்பவரை 3ஆவது திருமணம் செய்தார். இந்தத் திருமணம் ஓர் ஆண்டு கூட நீடிக்கவில்லை, அவரை விவாகரத்து செய்துவிட்டு 1959ஆம் ஆண்டு எடி பஷர் என்பவரை 4ஆவது திருமணம் செய்தார். பின்னர் அவரையும் விவாகரத்து செய்துவிட்டு, 1964இல் ரிச்செர்டு ப்ரூட்டன் என்பவரை 5ஆவது திருமணம் செய்தார். பின்னர் அவரை விவாகரத்துச் செய்துவிட்டு, சில காலம் தனிமையில் வாழ்ந்த எலிசபெத், மீண்டும் ப்ரூட்டனை 6ஆவது திருமணம் செய்தார். ஆனால் இதுவும் நிலைக்கவில்லை, மீண்டும் அவரை விவாகரத்து செய்துவிட்டு, 1976இல் ஜோன் வோர்னர் என்பவரை 7ஆவது திருமணம் செய்தார். இவரையும் விவாகரத்து செய்துவிட்டு 1991இல் லாரி போர்ட்நெஸ்கி என்பவரை 8ஆவது திருமணம் செய்தார். ஐந்து ஆண்டுகாலம் இவருடன் வாழ்ந்த எலிசபெத் கடைசியில் இவரையும் 1996இல் விவாகரத்து செய்தார். தொடர்ந்து பல வருடங்களாக உடல்நலம் பாதிக்கப்பட்டு வந்த எலிசபெத்துக்கு, கடந்த 2004ஆம் ஆண்டு இதயக் கோளாறு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. 2009இல் அவருக்கு அறுவைச் சிகிச்சையும் செய்யப்பட்டது. இந்நிலையில் சில தினங்களாக அவரது இதயம் பலவீனமாகத் தொடங்கியது. இதனையடுத்து லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள மருத்துவமனையில் தீவிர சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட அவர் 23.03.11 அன்று மரணம் அடைந்தார். எட்டு திருமணம் செய்த எலிசபத்திற்கு 2ஆண், 2பெண் உட்பட நான்கு குழந்தைகளும், 10பேரக்குழந்தைகளும், 4கொள்ளுப் பேரக் குழந்தைகளும் உள்ளனர்.







**Möbel Ferrari**

Wässeristrasse 28
8340 Hinwil
Tel. 044 931 20 40
Fax. 044 931 20 49
info@moebel-ferrari.ch
moebel-ferrari.ch

Öffnungszeiten
Montag bis Freitag
09.00 bis 20.00
Samstag
09.00 bis 18.00

**0.0%** Direkt Finanzierung


இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் ஏண்டர் பிறைசஸ் அச்சகத்தினால் 2011, ஏப்ரல் 3ஆம் திகதி வெளியிடப்பட்டது